
# தடம்

(துறையூர் க.செல்லத்துரை
அவர்களின் பணிகளும் படைப்புகளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# தடம்

(துறையூர் க.செல்லத்துரை அவர்களின் பணிகளும் படைப்புகளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : தடம்
(துறையூர் க.செல்லத்துரை அவர்களின்
பணிகளும் படைப்புகளும்)

தொகுப்பாசிரியர் : கலாபூஷணம் செ.துரையப்பா
04, முதலியார் வீதி, மட்டக்களப்பு. 065 2222547


பதிப்புரிமை : தொகுப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஏப்ரல் 2018

அச்சுப் பதிப்பு : வணசிங்கா பிரிண்டர்ஸ்.
496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065 2227170, 065 3650361



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய், குடும்பத்தின் வழி
காட்டியாய் நாம் வாழும் வாழ்க்கைக்கு ஆதாரமாய் நின்று
வழி வகுத்துக் கொடுத்த எமது அன்புத் தந்தை
**அமரர். கதிரேசன் செல்லத்துரை**
அவர்கள் மற்றும் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாய்
உயர்விலும் தாழ்விலும் உறுதுணையாய் நின்றதுடன் எமது
வாழ்வு உயர உரம் இட்ட எமது பாசமிகு தாயார்
**அமரர். தங்கநாயகம் செல்லத்துரை**
அவர்கள் இருவரது பாதங்களிலும் இந்நூலைக்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*- குடும்பத்தினர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

கிழக்கிலங்கை பல ஆளுமைகளை ஈன்றிருக்கிறது. அமரத்துவம் அடைந்துவிட்ட அத்தகைய பல ஆளுமைகளின் வாழ்வும் பணிகளும் வையத்துள் வாழ்வாங்கு வாழ முனைவோருக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. முன் உதாரணமாக வைத்துப் பேசப் பெறக்கூடிய அவ்வாறான ஆளுமைகளுள் இலக்கிய உலகில் 'துறையூர் செல்லத்துரை" எனத் தடம் பதித்த அமரர் கதிரேசன் செல்லத்துரை அவர்கள் முன்வரிசையில் வைக்கப்பெறும் தகுதியை உடையவர். கல்விப் பணி - கலை இலக்கியப்பணி - சமூகப்பணி - ஆன்மீகப்பணி என அவரது பணிகள் பல்பரிமாணம் கொண்டவை.

மட்டக்களப்பு மாநிலத்தின் தெற்கே ஒரு மூலைக்கிராமமான துறைநீலாவணையிலே பிறந்து ஊரின்மீது கொண்ட வாஞ்சை காரணமாகத் 'துறையூர் செல்லத்துரை' என்று புனைபெயர் சூடிய அமரர் அவர்கள் ஆசிரியப்பணி புரிந்ததுடன் ஒரு நல்லாசிரியையான துறைநீலாவணையையே சேர்ந்த தங்கநாயகம் என்பவரை வாழ்க்கைத் துணையாக்கி இல்லறம் துய்த்து ஆண்கள் மூவர் பெண்கள் மூவர் என ஆறு நன்மக்கட் பேறினைப் பெற்ற பெருமைக்குரியவர். அத்தகைய பெருமைக்குரிய தங்கள் தந்தையின் வாழ்வையும் பணிகளையும் பதிவுகளாக்கும் வகையில் இந்நூலை அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் வெளியிட விழைந்தமை ஒரு முன்மாதிரியான செயற்பாடாகும். இன்றைய தமிழ்ச் சூழலில் இவ்வகையான பதிவுகளும் ஆவணப்படுத்தல்களும் அவசியமானவையும் கூட. இதன் சமூகப் பயன்பாடு அளப்பெரியதாகும். வாசகர்கள் இந்நூலை வாசித்துப் பயன்பெறுவார்களாக.

**- செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் -**

607, பார்வீதி, மட்டக்களப்பு.

தொ.இல : 077 1900614



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழவைக்கும் முயற்சி

துறையூர் செல்லத்துரை என எழுத்துலகில் அறியப்பட்ட பெரியவர் செல்லத்துரையின் "பாச்சரம்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா 2005 ஆண்டு நடைபெற்றது. அதற்கு என்னை அவர் விருந்தினராக அழைத்திருந்தார்.

நிறைந்த சனக்கூட்டம் ஊரவர்களும் மாணவர்களும் உணர்ச்சி பொங்க உரையாற்றினர். ஊரிலே அவருக்கிருந்த உள்ளார்ந்த மதிப்பை நேரிலே கண்டேன்.

இந்த மதிப்பைப் பெறுமளவு அவர் ஊரில் பணியாற்றி இருந்தார். வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்த இவர் தன் கல்வியால் முன்னேறி தன்னைப் போல வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த இளம் தலைமுறையை தன்னைப் போல் உயர்த்திட்டமையே இந்த மதிப்பிற்கான காரணம் எனப் பின்னால் தெரிந்து கொண்டேன். அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும்படி நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன். அது விழிப்படைந்த ஒரு கிராமத்தின் ஒரு காலக் கதையாக இருக்கும் என எண்ணியே அவ்வேண்டுகோளை விடுத்தேன்.

இரண்டு ஆண்டுகளிலேயே தன் வாழ்வு அனுபவங்களைச் சுருக்கமாக எழுதி முடித்து என் முன்னுரை வேண்டி என்னிடம் வந்தார் பெரியவர் செல்லத்துரை. படித்துப் பார்த்தேன். சுவையான வாழ்க்கை வரலாறு. தானும் உயர்ந்து மற்றவரையும் உயர்த்திய ஒரு பெருமகனின் வரலாறு.

வசதிகள் அற்ற ஒரு குக்கிராமத்தில் வசதிகளற்ற ஒரு குடும்பத்தில் பிறந்த சாதாரண ஒரு பையன் இலவசக்கல்வி காரணமாக புதிய உலகுக்குள் புகுந்து அதன் மூலம் தன்னை வளர்த்து தன் கிராமம் வளர உதவியதும் மாத்திரமன்றி தனது முதிர்வயதில் கடல் கடந்து நவீன உலகுகளைக் காண்பதும், வியப்பதும், அறிவு பெறுவதும் என ஒரு தொடர்கதை போல அது இருந்தது.

ஒரு நீண்ட முன்னுரை அதற்கு நான் எழுதினேன். அதன் பின்னர் அவருடனான எனது தொடர்பும் இறுகியது. அவர் பற்றிப் பூரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியலானேன். கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு மாத்திரமன்றி சுகாதாரம் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள், கிராசபை, வீதி புனருத்தாரணம் என அரசியல்வாதியாக அல்லாமல் மக்கள் சேவகனாக நின்று மக்கள் பணியாற்றியவர் அவர். 2017 இல் அவர் காலமானார்.

அவரது மைத்துனரே யோகாசனநிபுணரும் கலைஞருமான கலாபூக்ஷணம் செல்லையா துரையப்பா. அண்மையில் அவர் என்னிடம் வந்து பெரியவர் செல்லத்துரையின் ஆக்கங்களைத் தொகுத்து வெளியிட்டு அவரை நினைவு கூரவிருப்பதாகத் தெரிவித்தார்.

அது ஓர் மிகுந்த நல்முயற்சியாக எனக்குப் பட்டது. நீத்தார் பெருமை நினைவு கூரல் இருப்போர் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வழிகாட்டும்.

உடல்கள் அழிந்து விடுவது இயற்கை. ஆனால் நினைவுகள் அழியாது. அவை இன்னொருவருக்குக் கடத்தப்பட்டுச் சில காலம் வாழும். எனினும் அதுவும் அழியும். அதுவும் இயற்கையே. ஆனால் நினைவுகள் எழுத்துருப்பெறுகையில் அவை நிரந்தரமாக வாழும்.

சங்கப் புலவர்கள் இறந்தனர்; அவர்கள் நினைவுகள் தொடர்ந்தன. அந்த நினைவுகள் எழுத்துருப் பெற்றமையால் 2000 வருடம் கழிந்தும் இன்றும் அவை வாழ்கின்றன. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும். எச்சம் என்பது அவர்கள் விட்டுச் செல்லும் செயல்களே. செயல்களை எழுத்துருப் பெற வைப்பது அவரைத் தொடர்ந்து வாழ வைக்கும் முயற்சி. பெரியவர் செல்லத்துரை தம் எழுத்துக்களால் என்றும் தொடர்ந்து வாழ்வார். இவ் அரியபணியில் ஈடுபடும் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

- பேராசிரியர். சி.மௌனகுரு -

19.03.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் தென் பகுதியில் அமைந்துள்ள துறைநீலாவணை எனும் ஊரில் 1933.10.20ல் பிறந்தார். கற்பதில் உள்ள நாட்டம் காரணமாக புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து கல்வி பயின்று ஆங்கில ஆசிரியராகக் கடமையேற்று, பின்னர் தமிழின் மீது உள்ள நாட்டம் காரணமாகத் தமிழில் ஆசிரிய பயிற்சி முடித்து ஆசிரியராகவும் அதிபராகவும் ஏறக்குறைய 40 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

எமது அப்பா தான் பிறந்த ஊரில் மிகவும் பற்றுக் கொண்டவர், துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் அவர் பல வருடங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஊரின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பெரிய பங்கு அளித்துள்ளார். இறக்கும் வரை கல்விக்கான உதவிகள் தன்னால் முடிந்தவரை செய்து கொண்டேயிருந்தார்.

ஒரு சமூக சேவையாளராகவும் ஊரின் அபிவிருத்தியில் கிராமோதய தலைவராக இருந்த காலங்களில் இருந்து பல வழிகளில் தொண்டாற்றியுள்ளார். அது மட்டுமன்றி எமது தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத் தலைவராகக் கடமையாற்றிச் சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக திருவெம்பாவை ஊர்வலம் வருதல், பஜனை, பூசைகள் போன்றவற்றுக்கு அவர் ஆற்றிய பங்கு எமக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றது. தான் பிறந்த ஊரில் தமது கடைசிக் காலத்தைக் கழிக்க முடிந்தது அவருக்கு மனநிறைவைக் கொடுத்தது. அதுவே அவருடைய விருப்பமாக இருந்தது.

தமிழின் மீது அவருக்கு தீராக் காதல், சிறுவயது முதல் எழுதுவதில் ஆற்றல் மிகுந்தவராக இருந்தார். அவருடைய ஆக்கங்கள் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. நாமறிந்து அவர் வீணாக நேரத்தைச் செலவிட்டதேயில்லை, ஏதாவது எழுதுவது, வாசிப்பதுமாகவே இருப்பார், காலத்தின் தேவைக்கேற்ப நவீன தொடர்புசாதனங்களுடன் தன்னைப் பழக்கப்படுத்தி எல்லோருடனும் தொடர்பில் இருப்பார், பல நண்பர்களைச் சம்பாதித்து இருந்தார், எப்போதும் ஒரு தேடல் அவரிடம் இருந்து கொண்டே இருக்கும், இறக்கும்வரை அவருடைய ஞாபகசக்தியும் மதிநுட்பமும் எள்ளளவும் குறைந்ததேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் எழுத்துக்கள் "பாச்சரம்" "காலச்சுவடு" புத்தக வடிவில் வெளிவந்துள்ளன. ஆயினும் பிரசுரிக்கப்படாத பல ஆக்கங்கள் பல இருந்ததன் காரணமாக அவையாவற்றையும் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடுவது பொருத்தமானது என நினைத்தோம்.

எங்களின் பாசமிகு தந்தை, ஆசான், நண்பன் மற்றும் அனைத்து உறவுமாக இருந்து எம்மை வழிநடத்திச் சென்ற எமது குலவிளக்கு அணைந்து ஓராண்டு சூடும் இந்தருணத்தில் அவருடைய ஆக்கங்களை உள்ளடக்கியதான இப்புத்தகத்தை வெளியிடுவதில் நாம் மனநிறைவு காண்கின்றோம்.

பார்போற்றும் பண்பாளனாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
நேர்மைகொண்ட தலைவனாய்
சீர்பெற்று வாழ்ந்த எம் தந்தை
வானுலகு சென்று வருடம் ஒன்று ஆனாலும்
வலிக்கின்றது நெஞ்சம் இன்னும்
வாட்டுகின்றது நினைவு நாளும்!

ஆலமரமாய் நின்று
அணைத்துக் காத்த நீங்கள்
வேரறுத்த மரமாய்
வீழ்ந்து ஒழிந்து விட்டாலும்
துளிர்த்து எழும் வேர்கள் மீண்டும்!
தொடரும் தாம் செய்த சேவை என்றும்!

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துலகிலும் சமூகப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திய மூத்த எழுத்தாளர்

# அமரர் கவிஞர் துறையூர் செல்லத்துரை

**- கலாபூஷணம் செல்லையா துரையப்பா -**

மட்டக்களப்பு மண்ணின் மூத்த எழுத்தாளர்களுள் அமரர் கவிஞர் துறையூர் செல்லத்துரையும் ஒருவராவார். இவர் தனது கிராமத்தின் மீது கொண்ட அபார அபிமானம் காரணமாகத் துறைநீலாவணை என்ற தம் கிராமத்தின் பெயரைத் "துறையூர்" எனச் சுருக்கித் தனது பெயருடன் சேர்த்துத் "துறையூர் செல்லத்துரை" என 1955இல் எழுத்துலகில் பிரவேசித்தார்.

மட்டக்களப்பின் தென் அந்தமான இக்கிராமத்தில் கந்தப்பர் கதிரேசன், கணபதியார் தங்கம்மா என்பவர்களுக்கு இரண்டாம் பிள்ளையாக 20.10.1933இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மட்/துறைநீலாவணை மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும், பின்னர் மட்/துறைநீலாவணை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் (தற்போது மட்/துறைநீலாவணை மகாவித்தியாலயம்) பெற்றார். இப்பாடசாலையில் முதன் முதல் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் சித்தியடைந்த இருவரில் இவரும் ஒருவர் என்ற பெருமையைக் கொண்டவராவார். மட்/காத்தான்குடி மத்திய கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்று 1952ம் ஆண்டு விசேட சித்திகளுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப்பரீட்சையில் தேறினார். மூத்த எழுத்தாளர் அமரர் இரா. நாகலிங்கம் (அன்பு மணி), கணக்காளர் ஆறுமுகம், முன்னாள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தலைவர் அமரர் பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம் ஆகியோர் இவருடன் கற்ற சக மாணவர்களாவர். அன்புமுகைதீன், பசில்காரியப்பர் போன்ற பிரபல்யமான கவிஞர்களும் இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களாவர்

இவர் 1954ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றுச் சிலகாலம் சேவை ஆற்றிப் பின்னர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து ஒன்றரை ஆண்டுகள் மட்டக்களப்பிலும் அரையாண்டு யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து பயிற்சி பெற்றார். அக்காலத்திலிருந்தே எழுத்துப் பணியில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். 1955ஆம் ஆண்டு **"சூடு மிதித்தல் கிராமியக் கவிதைகள்"** என்ற தலைப்பில் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை மூலம் எழுத்துலகப் பிரவேசம் செய்தார். இதே கவிதையை இலங்கை வானொலி நேரடி ஒலிபரப்புச் செய்தது. அதன் பின்னர் பல கவிதைகளையும், கட்டுரைகளையும் வீரகேசரி, சுதந்திரன், தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் "விவேகி", "ஞானம்" போன்ற சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதினார். ஆசிரிய பயிற்சியின் பின்னர் 01.01.2957ல் கண்டி, தொளஸ்பாகை (நாவலப்பிட்டி) என்ற இடத்தில் அமைந்த அ.இ.த.க. பாடசாலையில் நியமனம் பெற்றார். மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்ட அம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். மலையக மாணவர்களின் திறமை, அர்ப்பணிப்பு, பணிவு, பண்பு ஆகியன இவரை மிகவும் கவர்ந்தது. 1960 ஆம் ஆண்டில் இவரது முயற்சியால் பாடசாலையில் முதன்முதல் நடாத்தப்பட்ட மலைநாடு காணாத கலைவிழா பலரது பாராட்டையும் பெற்றது. 1961ஆம் ஆண்டு இப் பாடசலையிலிருந்து மாற்றம் பெற்று வந்த பின்னரும் பல மாணவர்கள் நீண்டகாலம் இவருடன் தொடர்பு வைத்திருந்தனர். இவர்களுள் பலர் தற்போது உயர் நிலையில் உள்ளனர்.

சொந்தக் கிராமத்திற்கு மாற்றம் பெற்று வந்த பின்னர் இக்கிராமத்து மக்களின் கல்வி, சுகாதாரம், சமயம், சமூக சேவைகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். அவருடைய காலத்திலேயே அவர் கல்விகற்ற அப்பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இன்று இது பல மாணவர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதற்கு இவரது முயற்சியும் ஒரு காரணமாகும்.

இதே பாடசாலையில் தொடர்ந்து 28 வருடங்களாக உதவி ஆசிரியராகவும், 1985முதல் 1990 வரையான காலப்பகுதியில் அதிபராகவும் அருஞ்சேவையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியே இப்பாடசாலையின் பொற்காலமாகும். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் கல்விமான்களாகவும், கணக்காளர்களாகவும், எந்திரிகளாகவும், மருத்துவர்களாகவும், சட்டத்தரணிகளாகவும் உயர்பதவி புரிந்தனர். புரிந்து கொண்டிருக்கின்றனர். ஏன், மகாண அரசாங்க அதிபராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளர்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் அமர்த்தப் பட்டனர்.

அமரர் கவிஞர் நீலாவணன், கவிஞர் சடாட்சரன், காலஞ் சென்ற எழுத்தாளர் மருதூர்க்கொத்தன், கவிஞர் ஜீவா ஜீவரெத்தினம் போன்றோருடன் கல்முனை எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தவராக இருந்து அரும் பணியாற்றினார். பின்னர் அச்சங்கத்திலிருந்து பிரிந்து சென்று ஜீவா ஜீவரெத்தினத்துடன் இணைந்து "துறைநீலாவணை இலக்கியப் பேரவை" என்ற அமைப்பை ஏற்படுத்தி இவர் தலைவராகவும், ஜீவா ஜீவரெத்தினம் கௌரவ செயலாளராகவும் செயற்பட்டனர். இக்காலத்திலேயே இக்கிராமத்தில் பல கவிஞர்களும், எழுத்தாளர்களும், தோன்றினார். துறையூர் தியாகன், நாதி, துறையூர் காந்தன், துறையூர் கனகசபை போன்றோர் இவர்களுள் சிலராகும். இவர்கள் அகில இலங்கை ரீதியான கவிதைப்போட்டியொன்றை நடாத்தித் தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற பதக்கங்களையும், சான்றிதழ்களையும், வழங்கிக் கவிஞர்களை ஊக்குவித்தனார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் இலக்கியப் பேரவையின் பிரமாண்டமான விசேட அமர்வில் கவிதைப்போட்டியில் வெற்றியீட்டிய பின் வருவோருக்குப் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும்.

- ❖ முதலாம் பரிசு - அமரர். "இராஜபாரதி
  (வி.கி. இராசதுரை)
  குறுமண்வெளி மட்டக்களப்பு.
- ❖ இரண்டாம் பரிசு - கவிஞர் முல்லைமணி சுப்பிரமணியம்
  முல்லைத்தீவு
- ❖ மூன்றாம் பரிசு - அமரர் கவிஞர் மு. செல்லத்துரை
  அல்வாய், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

இதன்மூலம் பல கலைஞர்களுடனும், கவிஞர்களுடனும் இவர் தொடர்பு பட்டிருந்தமை புலனாகிறது. 1970 முதல் 2004ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் எழுத்துத் துறையிலிருந்து ஒதுங்கி இருந்தார். பின்னார் 2005ஆம் ஆண்டளவில் மீண்டும் எழுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைக்குள் பிரவேசம் செய்தார். 1978ஆம் ஆண்டு சூறாவளி, உள்நாட்டுப் பிரச்சினை காரணமான இடப் பெயர்வுகளுடன் இவரது ஆக்கங்களின் பெரும் பகுதி அழிந்தொழிந்து போக எஞ்சியவைகளைச் சேகரித்துப் "பாச்சரம்" என்ற முதல் கவிதை நூலை எழுதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியீடு செய்து வைத்தார். நூல் அறிமுக விழாவைப் பிறந்த கிராமத்தில் நடத்தினார்.

தான் பிறந்த கிராமத்து மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு, கலை, கலாசாரம், சமய பண்பாடுகள் போன்ற பல விடயங்களைத் தொகுத்துக் **"காலச் சுவடுகள்"** என்ற நூலை இரண்டாவது நூலாக வெளியிட்டார். இந்நூல் தென் இந்திய வெளியீட்டாளரான ரவி தமிழ்வாணன் அவர்களால் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2008ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்தருணத்தில் அந்நூலின் மீது உரையாற்றிய தென் இந்தியப் பேராசிரியரான பெரியார்தாசன் இந்நூலை மிகவும் சிலாகித்துப் பேசியதோடு பெற்றோர் தம் பிள்ளை களுக்கு இந்நூலை வாங்கிக் கொடுத்து கிராமிய வாழ்க்கை பற்றி அவர்கள் அறிய உதவி செய்யவேண்டும் படி கேட்டுக்கொண்டார். நூலுருவில் வெளிவராத பல கட்டுரைகள், கவிதைகள் இருப்பில் கிடந்தன.

### சமூக சேவைகள்

சொந்த ஊர் என்ற படியால் கற்பித்தலோடு நின்று விடாது ஊர் சார்ந்த பல சமய, சமூக, சுகாதார, இலக்கிய, கமச் செய்கை, கூட்டுறவு சார்ந்த பல அபிவிருத்திகளில் மிகுந்த ஊக்கம் காட்டினார். அவற்றுள் சில பின்வருமாறு:-

1. **சுகாதார நலன்புரிச் சங்கம் :** தனது கிராமத்தின் மருத்துவக் குறைபாடுகளை இச் சங்கம் மூலம் நிவர்த்தி செய்தார். குறிப்பாக மருத்துவமாது நியமனம், திரிபோசா போன்ற சத்துணவு வழங்கப்பட்டமை, குழந்தை மற்றும் பெரியோர் மலசல கூடங்களை அமைக்க உதவியமை.

2. **கூட்டுறவுச் சங்கம் :** அவர் வாழ்ந்த பிரதேசத்திலிருந்து சாரதா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊழல் நிறைந்ததாக இருந்ததைக் கண்டு இவரும் திரு. ஆறுமுகம் ஆசிரியரும் முறையே தலைவர், செயலாளராக இருந்து சேவையாற்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **கிராமமுன்னேற்றச் சங்கம்** : சங்கத்தின் செயலாளராக இருந்து திரு. சரவணமுத்து அதிபருடன் இணைந்து பல வீதிகளை சிரமதான அடிப்படையில் அமைத்தமை.

4. **இந்து சமய வளர்ச்சிச் சபை** : சபையை நிறுவிக் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆராதனை, மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டிகள் நடத்தியமை. நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசைகள், கூட்டுப்பிரார்த்தனைகள் நடத்தியமை.

5. **கிராமோதய சபை** : மூன்று தடவைகள் கிராமோதய சபையின் தலைவராக இருந்து கிராமத்திற்குச் சேவை செய்தமை :-

   I. சுகாதார நிலையம் அமைந்திருக்கும் காணியை உரியவரிடமிருந்து பணம் கொடுத்து வாங்கி அரசாங்கத்துக்கு ஒப்படைத்தமை.

   II. 8 ஆம் வட்டாரத்தில் கிராமமுன்னேற்ற சங்கம் அமைந்திருக்கும் காணியை உரியவரிடமிருந்து பெற்று பிரதேச சபைக்கு ஒப்படைத்தமை.

6. **இணக்க சபை** : கல்முனை பொலிசாரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இணக்க சபையின் தலைவராக இருந்து நீண்ட காலமும், அதிக பணமும் செலவிட வேண்டிய பல வழக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வைத்தமை.

7. **இலக்கியப் பேரவை** : இச்சபை மூலம் ஊர் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

8. **கல்லாறு - துறைநீலாவணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்** : இச் சங்கத்தின் உபதலைவராகவும், தலைவராகவும் இருந்து சங்க வளர்ச்சிக்கு ஆவன செய்தார். புடவை வியாபாரம் மற்றும் மரத் தளபாட விற்பனை இக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. மேலும், சங்கம் சார்பாக ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டமை.

9. துறைநீலாவணை, கரையாவெளிக் கமநல அமைப்பை (தற்போது துறைநீலாவணை கமநல அமைப்பு) உருவாக்கி அதன் தலைவராக இருந்து பல நன்மைகளைப் பெற வழிவகுத்தமை. நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவித்தமை. இவ் அமைப்பைக் களுவாஞ்சிக்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநல கேந்திர நிலையத்துடன் இணைத்து அதன் இயக்குநர் சபை உறுப்பினர்களில் ஒருவாராக இருந்து செயற்பட்டமை.

10. நிதியுதவி அளித்தமை : கிராமத்தின் ஆலயங்களுக்குத் தன்னால் இயன்ற அளவு நிதி, பொருள் உதவிகளை வாரி வழங்கியமை.

I. தில்லையம்பலப்பிள்ளையார் கோயில்

(அ) தனது மகள் திருமதி. கிருஸ்ணவேணி மதிவாணன் (லண்டன்) மூலம் பெற்ற பணத்தைக் கொண்டு கோயில் முன் மதில் மற்றும் வாயிற் கதவு அமைத்தமை.

(ஆ) வயிரவர் கோயில் அமைத்தமை.

II. மாரியம்மன் கோயில் : முன் மண்டபத்திற்குப் பின்னால் உள்ள பெரிய மண்டபத்தை அமைத்துக் கொடுத்தமை.

III. சின்னப்பிள்ளையார் கோயில் : ரூபாய் ஐம்பதாயிரம் நிதி உதவி அளித்தமை.

IV. கண்ணகி அம்மன் கோயில் : பல தடவைகளில் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் நிதி உதவி அளித்தமை. தான் நிதியுதவி கோயில்களுக்கு அளித்ததோடு நிற்காமல் வெளிநாடுகள், உள்நாட்டில் இருக்கும் உறவினர்களையும், நண்பர்களையும் நிதி உதவி வழங்க ஊக்கப்படுத்தியமை.

11. வறிய மாணவர்கள், அனாதைகள் போன்ற கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளை கல்வியைத் தொடர ஊக்கப் படுத்தியமை.

I. அனாதை மாணவர்களை கல்லடி சிவானந்தா மட்டக்களப்பு அனாதை இல்லம், மாணவிகளை மட்டக்களப்பு மங்கயர்க்கரசி அனாதை இல்லம் போன்றவற்றில் சேர்ப்பித்துக் கல்வியைத் தொடர வழி வகுத்தார். அப்படிச் சேர்ப்பிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பல்கலைக்கழகப் பிரவேசம் செய்து தற்போது உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

II. பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெற்றும் அங்கு கல்வியைத் தொடர முடியாத வறுமை மாணவர்களுக்கு மாதாந்தம் நிதியுதவி வழங்கி பட்டப்படிப்பைத் தொடர வழி வகுத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. வறுமை காரணமாகப் பாடசாலைக்கு வராத மாணவர்களின் மற்றும் இடை விலகிய மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று தேடிப் பிடித்துப் பாடசாலைக்குக் கொண்டு வந்தமை.

IV. வசதி குறைந்த மாணவர் பலருக்குப் பிரத்தியேக வகுப்புக் கட்டணம் செலுத்தக் குறிப்பிட்ட தொகையை இறக்கும் வரை தொடர்ந்து வழங்கிக்கொண்டிருந்தமை. அத்தோடு நிற்காமல் அவ்வப்போது மாணவர்களும் ஏனையோரும் அவரிடம் நிதியுதவி கேட்கும் போது அவர்களின் தேவையறிந்து தொடர்ந்து உதவி புரிந்தமை.

**இலக்கியச் செயற்பாடுகள்**

இலக்கியச் செயற்பாடுகளைத் தாராள மனதுடன் ஆதரித்துப் பல சஞ்சிகைகளுக்குப் பண உதவி செய்து ஊக்குவித்தமை. இக்கிராமத்தின் கல்வி உயர்நிலை கண்டு பலர் இவரைப் போற்றிய தோடு "துறைநீலாவணையின் கல்வித் தந்தை" எனப் பாராட்டினர். இவர் கவிதைத் துறைக்கு ஆற்றிய சேவையைப்பராட்டிப் பல தடவைகள் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையால் நடத்தப்பட்ட கலாசார விழாக்களில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கவிஞராக, எழுத்தாளனாக, சமூக சேவையாளனாகப் பல பரிமாண ங்களில் சேவையாற்றிய அன்னாரின் திறமை மட்டக்களப்பு மேல் நீதி மன்றத்தில் யூரி சேவை புரியும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஒரு சாதாரண வறுமையான குடும்பத்தில் பிறந்து கல்விமூலம் உயர் நிலை அடைந்தமை ஏனையோருக்கு முன்மாதிரியாக அமைந்தி ருந்தது. இதனால் பல கிராம மாணவர்கள் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி முன்னிலை அடைந்தனார்.

1960ஆம் ஆண்டு துறைநீலாவணையைச் சேர்ந்த தங்கநாயகம் என்ற ஆசிரியைக் கரம்பிடித்து இல்லற வாழ்வில் இணைந்து மூன்று ஆண்களும் மூன்று பெண்களுமாக ஆறு நல்மக்களையும் பெற்றெடுத்தார். இவர்கள் அனைவரும் எந்திரியாகவும், மருத்துவ நிபுணர்களாகவும், கணக்காளராகவும் லண்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உயர்நிலையில் இருக்கின்றனர். இதனால், அமரர் பல தடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். தமது வெளிநாட்டுப் பயண அனுபவங்களைக் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் எழுதினார்.

உள்நாட்டு யுத்தம் காரணமாகக் கொழும்புக்கு இடம் பெயர்ந்து வெள்ளவத்தையில் வசித்தனர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தியதால் பல கல்விமான்கள், கவிஞர்கள், இலக்கிய வாதிகளின் நட்பு கிடைக்கப்பெற்றார். தனது வலது கைபோலிருந்த ஆருயிர் மணைவி 51 ஆண்டு மண வாழ்க்கையை முடித்துக் கொண்டு 17.08.2010 அன்று இறையடி சேர்ந்தபின் தனிமையில் வாழ்ந்தார். வெளி நாட்டில் தமது பிள்ளைகளுடன் ஆடம்பர வாழ்க்கை வாழும் வசதி இருந்தும், "சொர்க்கமே என்றாலும் எங்கள் ஊர் போலாகுமா" எனப் பிறந்த கிராமமான துறைநீலாவணைக்கு வந்து தனிமையில் வசித்தார். தம் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். 84 வருட வயோதிப வயதிலும் இளைஞனைப் போல் ஆரோக்கியத்துடன் செயற்பட்டார். நீண்டகாலத் தனிமை வாழ்க்கையின் கொடுமையைத் தாங்க முடியாமல் தமது இறுதி வாழ்க்கையை இலண்டனில் உள்ள தமது மகள்மாருடன் கழிக்க விரும்பினார். பல தடவைகள் முயற்சித்தும் கை கூடாமை அவருக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்திருந்தது.

ஒரு முட்டையை இட்டு விட்டுக் கொக்கரிக்கும் கோழியைப் போலல்லாது பல சாதனைகளைப் புரிந்து விட்டுப் பல முட்டைகளை இட்ட ஆமையைப்போன்று ஆரவாரமின்றி அமைதியாக இருந்தார். இவர் அரச விருதுகள், கௌரவங்களைக் கேட்டுப் பெற விரும்பவில்லை. இதனால் அரச கலாபூசணம், முதலமைச்சர், வித்தகர் விருதுகள் மற்றும் சமாதான நீதவான் போன்றவற்றைக் கேட்டுப் பெறவில்லை.

திடீரென நோய்வாய்ப்பட்டு கல்முனை வடக்கு ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். நீண்டகாலம் கட்டிலில் கிடந்து அவஸ்தைப் படாமலும் பிறருக்கும் தொல்லை கொடுக்காமலும் இரண்டு நாட்களுள் இறைபதம் அடைந்தார்.

விருட்சமாகிப் பூரணத்துவமான வாழ்க்கை வாழ்ந்து ஜோதியாக 04.05.2017இல் மறைந்தே போனாலும் சரித்திரமாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் படைப்புகள்

## 1 பாலர் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

மாங்காய் வடிவமுள்ள தீவு - உலக
மாட்சிமையைப் பெற்றதொரு நாடு,
பாங்காய் இயற்கை எழில் கொழிக்கும் - எங்கள்
பண்டையோர் வாழ்ந்திருந்த நாடு.

பாக்குக் கடல் வடக்கில் தோன்றும் - கிழக்கில்
பார்க்கலாம் வங்கவிரிகடலை,
நோக்கினால் தெற்கோடு மேற்கில் - ஒரு
நீண்ட சமுத்திரத்தைக் காண்பாய்.

இறப்பரோடு தேயிலைத் தோட்டம் - நன்கு
செழித்து விளங்கி நிற்கும் மலையில்,
சிறந்த மரஇனங்கள் மலிந்த - கானில்
சிறுத்தை கரடியினம் வாழும்

பார்க்கும் திசையனைத்தும் கழனி - உயர்ந்த
பனையென்னும் கற்பகத்தருக்கள்
சீர்மிக்க வள்ளல்கள் அன்ன - நல்ல
தென்னை மரச்சோலை சூழ்நாடு

உரிமையோடு பல்சமய மக்கள் - சேர்ந்து
ஒற்றுமையோடிருந்தாரென்று
சரித்திரம் கூறுமொரு சான்று - எவர்க்கும்
சாந்தமளிக்கும் நல்ல மருந்தாம்.

31.01.1960 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்

வானத்தைப் பார்த்திடடி பாப்பா - அங்கு
வர்ணம் ஏழுதோன்றுதடி பாப்பா,
கானத்தைச் சுட்டெரித்த வீரன் - அந்தக்
காண்டீபன் வில்போல பாப்பா

காலையில் மேற்கினிலே பாப்பா - இதைக்
காணலாம் எல்லோரும் பாப்பா,
மாலையிலே கிழக்கில் பாப்பா - கண்டு
மனமகிழ்ச்சி கொண்டிடலாம் பாப்பா

நீர்மேல் குமிழியெனப் பாப்பா - இது
நிலைத்திருக்க மாட்டாது பாப்பா,
கார்மேகம் சூழமுதல் பாப்பா - தானே
கலைந்து மறைந்து விடும் பாப்பா

காற்று மழை பலவும் பாப்பா - இதனால்
கணக்கிட்டறிந்திடலாம் பாப்பா,
ஏற்றமுடன் எல்லோரும் பாப்பா - இது
இயம்பிடும் வானவில்தான் பாப்பா.

28.06.1959 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணில்

அணிலே அணிலே ஓடிவா,
அன்பாய் விளையாடவா
மண்ணில் மரத்தில் ஏறுகின்ற
வலிமை எங்கு கற்றாய் நீ?

வானரம் உனக்கு இனமாமோ
வாட்டமில்லா அணிலாரே?
மானம் பெரிதாய்க் கொண்டாலே
வாழ்வு மண்ணில் சிறந்திடுமாம்.

நெல்லும் பழமும் தின்றிடுவாய்
நீண்ட மரத்திலேறிடுவாய்
அல்லும் பகலும் சுறுசுறுப்பாய்
அங்குமிங்கு மோடிடுவாய்,

மூன்று நெடிய கோடுகளை
முதுகில் உனக்குக் கீறியது
வானோர் தேடியும் காணாத
வண்மையுள்ள கடவுளரோ?

நான்கு கால்கள் உனக்குண்டு
நன்கு பற்றி மரமேற,
வேண்டும்போது நாமழைத்தால்
விரும்பி நீயேன் வருவதில்லை?

பழுத்த கனிகள் மரத்தனிலே
பார்த்துப் பார்த்து உண்டிடுவாய்,
கொழுத்து நீதான் வளர்வதற்குக்
கொவ்வைக் கனிகள் உண்பதுண்டோ?

அறுக்கும் வாளோ நின்பல்லு?
அரைக்கும் திரிகை போன்றதுவோ?
இறுக்கமாக மரம்பிடித்து
ஏறும் வித்தை கற்றனையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வாயோ வெண்ணிலாவே!

இருட்டிய பின் உதயமாகும் வெண்ணிலாவே - உந்தன்
இருப்பிடத்தைச் சொல்லிடாயோ வெண்ணிலாவே?

மல்லிகையோடாம் பலும்தான் வெண்ணிலாவே - முகம்
மலர்வதேனோ நின் வரவால் வெண்ணிலாவே?

கார்மேகம் சூழ்ந்து விட்டால் வெண்ணிலாவே - நீ
காணாமல் போவதேனோ வெண்ணிலாவே?

பசியநிற இலை நுனியில் வெண்ணிலாவே - நீ
பனித்துளியைப் போடுவதேன் வெண்ணிலாவே?

வட்டமான நின்முகமும் வெண்ணிலாவே - நிதம்
வளர்வதுவும் தேய்வதுமேன் வெண்ணிலாவே?

காதலர்கள் உள்ள மெல்லாம் வெண்ணிலாவே - நீ
களிப்படையச் செய்வதுமேன் வெண்ணிலாவே?

அழும் குழந்தை பார்த்துவிட்டால் வெண்ணிலாவே - அதன்
அழுகை நிற்கக் காரணமேன் வெண்ணிலாவே?

வான்மீது பவனி வரும் வெண்ணிலாவே - உனக்கு
வெள்ளி முலாம் பூசியதார் வெண்ணிலாவே?

இருள் விழுங்கி ஒளி பரப்பும் வெண்ணிலாவே - இதற்கு
எங்கிருந்து சக்தி பெற்றாய் வெண்ணிலாவே?

களங்கமில்லா தொளியளிக்கும் வெண்ணிலாவே - உனக்கு
விளங்கு புகழ் தந்தவரார் வெண்ணிலாவே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் ஆடலாம்

ஊஞ்சல் ஆடுவோம் - தம்பி
ஊஞ்சல் ஆடுவோம்.

பாட்டுப்பாடியே - ஊஞ்சல்
பறந்து ஆடலாம்.

ஏறிக் கொள்ளடா - தம்பி
என்னைப் பிடியடா.

பறவைக் கப்பல்போல் - உயரே
பறந்து ஆடலாம்.

அந்தரத்திலே - ஊஞ்சல்
முந்திப் பாயுது.

நேராய்ப் பறக்குது - ஊஞ்சல்
நெருங்கி இருந்திடு.

பயப்படாதே நீ - அதோ
பாலு வருகிறான்

பட்டு வருகிறாள் - அந்தப்
பக்கம் பாரடா.

ஏற்றி அவர்களை - நாம்
இணைந்து ஆடுவோம்.

ஊஞ்சல் ஆடுவோம் - தம்பி
ஊஞ்சல் ஆடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு

அணியணியாய் எறும்புகள்
அங்கே பாரு செல்வதை
மணியரிசி காவியே
மனைக் கெடுத்துப் போவதை

மாரிகால உணவுக்காய்
மகிழ்ந்துணவைச் சேர்க்கவே
ஆரவார மற்றவை
அணியாய்ச் செல்லும் அழகுபார்.

சோம்பலின்றி நாளுமே
சுறுசுறுப்பாய் இயங்கலால்
வீம்பு செய்து பிரிந்திடும்
வெட்டி வாழ்க்கை இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி

அம்மா அப்பா இருவரும்
அன்பு காட்டும் தம்பி
சும்மா நானும் கிள்ளினால்,
துடிதுடித்துக் கத்துவான்.

நான் சிரித்தால் சிரிப்பவன்,
நான் அழுதால் அழுபவன்,
தான் தனது கால்களால்
சைக்கிளோட்டிச் செல்பவன்.

அவன் அழுதல் ஏனென
அம்மா நன்று அறிந்தவள்,
கவனமாகத் தூக்கியே
கனிந்து பாலை யூட்டுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவனாக வாழ

காலையில் எழுந்து குளித்திடுவாய் - தினம்
கடவுள் பாதம் தொழுதிடுவாய்
மாலையில் விளையாடிக் களித்திடுவாய் - பின்
மகிழ்வாய்ப் பாடம் படித்திடுவாய்

உண்ணமுன்னர் கையலம்பிடுவாய் - உணவு
உண்ட பின்னர் பல் துலக்கிடுவாய்
திண்ணமாக உன் உடல் வளர்ப்பாய் - நோய்
தீண்ட அஞ்சும் கண்டிடுவாய்

நெஞ்சை நிமிர்த்தி நடந்திடுவாய் - என்றும்
நிமிர்ந்து இருக்கப் பழகிடுவாய்
கொஞ்சம் அளவாய் உண்டிடுவாய் - நீரைக்
கொதிக்க வைத்துக் குடித்திடுவாய்

சுத்த ஆடை அணிந்திடுவாய் - வெளியில்
தூய காற்றை வாங்கிடுவாய்
சித்தம் திண்மையடைந்து விடும் - உன்
தேகமும் வலுவு கூடிவிடும்

வீட்டைச் சுத்தமாய் வைத்திருப்பாய் - வெளிச்
சுற்றுப்புறத்தையும் பாதுகாத்திடுவாய்
நாட்டிலுள்ளோர்க் குதாரணமாய் - உன்
நடத்தை அமைந்தால் நன்றன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர் சொல்வதைத் தட்டாதே - அவர்
பகல்வதை மனதில் இருத்திடுவாய்!
குருவைக் கடவுளாய் மதித்திடுவாய் - அவர்
கூறிய புத்திகள் செவி ஏற்றிடுவாய்

பிறரை நிந்தை செய்யாது - நீ
பிரியமாக வாழப் பழகிவிடு
உந்தன் உயிராய் மற்றுயிரை - நீ
உணர்ந்து நடக்கக் கற்றிடுவாய்

உண்மை உன்னை உயர்த்திவிடும் - சாதி
உயர்வும் தாழ்வும் பேதமையாம்!
நன்மை செய்தால் நலம் பெறுவாய் - நீ
நல்லவனாக வாழ்ந்திடுவாய்!

– வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அப்பா

அப்பா எந்தன் அப்பா
அருமையான அப்பா
எப்போதும் எனை அணைத்து
இன்பமூட்டும் அப்பா!

பட்டுச் சட்டை தருவார்
பாவைப் பிள்ளை தருவார்
தொட்டு என்னைத் தூக்கி
தோளில் வைக்கும் அப்பா!

"அ"னா எழுத வைத்தவர்
அறிவை எனக்குத் தந்தவர்
பேனா பிடிக்க வைத்து
பெருமை சேர்க்க வைத்தவர்!

குறுகுறு என நடந்து
குறு மண்ணில் வீழ்ந்து
துறுதுறு என வளர
தூணாய் நின்ற அப்பா!

அப்பாவின் வயோதிபத்தில்
அன்பாகப் பார்த்திடுவேன்
அப்பா என்னைப் பார்த்ததுபோல்
அன்பாகப் பார்த்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எமக்குத் தெய்வம்

அம்மா எங்கள் அம்மா
அழகான அம்மா
அம்மா எங்கள் அம்மா
அன்பான அம்மா
பத்து மாதம் சுமந்து
பகலிரவாய்க் காத்து
பாடம் புகட்டும் அம்மா
வட்டியிலே சோறூட்டி
வளர்த்தெடுத்த அம்மா
தொட்டிலிலே ஆட்டி
தூக்கி வளர்த்த அம்மா
வாழும் நெறிகள் புகட்டி
வளமாய் வாழ்ந்து காட்டி
நாளும் எமக்காய் வாழ்ந்த
அம்மா எமக்குத் தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பெரியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் கணேசஐயர்

தமிழ் அன்னை ஈன்றெடுத்த மணிகள் தம்முள்,
தவத்தினிலும் உருவினிலும் குறுமுனிக்கு,
இம்மியுமே குறையாத புகழ்சேர் மேதை,
ஈழத்தில் தோன்றியவர் கணேசஐயர்.
செம்மையதாய் வாழ்வாங்கு வாழ்ந்தெவர்க்கும்
சீராக வாழும் நெறி எடுத்துக் காட்டி,
உம்பரென வாழ்ந்திட்ட ஆத்மஞானி,
உயிர் இறுதிவரை உழைத்தார் கண்டுகொள்வீர்!

சட்டமெனத் தமிழுக்கு விளக்கம் தந்த
தனிப்பெருந் தொல்காப்பியத்தை முறையாய்க் கற்று,
இடருறுவார்க் கருந்துணையாய் வழிநூல் நல்கி,
இலக்கணத்தில் பெருங்கடலாய் விளங்கி நின்று,
உடன்பட்டு ஆயிரமாம் மாணவர்க்கு
உயர் தமிழை உவந்தளித்த பிரம்ம ஞானி
கடந்து விட்டார். எம்மை விட்டுத் தனியே, அந்தக்
காலனுக்குத் தமிழ் வளர்த்தால் பொறாமை தானோ?

07.12.1958 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலியூர்
# சோமசுந்தரப் புலவர்

அரிய இலக்குமிப்பிள்ளை கதிர்காமத்தார்,
அன்பான இல் வாழ்க்கை அதன் பேறாக,
பெருமையுடன் சுந்தரனார் பிறந்தார். ஈழம்
பெற்றதுவே பெருஞ் சிறப்பு புலவராலே,
முருகனையே குலதெய்வமாகக் கொண்டார்.
முற்றாக ஆட்கொண்டே இணையில்லாத,
அருமை மிகு பல நூல்கள் ஆக்கவைத்தான்,
அன்னவர் தம் வாழ்வு நமக்கெடுத்துக் காட்டு.

பத்தோடு ஐந்தாண்டில் கலைத்தாய் பேறாய்,
பாக்கள் பல புனைகின்ற ஆற்றல் பெற்று,
எத்திக்கும் புகழ்பரப்பி தமிழ் வளர்த்து,
என்றுமே அறிஞரிடை இடமே பெற்று,
உத்தமராய் நவாலியது தந்த முத்தாய்,
உயர் சோம சுந்தரராய்க் கவிதை தந்தார்.
தித்திக்கும் பாவாலே சிறார் மகிழ்ந்தார்.
திகழ் தங்கத் தாத்தாவாய்ச் சிறப்புற்றாரே.

ஆங்கிலமும் செந்தமிழும் ஆய்ந்து கற்று
ஆசிரியனாயமர்ந்து அருமையாக,
பாங்கான சைவமுடன் தமிழும் சொல்லி,
பண்டிதர்கள் பலபேரைத் தோற்றுவித்து
மாங்கல்யம் சின்னம் மையார்க்கு ஈந்து,
மக்கள் பலர் தமைப் பயந்து அறிஞர் போற்ற,
நீங்காத புகழுடம்பால் வாழ்ந்திருக்கும்
நிறை மனத்துப் புலவனையே நினைவு கூர்வோம்.

01.03.1959 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. செல்வநாயகம் அவர்களின் அறுபத்தோராவது அகவையையொட்டி எழுதப்பட்டது.

# ஈழத்துக்காந்தி செல்வநாயகம்

காந்தியின் வாரி சென்றும் ஈழத்துக் காந்தி என்றும்
கண்டவர் வியக்கும் வண்ணம் கடமையையாற்றுகின்ற
சாந்தமே உருவெடுத்த தனிப் பெரும் தலைவரேறே!
சத்திய நெறியில் நின்று சத்தியாக்கிரகம் செய்யும்
ஏந்தலே செல்வமான நாயகப் பெயரே பூண்ட,
எந்தவப் பயனே எங்கள் ஈழத்தின் ஒளிவிளக்கே!
மாந்தரில் உயர்ந்த நல்ல மாணிக்கமாக
வாழும் மகிமைசேர் நினது நாமம் வாழிய வையமீது.

களங்கமில் வதனத்தாலும் கள்ளமில் உள்ளத்தாலும்
கண்டவர்தமை மயக்கும் காந்த மென் சக்தியாலும்,
உள்ளத்தை ஊடறுத்து உண்மையை அறியும்
உத்தமன் புகழ் விரும்பா செயல்புரி கர்மவீரன்,
தெள்ளிய புலமையாளன் தேசத்தில் பக்தி கொண்டோன்,
சிந்தனைச் சிற்பியான செம்மை வாழ்வுடைய செம்மல்,
வள்ளலாம் செல்வமான நாயகன் பன்னாள் வாழ
வல்லவன் இறைவன் பாதம் வணங்குவோம் வணங்குவோமே.

இன்றுடன் அறுபத்தொன்றை எட்டும் ஏந்தல் தன்னை,
எம்மவர்க் குழைக்கும் செல்வநாயக இமயம் தன்னை,
இன்சுவைப் பேச்சினாலே எதிரியின் மனம் கவர்ந்து,
ஈர்த்திடும் திறமையாளன் யாவர்க்கும் நல்லோன்,
மண்ணுலகெங்கும் போற்றும் மாண்புள்ள மனிதன் தன்னை,
மக்களின் தொண்டில் வல்ல மாற்றலர் தோழன் தன்னை,
தன்னுடை இலட்சியத்தில் களைத்திடாத் தலைவன் தன்னை
தளர்ந்திடா உறுதி பூண்ட தமிழரின் தலைவன் என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகன் விபுலாநந்தன்

ஈழத்தின் கீழ்த்திசையில் புகழும் பூத்து
இலங்குகின்ற காரேறு மூதூர் தன்னில்
வாழ்வாங்கு வாழ்ந்த நல்ல குடிப்பிறந்து
வையகத்தோர் போற்றிமிக ஏத்துகின்ற
யாழ்நூலில் இசைத் தமிழைக் கடைந்தளித்து
யாவர்க்கும் அருவிருந்தாம் நல், மதங்க
சூளாமணியென்னும் நன்னூல் தந்த,
சுகுண விபுலாநந்தத்தூயோன் வாழ்க.

ஆக்கை நிலையானதல்ல என உணர்ந்து
அரன்பதமே நிலையான தஞ்சமென்னும்
போக்காக வாழ்வதனைத் திருத்திக் கொண்டு
பொது வாகத் துறவறத்தில் பற்றுவைத்து,
நோக்காகச் சைவமுடன் தமிழ் வளர்த்த
நுண்புலவன், சைவமுனி, விபுலாநந்தன்,
பாக்கடலில் திளைத்தெழுந்து அவன் புகழை என்றும்
பாரினிலே பரப்பி யடி பணிந்து வாழ்வோம்.

ஆங்கிலத்தில் விஞ்ஞானத் தேர்ச்சி பெற்று
ஆங்கில நூல் பலபெயர்த்துத் தமிழுக்காக்கி,
பாங்குடனே தமிழூற்றின் எல்லை கண்டு
பல்கலைகள் ஓதுவிக்கும் ஆசானாகி,
ஆங்காங்கு பள்ளி பல ஆக்கித் தந்து,
அரன்பதத்தை அடைந்துவிட்ட அடிகளாரை,
நீங்காத நிறை மனத்தோடென்றும் நாமே
நினைத்திடுவோம் அவன் செயலை நிதமும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி

கத்தியின்றி இரத்தமின்றிப், புதுமையான
கண்ணியநல் யுத்தத்தில் வெற்றிபெற்றோன்:
சத்தியத்தின் காவலனாய் நின்று என்றும்
காருண்ய நெறியினிலே புகழே பூத்தோன்.

கையாலே ஆடையது நெய்துடுத்தோன்
காலமெல்லாம் நாட்டுக்காய் உழைத்து நின்றோன்:
'ஐய! இவன் கோவணத்து ஆண்டி' என்று
அருவருப்பாய் வெள்ளையரால் பழிக்கப்பட்டோன்.

அகிம்சை என்ற புதிதான ஆயுதத்தை
அகிலத்துக்கே அளித்து வெற்றி கண்டோன்:
அகிம்சை வழிநின்று முழுநாட்டுக்காக
அரிய தொரு சுதந்திரத்தை அடையப் பெற்றோன்.

"வெள்ளையனே வெளியேறு" என்று கூறி
வீரமோடு முழக்கமது இட்டுநின்றோன்:
வெள்ளையனை வெளியேற்றித் தனது நாட்டு,
வீரமுறு சுதந்திரத்தை வென்றெடுத்தோன்.

இந்துவொடு முஸ்லீம்கள் ஒற்றுமைக்காய்
இன்னுயிரை அர்ப்பணித்த இணையில் வீரர்,
அந்த நல்ல மாமனிதர் வாழ்வை என்றும்
அனைவருமே பின்பற்றி வாழுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலர்

அல்லலது சைவத்திற்கு ஆங்குற்ற காலையிலே
நல்லை நகருதித்த நாவலனார் - தொல்லை
அத்தனையும் தாங்கி ஆன்மீகத் தொண்டியற்றி,
அத்தன் அடிசேர்ந்தார் அறி.

செந்தமிழும் ஆங்கிலமும் சீராகக் கற்றறிந்து
அந்தம் வரை தமிழை யாண்டிருந்து - பந்தமுடன்
இறைவழியில் நின்று இவ்வுலகை நீத்த அரு
மறையோனை வாழ்த்தாய் மனம்.

அல்லும் பகலும் அனவரதமும் தமிழை
சொல்லால் செயலாலே தூக்கிவிட்ட - நல்லைநகர்
அறுமுகநாவலர் பேர் அகிலமது உள்ளவரை
வீறுபெற்று நிற்கும் வியந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலும் வாழ்வும்

நயம் சிறந்த இலக்கியத்தை
நற்றுணையாய்ப் பெற்ற தமிழ்
வியனுலக மாந்தரினால்
விரும்பப்படல் எதனால்?

கம்பரது கற்பனையால் பிறந்த
காவியமாம் ராமர் கதை
அம்பர் உலகத்தோர்க்
கினிமைதரல் எச்செயலால்?

இளங்கோ சிலம்பில்
எமக்குரைத்த கண்ணகியின்
வளஞ்சேர் வாழ்வு நம்மை
வசைத்தெடுத்தல் எத்திறத்தால்?

திறமை மிக கவித்துவத்தால்
தெய்வப் புலவர் தரு
குறளினது மேன்மைக்
குயர்ந்த பொருள் எங்குளது?

அறநானூ றென்னும்
அன்பு நெறி காட்டிய பின்
புறநானூ றென்னும்
போர் முறைகள் காட்டியதேன்?

கற்றோரே ஏத்தும்
கலித்தொகைபோல் பன்னூல்கள்
ஏற்புடைத்தாய்த் தந்த
எம்தமிழர் வாழ்க்கையெது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லால் உலகளந்தான்

வள்ளுவப் பெருமான்
உள்ள நிறைவுடன்
வாரி வழங்கியதாம் - உயர்
தெள்ளு குறளமுதை
அள்ளிப் பருகிடில்
சிந்தை தெளிந்திடலாம் - உலகில்
பந்தமழித்திடலாம்

திருப்பால் கடலையும்
விருப்பாய்க் கடைந்திடில்
தித்திக்கும் அமிர்தம் வரும் - அது
இருளை கெடுத்து - நல
தெருளை அளித்திடும்
இனியதொரு மருந்தாம் - எவர்க்கும்
புனிதம் தரும் விருந்தாம்

சுருக்க வழி உளம்
உருக்கும் வகையிலே
சொல்லால் உலகளந்தான் - தமிழ்
தருக்கும் வகையிலே
பெருக்கும் கருத்துகள்
தந்தான் இரண்டடியில் - அவன்
தந்தான் இரண்டடியில்

அம்புவியெங்குமே
செம்பொருளாகவே
அமைந்த திருக்குறளை - அங்கே
இம்பெரும் கண்ணூறின்
வெம்புவர் என்றோதான்
எங்களுக்கீந்து சென்றான் - அதால்
ஏரோருக்கேற்றம் தந்தான்.

முத்தமிழ் தந்தவன்
வித்தக வள்ளுவன்
சூட்டினான் முடி குறளால் - பல
மொழிகளில் பெயர்த்துப் பல்
வழிகளில் சிறப்பதை
எண்ணிப் பெருமை கொள்வோம் - தமிழ்
மண்ணின் அருமை சொல்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழச் செய்வாய்

ஆண்டு பலவாகச் - சுய
ஆட்சி செலுத்திய நீ
மாண்டு மடிவதோடா - உந்தன்
மானத்தை விற்பதோடா.

ஆயிரம் ஆண்டுகளாய் - எங்கள்
அன்னை தமிழ்தானும்
பாயிரமாய் மொழிக்கு - இந்த
பாரில் திகழுதடா.

ஈழத் தமிழ்நாட்டில் - மாளாது
இத்தனை ஆண்டுகளாய்
வாழும் தமிழதனை - மற்றவர்
தாழ்த்துதல் நியாயமோடா

எங்கள் மொழியினுக்கு - ஈழத்தில்
ஏற்ற இடமளித்தால்
தங்கள் மொழிதானும் - தரணியில்
தாழ்ந்திடுமென்பது பொய்.

தமிழும் சிங்களமும் - ஈழத்தில்
சமமாய்த் திகழ்வதற்கு
செம்மையாய்ப் பாடுபட்டு - நின்மொழி
சிறந்திடச் செய்திடுவாய்.

அகிம்சாவழிதனில் - நீ
அணுவும் பிசகாது
சகிப்புத் தன்மையுடன் - அவரைச்
சார்ந்துமே வென்றிடுவாய்.

நெஞ்சில் இரக்கமில்லா - இந்த
நெறியற்ற மனிதர்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்காது - உந்தன்
ஆளுமை காட்டிடுவாய்.

தங்கத் தமிழ் காக்க - நின்னுயிர்
தத்தமும் செய்திடுவாய்
அங்கம் துடிக்குதடா - தமிழின்
அவல நிலைகண்டு.

சங்கொலி கேட்குதடா - இனித்
தரியோம் ஒருபோதும்
பங்கமே வந்தாலும் - நம்மொழி
பண்புடன் காத்திடுவோம்.

மங்கையர் எல்லோரும் - எங்களுடன்
மகிமையாய் வந்திடுவீர்
மங்காத் தமிழதனை - மாநிலத்தில்
மாட்சிமையாக்கிடுவோம்.

அடம்பன் கொடிதானும் - அவனியில்
திரண்டால் மிடுக்கென்று
திடமாய் நம்பிடுவாய் - நீயும்
திருந்தி நடந்திடுவாய்.

ஒற்றுமையாகவே நீ - மொழியின்
உரிமையதனைக் கேட்பாய்
வேற்றுமை கொண்டிடிலோ - உனக்கு
விடிவுதான் வந்திடுமோ?

கீழவர், மேலவர் என்று - சாதியைக்
கிண்டல்கள் செய்யாமல்
ஈழத்தமிழனென - நீயும்
எண்ணி நடந்திடுவாய்.

அன்று நாம் வாழ்ந்ததுபோல் - இன்றும்
அன்புடன் வாழந்திடவே
நன்றாக நம் மொழிக்குச் - சம
அந்தஸ்துத் தேடிடுவாய்.

08.07.1956 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்மகள்

குறள் மகளை அணைத்திடில்
கொள்ளை இன்பம் நல்குவாள்.
குவலயத்தில் உள்ள தெல்லாம்
சொல்லியெமைத் தேற்றுவாள்
அறன் சிறந்து பொலிந்ததாம்
அன்பு வாழ்க்கை காட்டுவாள்
அனைத்துயிரும் சேமமுற
அருள் சுரக்கத் தூண்டுவாள்.

மனைவாழ்வும் துறவறமும்
மாண்புடனே செழித்திட
மதலை மொழிக் குதலையரைத்
தந்துகளிப்பூட்டுவாள்

தினையளவு நன்றி செயின்
பனையளவாய்த் தூக்குவாள்
தீயவரைத் திருத்துதற்கும்
செம்மை நெறிகாட்டுவாள்.

பொருளியலும் அரசியலும்
பொறுமையோடு புகட்டுவாள்,
புத்தகர் ஏசு பொன்னுரைகள்
புகழ்ந்தெமக்குச் சாற்றுவாள்
மருள் ஒழிந்து தெளிவுபெற
மார்க்க மெமக் கியம்புவாள்
மன்பதைக்குக் கிடைக்கொணாத
மகிமை கொண்டாள் குறமகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்காய் உழைப்போம்

1. பள்ளியெல்லாம் பைந்தமிழே பயிலவேண்டும்
பார் முழுதும் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும்
அள்ளி நீ குழந்தையை அணைக்கும் போதும்
அழகுத் தமிழ் அப்பொழுதில் கேட்க வேண்டும்!

2. மாஞ்சோலை குயிலிருந்து கூவும் போதும்
மனம் நிறைய தமிழ் ஒலியே கேட்க வேண்டும்
வாஞ்சையுடன் இனசனங்கள் சேரும் போதும்
வண்டமிழே எம் செவியில் கேட்க வேண்டும்

3. தமிழேதான் மூச்சாக இருக்கவென
தரணியிலே எல்லோரும் நினக்கவேண்டும்
அமுதேதான் தமிழென்று அறிந்துவிட்டால்
அழியாது தமிழ் என்றும் அறிவீர் காண்பீர்!

4. மீளாத வழிப் பயணம் போகும் போதும்
மேன்மையுறு தமிழேதான் ஒலிக்க வேண்டும்
ஆழ் குழியில் என் உடலைப் புதைக்கும் போதும்
அருந்தமிழே பாட்டாக இசைக்க வேண்டும்

5. பலமொழிகள் கூட்டத்தில் எங்கள் தமிழ்
பாங்காகத் தலை நிமிர்ந்து மிடுக்குடனே
உலகெங்கும் ஓங்கியே ஒலிப்பதற்கு
ஒவ்வொருவரும் தமிழுக்காய் உழைக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 காதற் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவர்வாள்

மாந்தளிர் மேனியை மூடிய பட்டுடை
மஞ்சள் வெயிலில் பளபளக்க,
காந்தளாம் கைகளில் பூட்டிய பொன்வளை
காற்றில் கலந்து கலகலக்க,
ஏந்தெழில் கொங்கைகள் விம்மித் தணிந்திட
என்தலை சுற்றிக் கிறுகிறுக்க,
காந்தம் இரும்பைக் கவர்வது போலவள்
கண்களால் என்னைக் கவர்ந்திழுப்பாள்,

அத்தை மகளென மெத்த உரிமையாய்
அன்பாய் என்னோடு பழகியவள்,
சித்தம் களித்திட 'அத்தான்' என்றென்னை
தேனில் கலந்து இனிதழைத்து,
முத்து நிகர்த்திடும் பற்கள் தெரிந்திட
முறுவல் இதழ்க்கடை ஓடவிட்டு,
சித்திரப்பாவையாய் நின்று முன்னே, தன்
சிந்தையால் என்னைக் கவர்ந்திழுப்பாள்.

கானத்தவமிருக்கின்ற முனிவரின்
கடிய தவத்தைக் கெடுக்க வரும்,
வானத்துக் கன்னி போல தனிமை விரதத்தை
வந்து கலைத்து வதைப்பவள், பின்
கானத்துக் குயிலோசையால், என் பொய்மைக்
கோபம் தணித்து நிற்பாள், பின்
ஆனந்த மாமயில் போல களிநட
ஆட்டத்தால் என்னைக் கவர்ந்திழுப்பாள்.

1962 ஆவணி 'விவேகி' இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய நங்கை

கண்ணுக்கு மைதீட்ட அறியாள் பாவம்
காதலென்றால் கருத்தறியாள் உணர்வில் கண்டாள்
பெண்மைக்குப் பெருமைதரும் குணங்கள் நான்கும்
பெருமையுறக் கைக் கொண்டாள். பேணலாலே
வண்ணமுறு மார்பகத்தைத் தூக்கிக் கட்டி
வாயிதழில் செஞ்சாயம் பூசிடற்கும்
எண்ணமிலாதவளிருந்த போதும் கூட
இயற்கையெழில் அவளுடலில் பொலிந்ததம்மா

நறுந்தேனும் சர்க்கரையும் கலந்த சொல்லாள்
நாணமென்றால் அப்பப்பா சொல்ல வேண்டாம்,
இறைவனெனக் கொண்டவனை மனத்திருத்தி
என்றென்றும் பூசனைகள் புரிந்து நிற்பாள்
திறமையுடன் வறுமையிலும் வாழ்க்கையோட்டும்
திண்மையுள்ளளாள், பண்புடையாள், தீமையான
இறுமாப்பும் தற்புகழும் இல்லாதாக்கி,
இன்முகத்தோடில்லறத்தை இயற்றுவாளாம்

கைகளிலே இடம்பப்பையை பிடித்துக் கொண்டு
கால்களிலே குதியுயர்ந்த செருப்பு மாட்டி
மெய்தெரியும் வெங்காயச் சேலைகட்டி
மேதினியின் நாகரிகம் தமக்கே யென்ன
செய்ய வயிறது தெரியச் சேலைகட்டி
செறிந்த குழல் கத்தரித்துத் திருப்பிக்காட்டி
பொய்யான வாழ்க்கையிலே மூழ்கிப் போன
பூவையரைப் பார்த்து அவள் நகைப்பாள் மெய்யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கனவா

வார்குழலில் நெய்தடவிப் பின்னி
வட்ட முலை கவர்ச்சியினைக்காட்ட
கார்வண்டு போன்ற விழி மூலம்
கதைகதையாய் உளத்துளது கூறி
சீரடிகள் நோக நடை பயின்று
திருமகளாய் வந்த அவள் தோற்றம்
பார் எனக்கு இயற்கை தந்த பரிசு
பளிங்கெனவே ஒளிரு தெனல் போலும்

வான் தோன்றும் வெண்மதியைக் கண்டு
வண்ண இதழ் விரிக்கின்ற மலர்போல்,
நான் பார்த்தால் கன்னங்கள் சிவந்து
நாணமுடன் இளநகையும் அரும்பும்,
தேனூறும் செவ்விதழைச் சுவைத்து
தீண்டியவள் பட்டுடலை அணைக்க,
ஏனென்று இனமறியா ஆசை,
எண்ணத்தில் இனம்புரியா ஏக்கம்,

கனியென்றால் விரும்பாதார் யாரோ?
கன்னியென்றால் அப்பப்பா வேண்டாம்
வனிதையரின் தனியழகோ கொடுமை,
வாள்விழியும் புன்சிரிப்பும்விடுமோ?
தனித்து நின்ற தையல் எனைப் பார்த்தாள்
சடையினிலே முல்லை மலர் வாசம்,
களித்துள்ளம் கலகலெனச் சிரித்தேன்,
கண்விழித்தேன் கண்டதெலாம் கனவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டிட நாவுண்டோ?

வார்குழலும் மையானால்
வதனமோ தண் மதியாம்,
கார்விழிகள் வண்டானால்
கமுகைத் தொடையெனலாம்,
கூர் முலைதான் குரும்பை யெனில்
கொடியிடையை என்சொல்லாம்?
பாருலகில் அவள் எழிலைப்
பகர்ந்திடவே நாவுளதோ?

வளர்பிறையை நுதலென்றால்
வளைந்த சிலை புருவம்தாம்,
இளநகையோ முல்லை யெனில்,
இனிக்கும் தேன் மொழியாகும்,
முழங்கு கடல் சிப்பிதரும்,
முத்தையவள் பல்லெனலாம்,
விளங்குமவள் எழில்தனையே
விண்டிடவும் நாவுளதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிகையார் விட்ட கண்ணீர்

பெண்ணிற் கணிகலனாம் பெருமைசேர் கற்பினையே
பூண்டு சிறப்படைந்து பூவுலகோர் ஏத்துகின்ற,
கண்ணகியாள் விட்ட கண்ணீரதுதானும்,
விண்ணாளும் இந்திரனாய் விளங்கிவந்தபாண்டியனின்
செங்கோல் வளைந்து, செயலிழந்து, பொறிகலங்கி,
மண்ணில் பிணமாகி, யவன் மதுரையினை எரித்த தென்ற
மாண்புடைய கதையினை நீ மாநிலத்தில் அறியாயோ?

குறையெதுவும் எண்ணாது கொண்டவனைப் பின் தொடர்ந்து
கல்லோடு முள்செறிந்த கானகமே சென்ற அந்தச்,
சிறையிருந்த செல்வியெனும் சீதையவள் வெது வெதும்பிச்
சிந்திய அக்கண்ணீர்தான் திக்கெல்லாம் கோலோச்சி,
இறைவனுறை கயிலைமலை எடுத்தந்தத்தடந்தோளான்
பத்துத்தலை யறுத்து படர்சுற்றம் கொன்றொழித்து
நிறைந்த வளமுடைய நித்திலநற்றீவினையும்
நிர்மூலம் செய்ததென்ற நீதியினை நீயறிவாய்!

அனலில் பிறந்து ஐவரையும் மாலையிட்ட,
அன்பே உருவான அழகியவள் பாஞ்சாலி,
வன்னக்கயல் விழியால் வடித்த கண்ணீர் தான் அன்று,
வஞ்சம் பொறாமைகளின் வாய்ந்த உறைவிடமாய்,
அன்று கொலுவீற்றிருந்த அரவக்கொடியானை,
தம்பிமார் மற்றும் சகுனியாம் யாவரையும்,
கொன்று குவித்து குவலயத்தில் நீதியினைக்
காப்பாற்றிற் றென்ற கதையை அறியாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் கும்மி

கும்மியடி பெண்காள் கும்மியடி,
குனிந்து கும்மி யடியுங்கடி,
செம்மையதாகவே நமதினமோங்கவே
சிறக்கக் கும்மியடியுங்கடி.

ஈழத்தமிழர்க்கு மீளாப் பெருமையை
ஈட்டித் தந்தாள் எங்கள் பாரதத்தாய்:
வாழப் பிறந்த நாம் வளமாக வாழ்ந்திட
வந்துமே கும்மியடியுங்கடி.

கண்ணகிதோன்றியே கற்பொளியாலன்று
காத்தாள் அது நம் பெருமை யென்று,
விண்ணதிர நின்று பாடுங்கடி மிக
வீறுடன் கும்மி யடியுங்கடி.

பெற்ற தன் பிள்ளையை பெரிதாம் சமருக்குப்
பேணியனுப்பினாள் நம்மினத்தாள்,
அற்புதமான அத்தாயின் பெருமைக்கு
ஆனந்தக் கும்மியடியுங்கடி.

பாரதமீன்றிட்ட பண்டைய மாதரை
பண்புடனே வெகு மாண்புடனே,
ஆரமுதாகவே அன்புடன் போற்றியே
அற்புதக் கும்மியடியுங்கடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனப்படும
அத்தனையும் நல் லணிகலனாம்,
இச்செகம் போற்றிட உச்சமதாகவே,
இங்கிதக் கும்மி யடியுங்கடி.

வள்ளுவன் சொல்லிய இல்லற வாழ்க்கையில்
வழுவிலா நாங்களும் வாழ்வி லெல்லாம்,
உள்ள மகிழ்வுடன் நல்லறம் கண்டிட
ஊக்கமாய்க் கும்மியடிங்கடி.

அக்கினி முன்னாலே கையது பற்றி
அன்புக் கணவனை நாங்களுமே,
பக்குவமாகவே காத்திடுவோ மென்று
பாடியே கும்மியடியுங்கடி.

நிலையற்ற இந்த உலகு நமக்கெலாம்
நிச்சயமென்றுமே வாழாது,
நிலையாம் இறைவனை நேரா யடைந்திட
நெறிதொடர்வோமெனக் கும்மியடி

காலத்துக்கேற்ப நாம் வாழ்ந்திடுவோம், நல்ல
கலைகளைத் தேர்ந்து படித்திடுவோம்,
சீலமுடன் நாளும் வாழ்ந்திடுவோமென்று
சிறக்கக் கும்மியடியுங்கடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியத் திருமணம்

கண்ணம்மா மச்சாளே - எந்தன்
கதையழகு நங்கணமே
என்னம்மா வைச்சிருக்கா - என்னோட
பசிக்கான விருந்தாக!

வாழைக்காய் பொரித்திருக்கேன் - பிஞ்சு
வழுதுலங்காய் சமைச்சிருக்கேன்
வாளை மீன் குழம்பு, இருக்கு - மச்சான்
வந்து பசி ஆறிடுங்க!

வாளை மீன் குழம்பும் வேண்டாம் - நீல
வழுதுலங்காய் கறியும் வேணாம்
காளை நான் பசியாற - நல்ல
கறியென்ன வைச்சிருக்காய்,

மச்சாள் நீ என்றெல்லோ - நான்
மனம்திறந்து கதைத்து விட்டேன்
மிச்சமாய் நீ பேசியே - என்னை
சர்ச்சைக்கோ கூப்பிடுறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 பொதுக் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலவ ஆண்டே வருக...

வஞ்சகம் பொறாமை சூது
வாழ்வினைக் கெடுக்கும் ஏனைச்
சஞ்சலம் களைந்து மக்கள்
சலிப்பெலாம் போக்கிப் பாரில்,
பஞ்சமும் பசியும் நீக்க
பண்பமை வாழ்வு நல்கி,
நெஞ்சகம் களித்துவாழ
நீயருள் பிலவ ஆண்டே!

வாழ்க நீ பிலவ ஆண்டே!
வானவர் துய்க்கும் இன்பம்
சூழ்கவே ஞாலமெலாம்,
துயர், பகை யாவும் போக்கி
ஆழ்த்தியே பகைமை, தீமை
அழித்திடும் கொடிய போர்கள்,
தோழமை, சமதை, அன்பு
தொன்மைபோல் நிலவச் செய்வாய்.

மாரியும் செழிக்கப் பெய்து
மாநிலத்தினிலே நன்னீர்
ஏரிகள் நிறைந்து பொங்க,
ஏர்த்தொழில் சிறந்து எங்கும்,
பாரியின் பறம்புபோல
பல்வகை வளங்கள் மல்கி,
சீரிய முறையில் வாழச்
செய்திடு பிலவ ஆண்டே!

1967 சித்திரை வீரசேகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை வந்தாள்

ஆயுளில் ஒன்றைப் போக்கி
ஆண்டவள் பிலவ நங்கை
மாயமாய் மறைந்து விட்டாள்
மாண்பொடு விடை நாம் சொல்வோம்

வேறு
கொஞ்சும் சிரிப்புடன் வஞ்சி வந்தாள் - எழில்
கூட்டி வந்தாள் - விழி
காட்டி வந்தாள்
அஞ்சொலிளமயில் நாடி வந்தாள் - நடம்
ஆடி வந்தாள் - உடன்
ஓடி வந்தாள்

போர்வெறி பார் வெறி போக்க வந்தாள் - நலம்
தேக்க வந்தாள் - பலம்
ஆக்க வந்தாள்
ஏர்த்தொழில் கைத்தொழில் ஏத்த வந்தாள் - நாடு
சிறக்க வந்தாள் - பகை
ஒறுக்க வந்தாள்

ஆடையணிகள் அணிந்து வந்தாள் - அண்டம்
நிலைக்க வந்தாள் - தண்டம்
குலைக்க வந்தாள்
ஈடில்லா இனிமை பெருக்க வந்தாள் - இன்பம்
பொலிய வந்தான் - துன்பம்
நலிய வந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி வெறியரைச் சாடவந்தாள் - சாந்தி
தழைக்க வந்தாள் - பாந்தம்
விளைக்க வந்தாள்,
பேதமை பேசியே வேதனை செய்திடும் - பித்தரைக்
கொல்ல வந்தாள் - சித்திரை
வெல்ல வந்தாள்

சிங்களர், தமிழர் போற்ற வந்தாள் - சுப
கிருதாக வந்தாள் - நவ
உரமாக வந்தாள்,
மங்களம் பொங்க இங்கிதமாக - மொழி
காக்க வந்தாள் - பழி
நீக்க வந்தாள்

ஏத்திடுவோம் வரவேற்றிடுவோம் - என்றும்
அறம்வளர்ப்போம் - நின்று
மறம் களைவோம்
காத்திடுவோம் வைரமேற்றிடுவோம் - கண்ணியம்
செய்திடுவாள் - புண்ணியம்
எய்திடலாம்

வேறு
அஞ்ஞான இருளே போக
அறக்கதிர்தோன்றி விட்டான்
மெய்ஞ்ஞானம் பெற்று என்றும்
விளங்குக புவன மெல்லாம்

சுபகிருதாருடம், வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே வருக...

சாதிசமயப் பெயரினால் - நாட்டில்
சண்டை குழப்பங்கள் தோன்றவும்
பீதி மனதில் படியவும் - மனம்
பேதலித்துக் காலம் தள்ளவும்
சோதனைக்கு மேல் சோதனை - தந்து
துன்ப நிகழ்ச்சியால் யாவர்க்கும்
வேதனை தந்த (ஏ) விளம்பியை - நாம்
வேதனையோடு அனுப்புவோம்.

நாட்டில் தினம் தினம் தோன்றிய - வீண்
வேலை நிறுத்த வியாதியால்,
வீட்டுக்குரிய பொருள்களின் - விலை
வாசிகள் மென்மேலும் ஏறியே
பாட்டாளி மக்களின் வாழ்க்கையை - இன்று
பாதாள மார்க்கத்தில் தள்ளியும்
வாட்டி வதைத்த விளம்பியை - நாம்
வாழ்வில் மறக்க முடியுமோ?

கோழிக்குலமெலாம் கூவின - கீழ்
வானம் வெளுத்து வருகுது
மேழி உழவர் மகிமையால் - இனி
மேலுலகம் இங்கு தோன்றிட
ஆழி சூழ்கின்ற உலகினில் - ஒளி
ஆதவன் எங்கும் பரப்பினான்
வாழி புத்தாண்டு 'விகாரியே' - என்று
வாழ்த்துக்கள் கூறி வணங்குவோம்.

பஞ்சம், பசி பிணி போக்கவும் - இந்தப்
பாரில் சமாதானம் நேரவும்.
வஞ்சம் பொறாமை யொழிந்துபோய் - என்றும்
வசியும் வளமும் சுரக்கவும்,
நஞ்சைகள், புஞ்சைகள் செழிக்கவும் - நாட்டில்
நல்லறம் மென்மேல் சிறக்கவும்.
நெஞ்சம் நினைந்து இறைவனை - நாம்
நிம்மதியாக வணங்குவோம்

12.04.1959 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத் தீபாவளி

பாரில் இடுக்கண் புரிந்த - அந்தப்
பாவி நரகாசுரன் தன்னை.
நேரில் எதிர்த்த நெடிய மால் - அவன்
நீண்ட பகழியால் வாடிட
வாரிக் கணைகள் தொடுத்தும் - பாமை
வல்ல அசுரனைக் கொல்கையில்
கோரிக்கையொன்று விடுத்தனன் - அதைக்
கொண்டல் நிறத்தனும் ஏற்றனன்

மாண்டுதான் போனாலும் என்பெயர் - இந்த
மானில மீது நிலைத்திட
ஆண்டிலொருமுறை கொண்டாடும் - நல்ல
அரிய வரமொன்று அருள்கென.
நீண்ட அடிதொழ அண்ணலும் - அவன்
நிம்மதியாக உயிர்விட,
வேண்டும் வரமளித் தன்புடன் - கண்ணன்
வேதங்கள் ஏற்றிடப் பெற்றனன்.

சூரன் நினைவாகத் தோன்றிய - இந்தக்
தூயதும் தொன்மையுமான நாள்
பாரத நாட்டில் பழமையாய் - மக்கள்
பண்புடன் கொண்டாடும் நல்ல நாள்.
தாரணியெங்கும் தமிழர்கள் - தம்
சமயநெறி வழுவாமலே
நேராய்க் குதூகலம் கொள்ளு நாள் - இது
நேர்மையாய்த் தீபம் நிரைக்கு நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் வேளைக் கெழும்பியே - செய்யும்
கடமைகள் யாவும் முடித்தபின்
நீலக்கருவிழி மாதரார் - தம்
நீண்ட கரங்களால் மாவினால்
கோலங்கள் போட்டு அழகுற - வீட்டில்
குத்துவிளக்குகள் ஏத்தியே,
ஆலயம் சென்று இறைவனை - மிக
அன்புடன் போற்றி வணங்குவர்.

மங்கள சூரியன் தோன்றினான் - கோயில்
மணிகளும் சங்குமொலித்தன,
இங்கிதம் பொங்கச் சிறாரெலாம் - மத்தாப்பால்
இன்பமாய் வேடிக்கை காட்டுறார்.
செங்கை வளையல் குலுங்கிட - மாதர்
தித்திக்கும் பட்சணம் செய்கிறார்.
எங்கும் உவகையின் இன்னொலி - இது
இன்பத் தீபாவளி என்பமால்

29.10.1959 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி இன்றிருந்தால்...!

பாரதி இன்றிருந்தால் - பாமழை
பாரில் பொழிந்திருப்பான்.
ஆரமுதன்ன தமிழ் - அதில்
ஆதிக்க முற்றிருக்கும்.

பேனா வலிமையினால் - அவன்
பெரிய புரட்சியினை
தானாகச் செய்திருப்பான் - பயனைத்
தமிழர்க்களித்திருப்பான்

வீடுகள் அத்தனையும் - கலை
விளங்கச் செய்திருப்பான்.
கேடுகள் இல்லாத - கிருத
யுகத்தைக் கண்டிருப்பான்.

அஞ்ஞான இருள் களைந்த - இந்த
அணுயுக மாந்தர்களின்
விஞ்ஞான சாதனையைக் - கண்டு
விந்தையும் கொண்டிருப்பான்

அடிமைத் தளையறுத்த - மக்கள்
ஆனந்த வாழ்வதனால்
படியில் சுதந்திரத்தின் - மகிமையை
பாங்காயறிந்திருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் பெண்களுமே - ஒன்றாய்
ஆற்றிடும் சேவைகண்டு,
மாண்புகள் கொண்டிருப்பான் - தனது
மனத்தே மகிழ்ந்திருப்பான்.

முப்பத்து ஏழாண்டில் - பாரத
முன்னேற்ற மத்தனையும்,
இப்புவி மக்களையே - தன்பால்
ஈர்ப்பதும் பார்த்திருப்பான்.

சாதிக்கொடுமைகளோ - இன்னும்
சாகாதிருத்தல் கண்டே
வேதனை கொள்வானோ - எமையே
வெறுத்துத் தள்ளுவனோ?

தமிழை வளர்ப்போரை - மக்கள்
தக்கப்படி மதித்தல்,
அமைவுடன் காண்பானேல் - அவனும்
ஆனந்தம் கொள்ளானோ?

ஈழத் திரு நாட்டில் - இன்று
ஏங்கும் தமிழருக்கு
தோழமை அன்பாலே - அவன்
துயரம் துடைப்பானோ?

07.09.1958 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுக் கொருவன்...!

பாட்டுக் கொருவன் பாரதியும் - இந்தப்
பாரில் பெரிய கவிஞனடா,
பாட்டில் புதுமையைத் தோற்றுவித்து - அதைப்
பாமரரும் விரும்பச் செய்தானடா.

பெண்கள் பெருமையைப் போற்றியடா - தன்
பேனா வலிமையை நாட்டிய பின்
பெண்கள் விடுதலை கோரி நின்ற - அந்தப்
பெற்றியை என்னென்று சொல்வேனடா

வைதீகம் பேசுவோர் தலை குனிய - மூட
வழக்கத்தைத் தள்ளி மிதிப்போமென்ற,
தெய்வீக மாக்கவி என்றறிவோம் - எங்கள்
தீந்தமிழ் வாழ்வித்த பாரதியும்.

வெட்டுக் கனிகளிலே தங்கம் எடுத்து - அவை
மேலைக் கடல் கடந்து வாணிபம் செய்ய,
திட்டம் எமக்கமைத்துத் தந்தவனடா - நாம்
செல்வம் பெருக்க வழி சொன்னவனடா,

ஆண்டுகள் தோறும் நாம் போற்றுகிறோம் - அவன்
ஆக்கங்களை வியந்தேற்றுகிறோம்.
மீண்டுமோர் பாரதி தோன்றவென - அந்த
மெய்ப் பொருளைத் தினம் வேண்டுவமே!

1962 செப்டம்பர் 'விவேகி' இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடமை போக்குவோம்

தேனீர்கடைகள் திறந்திடுவீர் - நம்
சோதரர் தம்மை அணைத்திடுவீர்
மானிலத்தார் நம்மைப் பரிகசிக்கும் - இந்த
மடமையை முற்றும் போக்கிடுவீர்

தமிழன் இன்று வாழ்விழந்து - அவன்
தன்னேரில்லா மொழியழிந்து
செம்மை வாழ்வு சிதைவதற்கு - இந்தத்
தீண்டாமையுமோர் காரணமாம்

தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்றேதான் - மாந்தரை
தரணியில் எவர்தான் பிரித்தாரோ?
வாழும் மக்கள் யாவருமே சமமாய்
வாழ்வதிறைவன் கட்டளையாம்

எந்த உடலை வெட்டிடினும் - அதில்
ஓடும் இரத்தம் ஒன்றென்றால்,
இந்தப் பிரிவினை மடமையென்று - இன்னும்
ஏனோ உணர மறுக்கின்றார்?

செய்மதி கால உலகிலுமா - இந்தத்
தீமைகள் விட்டுத் தொலைய வில்லை,
உயர்ந்திட வேண்டில் எல்லோரும் - மடமையை
ஓட வெருட்டி யடித்திடுவீர்.

கோயில்கள் எல்லாம் திறந்திடுவோம் - உண்டிச்
சாலைகள் எல்லாம் திறந்திடுவோம்,
பாவியர் யாரும் குறுக்கிட்டால் - அவரைப்
பணியச் செய்து வென்றிடுவோம்.

**28.11.1958 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியிருக்க இடமேது?

சங்கம் வளர்த்த தமிழகமே!
சரியுது தமிழும் ஈழத்தில்
சிங்கம் போன்ற அவர் வீரம்
சிதைந்து போகும் நேரமிது,
வங்கம் சூழ்ந்த இலங்கையிலே,
வரளுது தமிழன் மொழிதானும்,
எங்கும் கலகமேகங்கள்
இடித்துக் கொண்டே திரிந்திடுதே

நாளும் பொழுதும் பதவிகளும்
நம்மை விட்டே அகலுமென,
கோள்கள் அன்று சொல்லியதைக்
குறிப்பாய் நாமுமுணரவில்லை.
ஆளும் வர்க்கம் செய்யுமிந்த
அநீதி தன்னைப் பார்த்த பின்னும்,
வாளா இருப்பின் எக்கதிதான்
வந்திடுமெங்கள் சந்ததிக்கு?

மொழியும் கொடியும் ஓரினத்தின்
முதுகெலும்பைப் போலும் காண்,
குழியினுள்ளே இவ்விரண்டும்
குற்றுயிராய் புதைந்த பின்னும்
அழிவது நம்மை அணுகுவது,
அத்தனையும் நிஜம் என்றாலே
கொழிக்கும் வளச் செல்வநாடதனில்
குடிநாம் இருக்க இடமேது?

29.07.1956 ஈழகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள நண்பா....

அருமை மிகு நண்ப,
ஆங்கிலத்தில் நீவரைந்த
திருமடல் கண்டேன்,
செய்தி படித்தறிந்தேன்,
உரிமையுடன் இந்நிருபம்
உனக்குவரையலுற்றேன்
விரும்பிப் படிக்கும் வண்ணம்
வினயமுடன் வேண்டுகிறேன்.

உலகமொழி ஆங்கிலத்தை
ஊன்றி நீ கற்றதனால்
புலமையை நீ பெற்றாய்,
பூரித்தகம் மகிழ்ந்தேன்.
கலைகள் பல வறிந்தாய்.
களிபேருவகை கொண்டேன்,
நலன் விளைப்பாய் என்று
நம்பி நான் காத்திருந்தேன்.

இன்று நீ செய்த தென்ன
ஏற்ற முள்ள என் தோழா?
உந்தன் மொழியின்
உரிமைக்கு வாதிடும் நீ
கன்னித் தமிழில்
கதைப்பதற்கேன் கூசுகிறாய்?
நன்றோ உன் செய்கை
நகைப்பிற்கிடமன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று கூடுங்கடி!

கூடுங்கடி ஒன்று கூடுங்கடி - வரும்
ஆடி இருபதில் கூடுங்கடி
நாடுங்கடி நன்கு நாடுங்கடி - ஓர்
நல்லர சாட்சியை நாடுங்கடி!

பாருங்கடி கூடிப் பாருங்கடி - இன்று
பற்பல கட்சிகள் தேர்தலிலே,
வாருங்கடி ஓடி வாருங்கடி - நம்
வாக்கை யளித்திட வாருங்கடி.

தேருங்கடி சேர்ந்து தேருங்கடி - நல்ல
தேசத்தலைவனைத் தேருங்கடி,
காருங்கடி நன்றாய் காருங்கடி - நம்
கண்மணியாம் நாட்டைக் காருங்கடி.

காசு பணத்திற்கு ஆசைப்பட்டு - நம்
கைக்குக் கிடைத்ததோர் வாக்குரிமை
மாசுபடுத்திட மாட்டோ மென்று - நம்
மனதில் உறுதியே கொள்ளுங்கடி.

ஆண்டில் இருமுறை தேர்தலடி - அதால்
ஆட்சி செய்யப் பணமில்லையடி,
மீண்டும் வந்தால் அது தொல்லையடி - இந்த
மேதினி நம்மைப் பழிக்குமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு - நாட்டுப்
பற்றுள்ளோர் போன்று பிதற்றுகின்ற,
எட்டப்பர் கூட்டத்தை ஓட்டுங்கடி - நாம்
ஏமாற மாட்டோ மென்றோதுங்கடி
தேர்தலுக்கு முன்னே கும்பிடுவார் - தினம்
தெருத் தெருவாக அலைந்திடுவார்,
தேர்தல் முடிந்தபின் 'ஐயா' அவர் - தன்னைத்
தேடிப் பிடிப்பதும் தொல்லையடி.

சொந்த நயத்தைக் கருதுமவர் - தம்மை
தூரத்தில் தள்ளியே வைப்போமடி
'பந்தம்' பிடிப்பவர் வேண்டாமடி - மிகப்
பாங்காய் நடந்திடவேண்டுமடி.

கூடுவிட்டு கூடு மாறுகின்ற - சொந்தக்
கொள்கைகள் ஏதுமே இல்லாதார்
கேடுகளை எட்டித் தள்ளுங்கடி - நாம்
கெட்டதுபோது மிப் பாவிகளால்.

நன்மையும் தீமையும் நாடிய பின் - உந்தன்
நல்வாக்கைக் கையாள வேணுமடி
சொன்னேன் இவைகள் மனத்திருத்தி - உந்தன்
பொன்னாட்டை காப்பாற்ற வாருங்கடி.

ஜூலை 1960 (தேர்தல் நேரம்) தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் படைத்தாய்?

கூழுக்குக் கையேந்தி வாழவா - அன்றி
வாழ்க்கைக்குப் போராடி மாளவா
ஏழையை ஏன்படைத்தாய் இறைவா
ஏழையை ஏன்படைத்தாய் இறைவா?

ஓயாது உழைத்து உடல் மாயவா - அன்றி
ஓடாய்த் துரும்பாகித் தேயவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

வெயிற்கும் மழைக்கும் இரையாகவா - அன்றி
வியர்வையாய்ச் சோரி கரைக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

ஏழையாய் வாடி உழலவா - அன்றி
கோழையாய் ஆவி இழக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

கஞ்சிக்காய் மக்கள் கதறவா - அன்றி
கெஞ்சிப் பல் காட்டிப் பதறவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

சீமான்கள் எம்மைச் சிரிக்கவா - அன்று
ஏமாற்றிக் கண்ணால் எரிக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?

தெருவிலே மாடாய்ப் படுக்கவா - அன்றி
அருவருத் தெம்மை அடிக்கவா
ஏழையை ஏன் படைத்தாய் - இறைவா
ஏழையை ஏன் படைத்தாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனை அறிவோம்

கல்லும் மலையும் காடுகளும்
கண்ணில் தெரியா செந்துகளும்,
நெல்லும் நீரும் ஊர்வனவும்
நீண்ட ஆறும் சமுத்திரமும்,
புல்லும் பூண்டும் பறவைகளும்,
புவியிலுள்ள அனைத்தினையும்
வல்லான் வானோர் பொன்நாட்டில்
வாழும் இறைவன் படைத்தனனே!

நந்தவனத்தின் பூக்களெலாம்
நறுமணம் கமழ்வது எதனாலே?
சந்திர சூரியர் உலகத்தில்
தண்ணொளி, வெம்மை தருவதுவும்,
எந்திரமெல்லாம் இயங்குவதும்,
எதனாலென்றே சற்றே நாம்
சிந்தனை செய்து அவன் செயலைச்,
சிறப்பை அறிந்திட வேண்டாமோ?

கருப்பையில் வளரும் உயிருக்கும்,
கல்லினுள் இருக்கும் தேரைக்கும்
பருவ கால மழையின் பின்,
பாரில் முளைக்கும் பூண்டுக்கும்,
அருவமாக மறைந்திருந்தும்
அனைத்தின் கர்த்தாவாய் நின்றும்,
தருணம் வரும் போதணைக்கின்றான்,
தற்பரன் என்றே உணர்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் படைப்போம்

உழவன் திருநாள் இதுவென்று,
உலகம் போற்றும் நன்னாளை,
விளங்கு புகழ்சேர் தமிழர் நாம்
விருப்பாய் நயந்தே மகிழ்வோமே.

பூரணகும்பம் தனைவைத்து
புத்துடை பூண்டு பூவாலே
தோரணம் கட்டி அலங்கரித்து - பொங்கல்
சூரியனுக்குப் படைத்திடுவோம்

தேங்காய்ப் பாலும் சர்க்கரையும்
சேர்த்தே செந்நெல் லரிசியுடன்,
பாங்காய்ப் பொங்கல் நாமிட்டுப்
படைத்து மகிழ்வோம் பண்போடு.

பசியும் பிணியும் இல்லாத,
பண்பு சேர்ந்த வாழ்வோடு,
வசியும் வளனும் சுரந்தோங்க
வணங்கி நிற்போம் பக்தியுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினம்

மேதினம் வந்ததடா - அதன்
மேன்மை தெரிந்ததடா
தீதும் ஒழிந்ததடா - தொழிலாளி
சீரும் மிகுந்ததடா

கடமை யுணர்ந்திடடா - உரிமை
கண்டிப்பாய்க் கிட்டுமடா
திடமாய் நடந்திடடா - நாட்டுக்குச்
சேவைகள் செய்திடடா.

நாடு சிறந்திடவும் - தொழில்
நன்கு செழித்திடவும்,
கேடுகள் நீங்கிடவும் - நாட்டின்
கீர்த்தி பெருகிடவும்,

செல்வம் கொழித்திடவும் - நின்
செயல் திறன் வேண்டுமடா,
அல்லும் பகலுமுன்னை - நீதான்
அர்ப்பணம் செய்திடடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பற்றி

# மக்கள் கருத்து

தெருக்கள் திசைகளென்ன
சென்ற இடம் எங்கணுமே
வரும்தேர்தல் பற்றியதோர்
வாய்ப் பேச்சைக் கேட்டிடலாம்.

கட்சிய பேட்சகரும்
கட்சியற்ற சுயேச்சைகளும்
குட்டிக் கட்சி வாதிகளும்
குதிக்குமொரு தேர்தலிது.

மக்கள் குழுக்குழுவாய்
மனதாரத் தம்விருப்பம்
மிக்க உற்சாக முடன்
எடுத்துரைத்தல் கேட்டிடுவோம்

"கல்லாது விட்டாலும்
காரியம் பார்க்க வல்லான்,
நல்லவன் ஒருவனையே
நாம் தெரிவோம்" என்பாரும்,

"படித்தவன், பண்பாளன்
பாராளு மன்றத்தில்
இடித் துரைத்துவாதாட
ஏற்றவன் தான்" என்பாரும்,

"ஏழைகள் பங்காளன்
எங்கள் தொகுதிக்கு
வாழையடி வாழையென
வரும் மரபோன்" என்பாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம்சாதி வழிவந்த
தருமவான் அவனுக்கு,
இம்முறை வாக்களித்து
அனுப்புவோம்" என்பாரும்,

இப்படியும் அப்படியும்
இன்னும் பலவாக
செப்பமுடன் மக்கள்
செப்புகின்ற வார்த்தை இவை.

தேர்தல் களமதனில்
சேவை செய்ய முன் வந்த
ஓரபேட்சக ரளிக்கும்
உத்தரவாதமிதோ

"என்னைத் தேர்ந்தெடுத்தால்
இந்த எழில் கிராமம்
வண்ண ஒளிபெறவே
வழங்குவேன் மின்சாரம்.

தண்ணீர்க் குறை தீர
தருவேன் குழாய்த் திட்டம்,
மண்ணில் பிணியகற்ற
மருத்துவ சாலை வைப்பேன்.

தெருவுக்குத் தார் போட்டு
ஆற்றுக்கு 'லோஞ்சி' போட்டு
நாட்டுக்கு இயன்றவைகள்
நான் செய்ய பின்நிற்கேன்"

"கந்தண்ணா நம்ம
கிராமத்திலே எலக்சன்
எந்த நிலை?" என்றேன்
இயம்புகிறார் கந்தண்ணா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படித்தான் எல்லாரும்
ஏமாற்றினார்கள் எமை
செப்படி வித்தையெல்லாம்
செல்லாது தம்பி இனி

வாசலுக்கு வருவதுவும்
வளைந்து நின்று பேசுவதும்
ஆசனத்தைக் கைப்பற்ற
அவர்கள் செய்யும் தந்திரங்கள்

ஆசனத்தில் ஏறிய பின்
ஐயாவைக் காணவொண்ணா,
காசு கொடுத்தாற்றான்
காரியம் பார்த்திடுவார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன் உள்ளம்

எண்ணக் குவியல்களைத் திரட்டி - கற்பனை
வண்ண மெருகதனைத் தடவி
பண்ணும் பொருளுமிகு கவியாய் - இந்த
மண்ணில் தருபவனாம் கவிஞன்

துள்ளும் அருவியதைக் கண்டு - அவன்
உள்ளம் பறிகொடுத்தல் உண்டு
கள்ளுண்டார் கொள்ளுமொரு போதை - அவர்
உள்ளத்தில் ஏற்படுவதுண்டு

கஞ்ச மலர்க் கரத்தார் மடியில் - தவழ்
கொஞ்சம் மொழியுடைய மதலை
வஞ்சம் பொறாமை இல்லா - உலகும் - அவன்
நெஞ்சக் கடலிலலை மோதும்.

தாரகைகள் சூழவரும் திங்கள் - அதன்
ஆரமுதான நல்லொளியால்
பாரிற் குவந்தளிக்கும் பயனால் - அவன்
பூரித்து இன்பவெறியடைவான்

காலைப் பரிதியெழும் கோலம் - அந்தி
மாலை யவன் மறையும் மாட்சி
வேலை அலைத் திரையில் காட்டும் - நல்ல
கோலம் செய்வித்தைகளும் காண்பான்

வண்ணமலரில் மது வுண்டு - களித்து
பண்ணை இசைக்குமொரு வண்டும்
விண்ணில் பறந்து வரும் சிட்டும் - அவன்
கண்ணைக் கவருவது முண்டு

வாடி உளஞ்சோர்வார் தம்மை - தானே
தேடிச் சுகமளிக்கும் தென்றல்
ஆடி அசைந்து வரும் தன்மை - அவன்
பாடிக் களிப்படையத் தூண்டும்

கன்னியர் கட்டழகில் மயங்கி - அவர்
கன்னல் மொழியில் மனம் மகிழ்ந்து
அன்னம், மயில், குயிலே என்று - அவன்
அன்பாய்க் கவிதை செய்ய மறவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூம்புனல்

கடல்நீரை உண்டந்த இருண்ட மேகம்
கரைதனிலே சலசலத்துப் பெய்ததாலே
மடைதிறந்த வெள்ளமதாய்ப் பொங்கி வந்து
மண்ணுலகின் பல விடத்தும் பரவலாகி,
திடரையெல்லாம் அரித்தோடி திவலைதள்ளித்
தெருவெல்லாம் சேற்று நிலமாக ஆக்கி,
படம்போட வந்தனையோ உலகுள்ளோரை
பூம்புனலாம் கற்பகமே நீயும் தானே?

கதிரவனின் கடைக்கண்ணின் நோக்கினாலே,
காய்ந்து வரண்டிட்ட காட்டாறெல்லாம்,
பதிகண்ட பாவையென முகமலர்ந்து
பக்கமெலாம் கரைபுரண்டு கதித்துப் பாய்ந்து,
அதிவிரைவாய்ச் சல சலவென்ற கலமாகி
அங்குமிங்கும் சமப்படுத்தி அணிசுமந்து,
கதிநீயே தான் என்று கானம்பாடிக்,
கடலினொடு சங்கமித்துக் களிக்குதம்மா

கண்ட கண்ட பொருள்கள் எல்லாம் கொண்டு வந்து,
கடைத் தெருவில் விலை கூறும் வணிகன் போலே,
அண்டையிலே உள்ளம் பொருள் அனைத்தும் சேர்த்து
அடித்திழுத்துக் கொண்டோடி வந்து கொட்டி.
மண்டலத்தில் நீ விரும்பும் இடங்களெல்லாம்
மசியாமல் இறக்குமதி செய்து நிற்பாய்
கெண்டை வரால் மீனினங்கள் பாய்ந்து பாய்ந்து
கிளர்ந்தெழுந்து துள்ளவரு புனலே வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விடு கடதாசிக் கப்பலோடு
சிறுமரத்தில் கடைந்தெடுத்த தோணியெல்லாம்,
கறங்கடிக்க அலையோடு அள்ளிச் செல்ல,
கண்டவர்கள் இதைப் பார்த்துக் குதூகலிக்க,
சிறகடித்துப் பறைவையினம் இரைகள் தேட,
சிறுநாரை குறிபார்த்து மீனைக் கௌவ,
முறுவலுடன் பாய்ந்தோடும் புனலே உந்தன்
முழுப் பணியால் வளம் கண்டு பொலியும் நாடே.

செந்நெல்விளை வயல் நிலத்தில் படிதலாலே
செழும் பசளை நிறைய விட்டுச் செல்லுகின்றாய்,
நன்மைசெய்து உழவர்களைக் களிப்பிலாழ்த்தி
நாட்டுக்கும் நன்மை செய நடக்கின்றாய் நீ,
நன்னீரைக் குளங்களிலே தேக்கி வைத்து,
நஞ்சை புஞ்சை விருத்தியுற வழிசமைக்கும்,
என்றென்றும் எல்லோர்க்கும் நயம் பயக்கும்
எழிற் புனலே வாழிய நம் இதயம் பூக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனப் பேரரக்கன்

பெண்களினைப் பெற்றவர்க்கோ அமைதியில்லை
பெருநெருப்பை மடியினிலே கட்டல் போல
எண்ணற்ற கவலைகளால் உந்தப்பட்டு
இரவு பகல் பாராது உழைத்துழைத்து,
மண்ணென்றும் பொன்னென்றும் வாங்கித் தத்தம்
வருங்கால மாப்பிள்ளை மார்க்களித்து விட்டால்
கண்ணியமாய்ச் சம்மதிப்பார் உவகையோடு
கலியாணம் செய்வதற்கு விருப்பமென்பார்.

கால் சட்டையணி 'டாக்டர்' 'என்ஜினியர்'
கணக்காளர் போன்றோர்க்குக் 'கைறேட்' வேண்டும்,
காலை முதல் மாலை வரை எழுத்தையாளும்,
'கிளறிக்கல்' காரருக்கு 'மிடில் றேட்' வேண்டும்
சால்வையொடு வேட்டியையும் மறந்து போன,
சட்டம்பித் தமிழருக்கு 'ஷலோ றே'ட்டாகும்?
ஆலையிலே தொழில் பார்ப்போர்க்கேதோசற்று,
'அட்வான்சு' கொடுத்தாலே மணம் நடக்கும்.

சீர் திருத்தம் மேடையிலே பேசுவோர்கள்
செய்கையிலே அதைத் துணிந்து காட்ட வேண்டும்,
பாரெல்லாம் சீதனப் பேய் ஒழிவதற்கு
பாவையர்கள் போராட்டம் நடத்த வேண்டும்.

ஊர்மக்கள் உத்தியோக மோகம் விட்டு,
உழவர் முதல் உழைப்பாளி எவருக்கேனும்,
ஆர்வமதாய்ப் பெண்கொடுக்க முன்வந்தாற்றான்
அகன்றிடுவான் சீதனப் பேய் எனுமரக்கன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் மகனை மாப்பிள்ளையாக்க வென்றால்
இவ்வளவு தொகை எடுத்து வைக்க வேண்டும்.
உன்னாலே முடியாது போனால், செய்ய,
ஒன்றுமில்லை ஏற்ற இடம் இனி நான் பார்ப்பேன்"
என்று விலை சந்தையிலே கூறல் போல,
இதயமற்று விலைபேசும் கொடுமை மண்ணில்
இன்னும்தான் சமூகத்தில் உள்ள தென்றால்,
இதற்கு எவர் பொறுப்பாவார் எடுத்துரைப்பீர்?

உண்பதற்கோ வழியில்லை உடுத்தல் கந்தல்,
உயர்ந்த ரொக்கம் சீதனமாய் அளிப்பதற்கு
என்செய்வார் பெற்றவர்கள். ஐயோ பாவம்!
ஏங்குமிள மங்கையர்க்கு விடிவே இல்லை,
பொன்னுடலும் பொலிவழங்கும் அணியே யன்றிப்
பூண்பதற்கு ஏதுமில்லா வறுமை வாட்டும்
கன்னியரின் வாழ்வுக்குத் தடையாய் நிற்கும்
கண்ணற்ற சீதனப் பேய் அழிவ தென்றோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குவிக்கும் நாடு

வானுயர்ந்த தெங்கு,
வரம்புயர்ந்த செந்நெல்,
கானுயர்ந்த தருக்கள்
கலகலக்கும் கன்னல்,

மான்துள்ளும் சோலை
மயிலாடும் காலை,
தேன் குரலில் குயிலும்,
செந்தமிழைப் பயிலும்.

மலர்தழுவத் தென்றல்
மகிழ்ச்சி கொள்ளும் அன்றில்
அலர்ந்த மலர் கொள்ளை
அவை பறிப்பாள் பிள்ளை

தேன் மணக்கும் பொழில்கள்,
திரை எறிக்கும் வாவி,
வான் முட்டும் மாடம்,
வனிதையரின் கூட்டம்.

அலைக் கரத்தால் முத்தை
அள்ளிக் கரைசேர்த்து
மலை மலையாய்க் குவித்து
மலைக்க வைக்கும் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகன நிலா

கீழ்க் கடல் அந்தத்தில் தங்கக் குடமென
கற்றை பரப்பி எழும்புகிறாள்.
ஆழ்கடல் தோன்றிய அமுதகலசமோ
அம்புலியோ என்று அறிந்திடுவீர்!

மேகத்திரை நீக்கி மெல்லியலாள் மதி
மென்முகத்தை வெளிக்காட்டிடலும்
சோகத் துயில் நீங்கித் துள்ளி எழுமாப்போல்
சுந்தரமாய் வெள்ளைப் பூச்சிரிக்கும்.

இருநிதி பெற்றவர் ஏழை எளியவர்
எவரும் அவளுக்கு ஒன்றே யாம்,
திருவின் உருவினள் தெய்வப் படைப்பினள்
தீபச் சுடரென நீந்துகிறாள்.

வெள்ளி முலாம் பூசி பூவுலகை நறு
வெண்சுதை தீற்றி விளக்குகிறாள்,
கள்ளி இருளவள் ஓடி மறைகிறாள்,
காண்பவர்க்கெல்லாம் குதூகலமாம்.

வானின் நிலவிலே தென்றல் சுகத்திலே,
சித்தம் பொருந்திய காதலர்க்கு,
மோனத்தையூட்டிக் களிப்பையளித்திடும்
மோகனப் புன்னகைப்பால் நிலவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிதை

கவிஞன் மனதின் கருத்தெல்லாம்
கலந்தே எடுத்துக் கற்பனையில்
கவினார் சொற்கள் கொண்டமைத்த
கவிதை வாழும் கவியன்றோ!

கவிஞன் தன்னை மறந்திருந்து
கருத்துச்செறிந்த பொருள் புகுத்தி,
கவிதையாகத் தொடுத்துவிடில்
காலம் முழுதும் அது வாழும்,

கூழுக்காக வீணரைப் போய்க்
குபேரன் வள்ளல் என்றெல்லாம்
வாழ்த்திக் கூறும் கவிதைகளை,
வாழும் கவிதை எனலாமோ?

வாய்மை நெறியில் பிறழாது
வறுமை வாழ்வு வாழ்ந்தாலும்
தூய்மையான எண்ணமுடன்
சுவையாய்ப் புனைதல் கவியன்றோ!

சாதிப் பிரிவைப் புறம் தள்ளி
சகல உயிரும் சமமென்னும்,
நீதி புகட்டும் நற்கவிதை
நிலைத்து நிற்கும் பலகாலம்,

மேழி பிடிக்கும் உழவன்தான்
வியனார் உலகக் காவலனாம்,
வாழ்த்தி யெழுதும் கவிதையதே
வாழும் கவிதை என்றிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் செல்வம் பெருகிடவே
நாளும் உழைத்து உருக்குலையும்
பாட்டாளிக்காய்ப் படைக்கும் பா
பாரில் நிலைக்கும் பாவாகும்

உலகம் செழித்து ஓங்கிடவே,
உவந்து பொழியும் காரினையும்,
பலவாய்ப் புகழ்ந்து பாடுகின்ற,
பாட்டே வாழும் பாட்டாகும்.

சித்தம் புதுமை நோக்கிடவே
சிந்தை வேகத் திறன் கொண்டு,
புத்தம் புதிய கருத்துக்களைப்
புகுத்திப் புனைதல் நற்கவியாம்

கண்ணில் காணும் கவின் மிகுந்த
காட்சிகளிலே மனம் பதித்து,
வண்ணச் சொற்களால் தொடுத்தால்
வாழும் கவிதை என்றென்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை வெறி

வஞ்சிக் கொடியால் இடையமைத்து - செவ்
வாழையின் பூவால் முலை அமைத்து
கஞ்சா மலரால் கரம் பொருத்தி - அதில்
கார்த்திகைப் பூவால் விரல் இருத்தி
பஞ்சிக் குழம்பினால் பதம் செய்து - அவள்
பட்டுடல் எங்கும் இளம் பொலிவால்
கொஞ்சும் மொழியில் தேன் கலந்து - சிறு
கெண்டை விழியில் மருள் பொருத்தி.

வத்தகப் பழஇதழ் வாய் விரிய - உள்ளே
வண்ண வரிசையில் பல் தெரிய,
மெத்தச் சிவந்து குழிகள் விழ - அதில்
முல்லைச் சிரிப்பு வெளித் தெரிய,
கொத்து மல்லிகை மணம் பரப்ப - அதில்
கோல அளிகள் பண்ணிசைக்க - என்
சித்தம் களித்திட நான் சுவைத்தேன் - அதில்
சிந்தனை என்ற சிறகடித்தேன்.

காலைக் கதிரவன் கண்விழிக்க - அவன்
காதலி கண்டு உளம் களிக்க, பூஞ்
சோலை அரும்பு மடல் விரிக்க - அந்தச்
சுகந்தத்தில் தென்றல் உடல் சிலிர்க்க - அக்
காலை சுரும்பு பறந்து வந்து - மலர்
தேங்கிய தேறல் மிக நுகர்ந்து
ஞாலம் விரும்பிடும் பண்ணிசைக்க - என்
நாவும் எதையோ முணுமுணுக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்கள் பயந்து மருண்டோட - மட
மயில்கள் களித்து நடமாட,
வேனிற் சுகத்தின் அரவணைப்பால் - குயில்
வீணை இசைக்க மனக்களிப்பால்,
கானில் விலங்குகள் வாய்திறந்து - இந்தக்
காட்சியைக் காணுமாம் மெய்மறந்து,
ஆனந்த வெள்ளத்தில் நான் குளிப்பேன் - அந்த
அகமலர்வால் இதை விள்ளுவனே

விண்ணை அணைக்க விளை முகிலாம் - அது
வெள்ளியினால் செய்த ஒளித்துகிலாம்,
வண்ண ஒளித்திரையது விலக்கி - அந்த
வாண் முகத்தாலே இருள் போக்கி
மண்மேல் பவனி வருகின்றாள் - தண்
மயக்க மருந்தைத்... தருகின்றாள்,
எண்ணம் நவம் நவம் தூண்டுகின்றாள் - உள்ளே
எழுச்சியெனும் விதை ஊன்றுகிறாள்

நீலக் கடல் அலை துள்ளிடவும் - அதில்
நெஞ்சில் கவலைகள் நீங்கிடவும்,
மாலைவெளியில் உடல் குளித்து - மந்த
மாருதம் தீண்ட உடல் களித்து
சோலை யருகினில் நானிருக்க - வானம்,
செக்கச் செவேலெனத் தானிருக்க,
கோலவெறியொடு காட்சிதரும் - அந்தக்
கொள்ளை அழகினிலே நான் திளைப்பேன்

செந்நெல் வயலில் செழித்தோங்கும் - அதில்
செம்பொன் நிறத்தில் ஒளிதேங்கும்,
கன்னல் காற்றில் கலகலக்கும் - அங்கே
கமுகு, கதலிக் காய்கள் தொங்கும்

வண்ண வருக்கன் பலாவிருந்து - சிந்தும்
வாசனைத் தேறல் விரைந்தோடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் நீந்திடும் வாவியிலே - சேரும்
அற்புதக் காட்சியில் கண்துயில்வேன்.

ஆற்றில் அலைகள் திரை விரிக்க - அதில்
ஆம்பல் இலைகள் படம் விரிக்க, அது
காற்றில் அசையக் கிலிபிடித்த - கெண்டை
கடிதே துள்ளிப் பாய்ந்தோட,
சேற்றில் வளரும் செங்கமலம் - கண்டு
சே என ஏளனமாய்ச்சிரிக்க, இதைத்
தேற்றல் போல நுணல் ஒலிக்க - என்
சித்தம் கலங்கித்தலை சுற்றும்.

நேற்று வாழ்ந்தோர் இன்றில்லை - உடல்
நிலைத்து இருக்கும் உடமையதா?
காற்றில் கலந்த மணம் எங்கே - நான்
காலை கண்ட மலர் எங்கே?
கூற்று உயிரைக் குடித்ததுபோல் - அவை
கோலமிழந்து உதிர்ந்து விழும், இத்
தோற்ற விந்தையதை எண்ணி - மனத்
தோணி துயரப் பனல் மிதக்கும்,

பூனையும், நாயும் உடன் புசிக்கும் - நீர்
புலியும் பசுவும் உடன் குடிக்கும்
கானக் குயிலது முட்டையிட - அதைக்
காகம் விரும்பி வளர்த்து விடும் - இம்
மானதக் காட்சியில் நான் கிறங்க - உள்ளம்
மண்டி அமைதியில் குழையா பர
மானந்த போனகம் உண்டு விட்டேன் - அகம்
மட்டில் மகிழ்ச்சியும் கொண்டு விட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னூர்

நீராரும் வாவியின் பால்
நிலமகள் மருதம் சூழ்ந்து
பாரெலாம் புகழ், வீரப்
பண்பமை மக்கள் வாழும்
இவ்வூரின் வடபால் உள்ள,
கல்லடி முனையில் வந்து
கண்ணகி கொலுவிருக்க,
தென் திசை தில்லைப் பிள்ளையார்
காவலாய் வீற்றிருக்க
வானுயர் தெங்கினோடு
வருக்கை, மா, கதலி யெல்லாம்,
அணிகலனாய் விளங்கி
அழகுக்கு அழகு செய்ய,
சேல்விழி மாதரார் தம்

சிரங்களில் குடங்களேந்தி
நூலிடை நுடங்க மற்றோர்
குடத்தையும் இடையில் தாங்கி,
அணி அணியாகச் செல்லும்
அரியதோர் காட்சியோடு,
வாவியில் மீன்கள் பாயும்,
வயல்களில் மேதி மேயும்,
முக்காலி கட்டி, மாந்தர்
முதுகெலாம் வலி யெடுக்க,
ஏற்றமே பிடித்திறைத்து
என்றுமே பயிர் வளர்க்கும்,
என்னுடை இனிய நல்லூர்,
எதுவெனில் துறை கொள் நீலா
வண்ணையாம் பண்ணை கொண்ட
வளமுடை இடம் என்பேனே.

முக்காலி: மூன்று தடிகளால் கட்டி ஏற்றம் இறைக்கப் பயன்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவி இன்பம்

தோளோடு தோள்கள் சேரும்
சிற்றிடைகரங்கள் கோர்க்கும்
தொட்டுடல் அணைப்பர், மேனி,
சிலிர்த்திடும் உணர்ச்சியாலே,
உதட்டுடன் உதடு ஒட்டும்,
உணர்வுகள் ஒன்றி நிற்கும்,
பதட்டமோ அதிகரிக்கும்,
பக்கம் செல்லாது பார்வை,
கண்களோ இறுகிமூடும்,
கரங்களின் வேகம் கூடும்,
உலகமே மறந்துபோகும்,
ஆளுக்காள் ஆடையாக,
ஐக்கிய மாகிப்போவர்,
பாழும் அவ்விரண்டு மெய்யும்
படர் சில நிமிடம்பின்னர்
அயர் வொடு வியர்வை நீந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ William Wordsworth என்ற ஆங்கிலக் கவிஞரின் 'The Solitary Reaper' என்ற கவிதையின் தமிழ் வடிவம்.

# ஏகாந்தமான அறுவடைப் பெண்

தனிமையிலே அறுவடையில் ஈடுபட்ட
தண்மதிபோல் முகமொக்கு நெகிழ்ந்து நின்ற
வனிதையினைத் தூரத்தே கண்டேன், அன்னாள்
வளைத்துடலை வெட்டுகையில், கட்டும்போது
இனிமையுற இசைத்திட்ட சோகப் பாவின்
இடையோடிப் பொருள் பொதிந்த அந்த நாதம்
பனிபடிந்த மலையினது பள்ளத்தாக்கில்
பக்கமெலாம் மிகப் பரவி எழுந்ததாங்கே.

பாலைவனக் கற்பகமாம் பசிய காவில்
பாடும் இராப் பறவைகளின் பாடலாங்கே,
சாலவுமே களைத்த பிரயாணிகட்கு
சற்றேனும் இதமாக அமையவில்லை,
வாலை வயதாள் இசைத்த உணர்வுமிக்க
வாகான தொனிபோல, இலைதளிர்க்கும்
காலத்தே கூவுகின்ற குயிலின் பாட்டில்
கண்ணியமாய் என்றேனும் கேட்டதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவது அவள் தானும் என்ன வென்று
பாங்குடனே எந்தனுக்கு இயம்புவீரா!
சாடுகின்ற கடும் சமரின் செய்திதானோ?
சஞ்சலத்தைத் தரும் பழைய நிகழ்வுதானோ?
நாடுறையும் மக்களது வாழ்வினோடு
நல்லிணைப்பு ஏதேனும் கொண்ட பாவோ?
வாடுகின்ற நிலையதுவோ பொருளிழந்து
வனிதையவள் இவ்வரிய வையகத்தில்?

கீதத்தின் பொருள் எதுவே யானபோதும்
கிளர்ச்சியோடு சுறுசுறுப்பாய் அவள் தொடர்ந்து
நாதத்தை இசைத்தபடி தொழிலில் ஒன்றி
நன்னயமாய் ஈடுபட்ட அந்தக் காலை
சீதமிகு மலை முகட்டின் உச்சியேறி
சென்றடைந்தேன் அதன் பின்னர் இனிய
இதயத்தைத் தொட்ட அந்த இசையை மீண்டும்
என்றேனும் யான் கேட்டேன் இல்லை மாதோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாளுக்கோர் மடல்

நாற்பத்து ஐந்தாண்டு நீண்ட காலம்
நன்மையொடு தீமை யென அனைத்தினோடும்
ஏற்றமது இறக்கமது எவற்றினோடும்
என்னோடு இணைந்திருந்தும் சற்றும் கூட
மாற்றெதுவும் குறையாத தங்கமாம் என்
மனையாளுக்கொரு மடல் தான் இஃது நீங்கள்
ஏற்பீர்கள் நிசமெனவே எண்ணியே நான்
இதனை வரைந்திட இன்று விழைகின்றேனே.

கொழிக்கின்ற செல்வத்தில் திளைத்திருந்த
குடும்பமது ஒன்றினிலே தோன்றித் தேக
எழிலினினும் உள்ளத்து அழகினோடும்
என்றென்றும் சிறந்திருந்த உன்றனுக்கு,
விழித்துணையாயமைந்து வந்து இன்று நின்
வாழ்க்கைக்கும் துணையாக வந்தேன் நானே
களிக்கின்றேன் உன்றனுடன் வாழ்ந்த நீண்ட
காலத்தை யெண்ணி யெண்ணி என்றும் தானே!

பின்தூங்கி முன் எழுவாய் என்றும் நீயே,
பேரணிகள் நயத்ததே இல்லை நன்றி சொல்வேன்,
நன் மக்கள் பலர் பெற்று வளர்த்தெடுத்தாய்,
நலமோம்பிப் பல்லாண்டு பேணி வந்தாய்,
கல்வியெனும் பயிர் வளர்த்துக் காலமெல்லாம்,
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்தாய்,
எல்லார்க்கும் நல்லவளாயான நின்னால்
இனிய பல பேறு பெற்றேன் இணைந்ததாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்கு ஒரு தாதி யெனப் பெற்றெடுத்த
பாலகர்க்கு ஆசானாய் இனிதிருந்தாய்,
மதியுரைக்கும் அமைச்சனென புத்திகூறி
மஞ்சத்தில் சுகம் தந்த மனைவியாக
கதிநீதான் என்றிறைவன் அளித்தான் நின்னை
காத்து நின்றாய் தாயாக இன்றுவரை,
உதிரத்தை ஈந்தறுவர் மக்களீன்றாய்
உத்தமியே மகராசி உவக்கின்றேனே!

தெள்ளரிய மனவலுவும் நன்மை, தீமை
தேர்ந்த நல்ல ஞானமுமாய்த் திகழ்ந்திருந்து
வள்ளுவனார் வகுத்த றத்தின் வழியில் நின்று
வாழுகின்ற அவ்வழியில் வாழ்கின்றேன் நான்.
உள்ளத்தின் அழகினையே காட்டி நிற்கும்
உருக்கமுறு புன் முறுவல் நினக்கு உண்டு.
எள்ளளவே யானாலும் தீமையாண்டும்
எவர்க்கும் நீ செய்த தில்லை இனிய பேறே!

குன்றினையே நிகர்க்கின்ற சீமான்மாரும்
கோவணத்து ஆண்டிகளாம் பஞ்சமாரும்,
ஒன்றாவார் உயிர்பிரிந்து நிலையினாலே,
உற்றறியும் என் இனிய மனையாள் நீயே
என்றோ ஓர் நாள் நாங்கள் பிரிதல் திண்ணம்
இயற்கையதன் நியதியது இதுவே யன்றோ,
அன்று நீ அழுது புலம்பிடவே வேண்டாம்
ஆறுதலைச் சொல்லிடு நம் சுற்றத்தார்க்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் கடைசி நேரம்

ஆடிய ஆட்டமெல்லாம்
அடங்கியே உடல் சுருங்கி,
தேடிய செல்வம் யாவும்
சிரிக்கவே அவனைப் பார்த்து,
வாடியே உதிரும் பூவாய்
வையகம் நீங்கும் வேளை,
தாடியும் சடையுமாக
சங்கரா படுக்கிறாரே!

புலனெலாம் அடங்கி ஓய
புத்தியும் கலங்கித் தேய,
மலங்கியே விழிக்கின்றாரே
மல்லாந்து புரள்கின்றாரே,
கலக்கமாம் அந்த வேளை
கடந்த நாள் நினைவு எலாம்
சலன நுண்படத்தைப் போல
தம் மனத்தோடிப் போகுது.

பண்ணையின் ஊழியர்க்கும்
பண்பொடு படி கொடாது,
உண்ணும் வேளை வந்தபேர்களை
ஓடிட வெருட்டி யனுப்பியதும்,
எண்ணத்தில் அறமே இல்லா,
தெதனிலும் பணமே நோக்காய்
கண்ணிய மற்ற வாற்றால்
காசு, பொன் பொருளைச் சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணியைப் படியாக்கி மேலே
ஏறிய பின் உதைத்ததும்,
வீணிலே அகம்பாவத்தால்
வெறியொடு வஞ்சம் தீர்த்ததும்,
காணியின் பிசகால் சொந்தக்
காரனை உயிர் குடித்ததும்,
பேணிய கற்பைப் பெண்கள்
பெரும் இடர்படப் பறித்ததும்,

கலப்படம் செய்யும் வித்தை
கைவந்த கலையாய்க் கொண்டும்,
புலப்படக் கொடுமை செய்யும்
புலியெனப் புகழே பெற்றும்,
பல கட்டுக்கதைகள், மொட்டைக்
கடிதமாய் வரைந்து தள்ளி, தான்
நலப்பட எதுவும் செய்யும்
நாயகர் இவரேயாகும்.

வேறு

உருண்டும் புரண்டும் உடல் பதற
உழத்துவாரம் எடுக்கிறது.
வரண்ட நாவும் பஞ்சடையும்,
கண்ணும் திறந்து கிடக்கிறது,
இரண்டு செவியும் செயலிழக்க
இடையே மூச்சு இழுக்கிறது,
திரண்டு சுற்றம் கதறியழ
திடீரென்றுயிரும் பிரிகிறது.

முடிவு ஒரு நாள் வருமெனவே
முன்னே அறியா வகையிலே,
படியின் வாழ்வு சதமென்றே
பணமும் புகழும் சேர்ப்பதிலும்,
அடிதடி சண்டை செய்வதிலும்
அவமாய்க் காலம் கழித்தவர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிநேரம் உணர்ந்தென்ன
காலம் கடந்த ஞானமதாம்.

தேடிய சொத்து எத்தனையோ!
திரட்டிய பணந்தான் எவ்வளவோ!
மாடிமேல் மாடி கட்டுவதும்,
மகிதலம் போற்ற வாழ்வதுவும்,
ஆடிய ஆட்டம் ஓய்ந்ததன் பின்
ஆருயிர் பிரியும் வேளையிலே
கூடியே பின்னர் வந்திடுமோ?
கூட வருவது நல்வினையே.

வேறு

வாழ்க்கையே இன்ப ஊற்றாய்
வள மிகும் சோலையாக,
வாழ்க்கையை வசந்த மாக்கி,
வாழ்ந்திட்ட போதி லெல்லாம்,
வாழ்க்கையின் இறுதி பற்றி
வழித்துணை பற்றியெல்லாம்
ஆழ்ந்தவர் நோக்கினாரா
அதற்கொரு வழி கண்டாரா?

சீரிய முறையில் செல்வம்
சேர்த்திடல் பெருமையாகும்,
நேரிய வழியில் கீர்த்தி
நிலை நாட்டிடல் சிறப்பதாகும்,
சூரியன் ஒளியை ஈந்து
தொல்லுயிர் புரத்தல் போல,
வாரி நீ வழங்க வேண்டும்
வறுமையில் உழல்வோர்க்கெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமிப் பேரழிவையொட்டி எழுதப்பட்டது.

# பொல்லாப் பெருங்கடல்?

ஏன் கடலே சினந்தாய் நீ
என்ன குற்றம் நாம் செய்தோம்?
வான் உயர்ந்த அலைக்கரத்தால்
வாரிச் சென்றாய் அனைத்தையுமே.

மக்களை மட்டுமா காவு கொண்டாய்
மண்ணை நீ விட்டாயா?
எக்காள மிட்டு இரைந்தன்றோ
ஏப்பமிட்டாய் உயிர் குடித்து

பண்டைக் குமரி கொண்டாய்,
ப∴றுளி ஆற்றையும் சேர்த்தாய் நீ
அண்டை நாடுகள்தாம் உன்
அரக்கப் பசிக்கு இரையாமோ?

கருணைக்கு கடலை உவமிப்பார்
காதலுக்கும் அதனையே ஒப்புக்காக
வருணித்ததுப் புலவரெல்லாம் நின்னை
வாழ்த்தியதும் பொய்யுரையோ?

பொல்லாப் பெருங்கடலே நீதானும்
பொங்கிச் சினந்தெழுந்து ஆர்ப்பரித்து
எல்லாம் விழுங்கித் தீர்த்த பின்னர்
இன்றமைதி ஏன் கொண்டாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஒளி தருக

மழைக் கையாலே
மானிலம் எங்கும்
அள்ளிக்கொடுத்த
வருணபகவான்
கட்டியம் கூறிய
காலத்தின் பின்னர்
ஆளான இளமகள்போல
எங்கும் பசுமை
இளவேனில்
உலாவர
தேறல் அளைந்த
தென்றல் வருட
வரும்
சித்திரை ஆண்டே
இத்தரை யெங்கும்
மக்கள் மனங்களில்
மலர்ச்சி பொங்கிட
முன்னைய ஆண்டுபோல்
முகம் சுழிக்காது
அன்புடன் வருக
அருள் ஒளி தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மகளே வருக!

மலரனைந்த தென்றல்
மனதினை வருடி நிற்க
புலரிப் பொழுதில் எழும்
புதிய இளம் சூரியனும்
மலர்ச்சி பெற்று மக்களை
மகிழ்வுற வரவேற்று நிற்க
தைமகளே வருக - தங்க
தைமகளே வருக!

புத்தாடை அணிந்து
புதிதாகக் கோலமிட்டு
பானையிலே பொங்கல் செய்து
பலருக்கும் பகிர்ந்தளித்து
சேற்றுக்குள் கால்புதைத்து
சோற்றுக்காக உழைக்கும் எங்கள்
போற்றுதற்குரிய உழவரை வாழ்த்த
தைமகளே வருக - தங்க
தை மகளே வருக!

வந்திடுவாய்
தைமகளே
வளங்கள் பல பெருக்கிடவே
தந்திடுவாய் தைமகளே
தரணியெங்கும் நல் வாழ்வு
கதிரவனுக்குக் கைகூப்பி
கமக்காரரிடம் திருநாளைப் போற்ற
வந்திடுவாய் தைமகளே - வந்து
வாழ்த்திடுவாய் தைமகளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பூராம் எங்கள் ஊர்

பட்டியிலே மாடடைத்து - மண்
முட்டியிலே பால்கறந்து குண்டான்
சட்டியிலே முறுகக்காய்ச்சி
கட்டித் தயிராக்கியதை
வெட்டியெடுத்து - வெண்கல
வட்டியிலே பிசைந்துண்ணும்
மட்டக்களப்பு என்னும்
மாண்புடையது என் ஊராம்!

பாடும் மீன் இன்னோசை
பாவலர்கள் கவியோசை
நாட்டுப்புறம் வாழ் மக்கள்
நயமிகுந்த பாட்டோசை
கூட்டமாய் மாதரிடும்
குரவை ஒலி ஓசை
காராளர் ஏர் ஓசையென
கலகலக்கும் மட்டூராம்!

தென்றலது முத்தமிட
செந்நெல் தலைகுனிய
அன்றலர்ந்த பங்கயங்கள்
அளியினங்கள் விருந்தாக
கெண்டை மீன் துள்ளும்
கீர்த்திமிகு வாவி கொண்ட
மண்டலத்திலே சிறந்த
மட்டூராம் எங்கள் ஊர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரங்கள் இணைந்து விட்டால்...

கரங்கள் இணைந்து விட்டால்
காதம் நாம் சென்றிடலாம்
கிரங்கள் உயர்த்து நின்று
செயல் பல செய்திடலாம்
வரங்கள் பல பெற்று - நம்
வாழ்வையும் உயர்த்திடலாம்

கரங்கள் இணைந்து விட்டால்
காற்றை வசமாக்கிடலாம்
அரங்கங்கள் ஏறி நின்று
அகிலமதைக் கவர்ந்திடலாம்
தங்கம் முத்தெல்லாம்
தாமாக வந்தடையும்
குரங்கான மனமடக்கி
குவலயத்தை வென்றிடலாம்

கரங்கள் இணைந்து விட்டால்
கடல்மேலும் நடந்திடலாம்
சுரங்கத்திரவியங்கள்
சேர்த்திடலாம் ஏராளம்
விரும்பும் பொருளெல்லாம்
வெகுவாகச் சேர்த்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்கள் இணைந்து விட்டால்
கற்பகத்தைப் பெற்றிடலாம்
கருங்கல் மனங்களையும்
கரைந்துருகச் செய்திடலாம்
வருந்தும் எளிய மக்கள்
வாழ்வுயரச் செய்திடலாம்
பொருந்த நடந்திடினோ
பொன் மனது பெற்றிடலாம்

கரங்கள் இணைந்து விட்டால்
கலைகள் எல்லாம் கற்றிடலாம்
அருந்துவது கூழ் எனினும்
அமிர்தமென எண்ணிடலாம்
வருந்தியே கற்ற கல்வி
வாழ்க்கைக்கு வழிகாட்டும்
பெருந்தனங்கள் சேர்த்து
பிறர்க்கீந்து வாழ்ந்திடலாம்!
கரங்கள் இணைந்து விட்டால்
பரம் பொருளைக் கூப்பிடலாம்!

(மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கத்தால் வெளியிடப்பெற்ற
'இணைகரம்' பத்திரிகையில் வெளிவந்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

ஆசைக்கு அணையேதும் இல்லை
அது ஒழிந்தால் நமக்கேது தொல்லை
ஓசைக்கு உண்டோதான் எல்லை
ஒவ்வொருவருக்கும் ஏதோதோ ஆசை!

துறவிக்கு தவம் மீது ஆசை
தொண்டர்க்கு சேவை மீது ஆசை
அறவோனுக்கு தருமத்தில் ஆசை
அந்தணர்க்கு யாகத்தில் ஆசை!

கற்றோருக்கு கல்வி மீது ஆசை
கருமிக்கு பொருளிலே ஆசை
பெற்றோர்க்கு பிள்ளை மீது ஆசை
பெண்ணுக்கோ அழகாக ஆசை

அரசனுக்கு சிங்காசனத்துக்கு ஆசை
ஆண்டிக்கு இறைவன் மீது ஆசை
புரவலர்க்கோ பொருள் தேட ஆசை
புலவருக்கோ கவி மீது ஆசை

இல்லார்க்கும் உள்ளார்க்கும் ஏதோ ஒரு ஆசை
ஏர் பூட்டும் உழவனுக்கோ மழைமீது ஆசை
கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கடைசிவரை ஆசை
கலியுகத்தில் ஆசைவிட்டு கடைத்தேறுவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை செய்ய வேண்டும்

அல்லல் தவிர்த்தறத்தைப் பெருக்கித் - தம்
அன்பர் மனக்கோயில் குடிகொண்ட
வல்ல பரம் பொருளின் தன்மை - மிக
வண்ணமுற அமையும் படியாய்
சொல்லும் பொருள்நயமும் கலந்து - நன்கு
சோபை தரும் சிறப்பு மிகுந்து
பல்லோரும் ஏற்றதெனப் போற்ற - ஒரு
பக்திக் கவிதை செய்ய வேண்டும்?

துள்ளும் அருவியெனப் பாய்ந்து - மலை
சுற்றி வளைந்து வளைந்தோடி
கள்ளுண்பார் போதையது கொண்டு - எதிரே
கண்டவற்றை அள்ளிவரும் ஆறும்
வெள்ளிப் பனிமலையின் தோற்றம் - அங்கே
விண்ணைத் தழுவ முனை முகில்கூட்டம்
கொள்ளை கொள்ள இதயம் களிப்பாய் - நான்
குலவு கவிதை செய்ய வேண்டும்

கார்குழலில் மல்லிகையை சூடித் - தம்
கண்ணதற்கு மையதனைத் தீட்டி
பாருலகின் அணிகலன்கள் யாவும் - தம்
பொன்னுடலில் வண்ணமுறப் பூட்டி
தாரகைகள் சூழ வரும் மதியை - அவள்
தம் வதனமெனக் கொண்ட மாதர் அவர்
பேரழகை போற்றி நயமாக
கவிதை பலசெய்ய வேண்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியின் தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
பாரார் புகழ் எங்கள்
பௌத்திரனே கண்ணுறங்கு,

அகதியாய் வந்தவனே
யாரும் உறவற்றவனே
சகதியில் பிறந்த எந்தன்
தமிழ் மணியே கண்ணுறங்கு,

தந்தையை இழந்து உன்
சகோதரனையும் நீ பிரிந்து
வந்தனையே ஐயா, என்
வளர்மதியே கண்ணுறங்கு,

ஏணையிலே நீ உறங்கு - என்
இந்திரனே நீ யுறங்கு
சாணையில்லாக் குளிரில் என்
சந்திரனே கண்ணுறங்கு!

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
பாரார் புகழ் எங்கள்
பௌத்திரனே கண்ணுறங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

மண்ணுக்குப் பயிர் அழகு
மரத்துக்கு இலை அழகு

விண்ணுக்கு மதி அழகு
வீரனுக்கு வாள் அழகு

பெண்ணுக்கு ஆண் அழகு
பெருமைக்குப் பணிவழகு

கண்ணுக்கு இமையழகு
காதலுக்குப் பிரிவழகு

மலருக்கு மணமழகு
மன்னர்க்குச் செங்கோலழகு

புலவுக்குக் கதிர் அழகு
பூவுக்கு அரும்பழகு

நலவுக்கு மனமழகு
நாளுக்குப் பொழுதழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைக்குக் குலையழகு
வண்டுக்குச் சிறகழகு

காளைக்கு விறல் அழகு
கற்றோர்க்கு அறிவழகு

கேள்விக்குப் பதிலழகு
கெளிறுக்கு முள் அழகு

வள்ளலுக்குக் கொடையழகு
வரட்சிக்கு மழையழகு

கடலுக்கு அலை அழகு
காலுக்குக் கொலுசழகு

பள்ளத்துக்கு நீர் அழகு
பார்வைக்குக் கனிவழகு

மண்ணுக்குப் பயிர் அழகு
மரத்துக்கு இலை அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 பக்திப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையம்பலப் பிள்ளையார் மீது பாடப்பட்டது

1. தில்லை யம்பலப் பிள்ளையாரே - எங்கள்
தீவினைகள் நீக்கிடுவாய் பிள்ளையாரே
எல்லை இல்லா ஆனந்தத்தைத் தந்து - எமை
எப்பொழுதும் வாழவைப்பாய் வந்து ....... (தில்லை)

2. தந்தை தாய் உலக மெனும் பொருளை - நீ
தம்பிக்கு உணரவைத்தாய் அருளால்
வந்தனை செய்அடியார்க்கு என்றும் - நீ
வாரி வாரி வழங்கிடுவாய் நன்று.... (தில்லை)

3. மயிலேறி மாம்பழத்தை நம்பி - அன்று
மலைக்காது பறந்தானாம் தம்பி
கயிலை மலை அமர்ந்தவனோ கனியை - உன்
கரங்களிலே திணித்தானாம் இனிதே ....... (தில்லை)

4. எல்லையிலே இனிதமர்ந்து என்றும் - எமை
இன்பமுடன் வாழவைப்பாய் நன்று
தொல்லை நீக்கித் தந்திடுவாய் அருளை - நீ
தொலைத்திடுவாய் பிடித்திருக்கும் இருளை... (தில்லை)

5. ஆலமர அரசமர நிழலிலிருந்து - நாம்
ஆறுதலைப் பெறத் தருவாய் அருள் விருந்து
சீலமுற விக்கினங்கள் நீக்கி - எமை
செலுத்திடுவாய் செம்மை வழி ஆக்கி..... (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வியாசமுனி வேண்டுதலின் விருப்பால் - நீ
வரைந்தாய் பாரதத்தை மருப்பால்
தியானம் எனும் மந்திரத்தை உச்சரித்து - எம்மை
தீண்டும் வினை ஓட்டிடுவாய் எச்சரித்து..... (தில்லை)

7. முப்பழங்கள் விருப்புடனே வைத்தோம் - எம்
மும்மலங்கள் நீக்கிடவே சேவித்தோம்
அப்பளங்கள் சுண்டல்வடை தந்தோம் - நீ
ஆறுதலைத் தந்திடுவாய் வந்தே...... (தில்லை)

8. அவ்வை தனைக் கயிலை மலை சேர்த்தாய் - அவள்
அடைந்ததோ ரானந்தத்தைப் பார்த்தாய்
செவ்வையாய் வாழத்தந்திடுவாய் அருளை - நீ
தீர்த்திடுவாய் தீவினையாம் மருளை..... (தில்லை)

9. தம்பிக்காக நீ குஞ்சரமாய் வடிவெடுத்தாய் - கெட்ட
அவுணர்களை அழிப்பதற்குப்போர் தொடுத்தாய்
காகவுருவாக அகத்தியரின் கமண்டலத்தை - தட்டி
காப்பாற்றினாய் தமிழ் மண்டலத்தை...... (தில்லை)

10. பொற்பதங்கள் சிரங்குவித்து அழுதேன் - தமிழ்
பாமாலை சாத்தி யுனைத் தொழுதேன்
நற்பதங்கள் தந்து எனைக்காத்து - நின்
நாவினிக்க வந்து நிதம் வாழ்த்து.... (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 27.07.2007 எமது ஊர் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷே கத்தையொட்டி எழுதியது.

# தில்லையம் பலத்தானைச் சேவிப்போம்

1. நீராடும் வாவியிலே மீன் மகளிர் பாட
காராளர் ஏர் ஊரும் கழனிகள் மிகச் சூழ்ந்து - சீராரும்
துறைநீலாவணை யெனும் தொல்பதிமீதமர்ந்த
கறையானை முகத்தான காப்பாம்

2. செந்நெல் வயலாட சேற்றினிலே பங்கயங்கள்
நன்கு மலர்ந்து நறிய மணம் பரப்ப - பொன்றா
எழில் பரப்பும் எம்மூராம் இப்பழம் பதியினிலே
விழித்திருந்து காக்கவாவிரைந்து

3. தென்திசையில் அமர்ந்த தில்லை அம்பலத்தானின்
பொன்பதங்கள் என்றென்றும் - மன்பதைகள்
பிறவியறுத்துப் பிறாநெறி காட்ட வல்ல
சிறப்பாம் மருந்தென்றே தேர்

4. வேழ முகத்து விநாயகன் அடிதொழுதிடில்
ஆழும் நம்தீவினை அத்தனையும் - நாளும்
காத்தெமை ரட்சித்துக் கடிய வினைகளைக்
காதம் துரத்துவான் கடிது

5. பொல்லாப்பிழை பொறுத்துப் புரியும் வழிகாட்டும்
தில்லையம்பலத்தானைச் சேவித்தால் - அல்லல்
என்றும் தொடராது கிருபையிலும் செம்மையாய்
நன்று நாம் வாழலாம் நயந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன் திருஊஞ்சல்

பாதிமதி யணிந்த பரமன் திருவருளால்
ஆதி உலகுய்ய அவதரித்த கோதில்லா
தொந்தி வயிற்றான் தூயபதம்பணிந்து
எந்தை மருகன் புகழை இயம்புகிறேன்

1. சீர்மேவு தென்கதிரை விளங்கும் கந்தன்
தேன்மொழியாள் குறவர்குல வள்ளிப்பாவை
பார்மீதில் தினப்புனமே காக்கும் காலை,
பயப்படுத்தி அவளை வசமாக்குதற்காய்
கார்மேக யானையதாய் உருவெடுத்துக்
கானகத்தில் அக்கணமே நின்ற அந்தத்
தாரணியும் மூத்தவன்தன் மலர்ப்பதங்கள்
சதம் பணிந்து பாப்புனைந்து தருகின்றேனே.

2. வள்ளிதனை வதுவையது செய்ய எண்ணி
வாலிபத்தைக் கரந்து கிழவடிவம் தாங்கி,
புள்ளிமயில் நின்றாடும் மாவனத்தில்
பூவையவள் தனித்திருக்கும் வேளைபார்த்து
கண்ணனைப்போல் வேடமொடு கடிதே சென்று
களங்கமுறச் செய்தந்தக் கன்னி தன்னை
கொள்ளை கொண்ட சண்முகனே ஆடீரூஞ்சல்
கோபாலன் மருமகனே ஆடீரூஞ்சல்.

3. சரவணமாம் பொய்கைதனில் ஆறுபேராய்
தானிருந்த உன்றனையே ஒன்றுசேர
அரவணிந்தான் திருத்தேவி அணைத்தபோது
ஆறுமுகனாயினை நீ அகிலந்தன்னில்
பிரமனுக்கு "ஓம்" என்ற பிரணவத்தின்
பொருளுரைத்த பெம்மானே, அடியார் தேடும்
தருணமதில் காப்பவனே ஆடீரூஞ்சல்
தந்தைகுருவானவனே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்குமொரு சுடர்வேலால் கிரௌஞ்சம் என்ற
எழிலார்ந்த பொருப்பதனை பிளந்திரண்டாய்
கலங்குகின்ற வானவர்தம் சிறையைமீட்டு
கண்ட துண்டம் செய்தசுரர் சிரங்கள் கொய்தாய்,
மலங்கி நின்ற சூரனவன் இரந்து வேண்ட
மறுக்காது சேவலையும் கொடியேயாக்கி,
விளங்குபுகழ் சரவணனே ஆடீரூஞ்சல்
வேலவனே சண்முகனே ஆடீரூஞ்சல்

5. முப்பத்து முக்கோடி தேவர் வாழ்த்த
மும்மூர்த்திகளும் நின்றுன்னைப்போற்ற
எப்புறமும் வேதங்கள் இனிது ஏத்த
இந்திரனும் சந்திரனும் இறைஞ்சி நிற்க
செப்பமுடன் அடியவர்கள் கீதம் பாடக்
கின்னரர்கள் கிம்புருடர் நடனம் ஆட
இப்புவியில் எழுந்துவந்து ஆடீரூஞ்சல்
இன்பமுடன் சிரித்தொருகால் ஆடீரூஞ்சல்

6. தருமமது தளிர்த்துலகில் அதர்மம் மாய
சற்குணமே மிகுந்தோங்கி நல்லோர்வாழ
திருப்பரஞ்செங்குன்றில் இருதேவியோடும்
செங்கை தனில் ஒளிர் சக்தி வேலை யேந்தி
விருப்புடனே மஞ்ஞையிலே வீற்றிருந்து
வியனுலகில் நோய்பிணிகள் மேவிடாமல்
புரந்துவரும் புண்ணியனே ஆடீரூஞ்சல்
புதுமை மிகு கலியுகனே ஆடீரூஞ்சல்

7. கிலிபிடித்த தேவர்துயர் தீர்க்கவென்று
கோவமது கொண்டிருந்த அசுரர்தம்மின்
வலியழித்து வெற்றி கொண்ட வளமாழ் வேலா
வருந்துகின்ற அடியவர்தம் துயரம் தீர்க்கும்
கலியுகத்தக் கண்கண்ட தெய்வம் நீயே
கற்பகமே எமைக்காக்கும் கந்தவேளே
சலியாது உலகளந்தோய் ஆடீரூஞ்சல்
சக்தி உமை பாலகரே ஆடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைநீலாவணை சக்தி விநாயகர் மீது பாடப்பட்டது

1. கொட்டும் வெயிலிலும் நீ இருப்பாய்! - கொடும்
கோடை வெயிலிலும் நீ இருப்பாய்!
வெட்டை வெளியிலும் நீ இருப்பாய்! - உடல்
வேதனை செய்யும் குளிரிலும் நீ இருப்பாய்!

2. ஆலமர நிழலின் கீழ் இருப்பாய்! - ஓடும்
ஆற்றங்கரையின் அருகிலும் நீ இருப்பாய்!
காலம் நேரம் கடந்திருப்பாய்! - எங்கும்
காணும் பொருள்களில் நீ இருப்பாய்!

3. வணங்குவோர் உள்ளங்களிலே இருப்பாய்! - உலகில்
வாழும் உயிர்களில் கலந்திருப்பாய்!
இணக்கமாகச் செயல்புரிவோர்களின் - எல்லா
இதயங்களிலும் என்றும் கொலு விருப்பாய்!

4. வம்மியடிப் பிள்ளையார் கோயிலிலே இருப்பாய்! - நம்
வயிற்றுப்பிள்ளையார் கோயிலும் இருப்பாய்!
விம்மி வெடித்துச் சிதறும் எரிமலையிலும்
வேகச் சூறாவளிக் காற்றிலும் நீ இருப்பாய்!

5. ஆழ் கடலின் அடியிலும் நீ இருப்பாய்! - சீறும்
சுனாமி அலையிலும் நீ இருப்பாய்!
வேழமுகத்துச் சக்திவிநாயகனா யிருப்பாய்! - விளங்கும்
வேதப்பொருள்களின் உட்பொருளா யிருப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஈசன் உவத்திடும் இன்மலரிலே இருப்பாய்! - தொழும்
எளியவர் உள்ளங்களிலே நிறைந்திருப்பாய்!
காசு இலார் செயல்களில் எல்லாம் - நீ
கலந்து மறைந்து களித்திருப்பாய்!

7. துறைநீலாவணையிலே சக்தி விநாயகன் - எம்
பக்கத்தூரிலே சித்தி விநாயகனாயிருப்பாய்!
கறை மிடற்றண்ணலின் மூத்தவனாய் - என்றும்
காணும் பொருள்களில் மறைந்திருப்பாய்!

8. ஆனை முகத்தனாய் நீ இருப்பாய்! - வெறும்
ஐந்து கரத்தனாய் நீ இருப்பாய்!
பானை வயிற்றனாய் நீ இருப்பாய்! - நாம்
பார்க்கு மிட மெலாம் நீ இருப்பாய்!

9. அஞ்சிய வள்ளிக்கொடியாளுக்கு - கானகத்தே
அபயமளிப்பவனாய் நீயிருப்பாய்!
கஞ்சமலர்ப்பதம் அடைந்தவரை - என்றும்
காக்கும் கடவுளாய் நீ இருப்பாய்!

10. சக்திவிநாயகனாய் இருப்பாய்! - அப்பாவின்
சமர்த்துப் பிள்ளையாய் நீ இருப்பாய்
பக்திவிநாயகனாயிருந்து - நற்
பதியைத்தருபவனாய் இருப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைநீலாவணை சக்தி விநாயகர் மீது பாடப்பட்டது

1. சக்தி விநாயகனாம் அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
சித்தியைத் தருவான் - வாழ்வு
சிறக்கச் செய்திடுவான்

2. வாழ்வு வளம் பெருகும் - அவனை
வாழ்த்தி வணங்கிடுலோ
ஆழும் நம் தீவினைகள் - என்றும்
அவன் அயல் அமர்ந்திடலாம்

3. குட்டிக்கும்பிட்டு விட்டால் - குறைகள்
குறைய வழி சொல்வான்
வட்டியுடன் சேர்த்து - அருளை
வாரி வழங்கிடுவான்

4. நல்லதை செய்திடுலோ - என்றும்
அவன் நட்பை நாம் பெற்றிடலாம்
வல்லமை தந்திடுவான் - எவர்க்கும்
வழித்துணை வந்திடுவான்

5. குஞ்சர முகத்தானை - நாளும்
குட்டி வணங்கிவிட்டால்
பஞ்சாய் பறந்து விடும் - பற்றிய
பாழும் வினைகளெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைநீலாவளை கண்ணகை அம்மன் மீது பாடப்பட்டது

1. தங்கமாம் செந்நெல் அசைந்தாட - அயல்
சார்ந்திடும் வாவி அலைகளெறிந்தார்ப்ப
பங்கயங்கள் பூத்து மணம் பரப்ப - சூழ
மருதமகளவள் கொலு வீற்றிருக்க
மங்களங்கள் பொங்க நின் அடியாராம் - எழில்
மாதர் இணைந்து குரவை ஒலி எழுப்ப
அங்கயற் கண்ணியாம் கண்ணகியே - எமக்கு
என்றும் அருள் புரிந்திடு தாயாரே.

2. நல்லது செய்து எமை வழிநடத்தும் - எம்
நங்கையே கண்ணகைத் தாயாரே
கல்லுமலை மேலே வீற்றிருந்து - என்றும்
காக்கும் தெய்வம் நீயல்லவோ
வல்லவனாம் அந்தப் பாண்டியன் - ஆண்ட
வளமார் மதுரையை எரியூட்டி
எல்லையில்லாத சினம் தணிந்து - இங்கே
எழுந்து அருள்புரி கண்ணகையே!

3. வைகாசி திங்கள் மறவாமல் - ஊர்
வலம் வருவாளாம் கண்ணகையாள்
ஏகாந்தமான இடம் அமர்ந்து - எமக்கு
என்றும் இன்பமே நல்குவாளாம்
வேதம் படைத்தவன் திருமேனியிலே - முகத்தை
வீசி எறிந்துமே அழகு பார்த்தவளாம்
மாதாவாக இவ்வூரமர்ந்து - எம்மை
மாட்சிமை செய்திடும் கண்ணகையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தாயன்புக்கு ஈடிணையோ - இந்தத்
தரணியில் எங்கும் கிடையாது
மாயச் சுழலில் அகப்பட்டுழலும் - எம்
மயக்க மறுத்து வழி காட்டி
ஓயாது அலை யெறி வாவியினால் - சூழ்ந்து
ஓதும் வேதத்தின் உட்பொருளாயிருந்து
மாயன் சகோதரி யானவளே - இந்த
மானிலம் காக்கும் தயாபரியே

5. சுந்தரி சங்கரி சாம்பவியானவளே - எங்கும்
சோதியென நின்ற அபிராமியரோ
ஐந்து கரத்தினன் தாயதாய் ஆனவளே - நம்
ஆதிசிவனது பாகமாய் அமர்ந்திருப்பவளே
கந்தனை ஈன்று களிப்பவளே - எம்
கண்ணின் கருமணி ஆனவளே
வந்தனைசெய்து வழிபடுவோர்களை - நன்கு
வாழவைத்திடும் எம் அன்னையளே!

6. நயினையிலே நாகபூசணியாய் - வளமார்
மாத்தளையில் முத்து மாரியதாய்
கயிலையிலே காமாட்சியதாய் - எழில்
காஞ்சியிலே விசலாட்சி யென்னும்
கயல் கொடியோன் மதுரையிலே - நீ
மீனாட்சி யெனப் பெயர் பெற்றாய்
வயல் ஆரும் துறைநீலாவணையினிலே - நீ
என்றும் வாழ்ந்திடுவாய் கண்ணகையாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனைக் குடியிருப்பூர் கிட்டங்கியில் அமர்ந்திருக்கும் விநாயகர் மேல் பாடப்பட்டது.

1. செந்நெல் விளை கழனிகள் சூழ்
சேனைக் குடியிருப் பூர் அமர்ந்து
இந்நிலத்தோர்க் கருள்புரியும்
ஏழை பங்காளனாம் தும்பிமுகா
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே
கற்பகமே மெய்ப்பொருளே நாம்
உந்தன் பதம் நிதம் தொழுதோம்
உவந்து வந்து காப்பாய் என்றும்.

2. ஆலமர அரசுமர நிழனிலே இனிதே
அமர்ந்துறையும் ஆனை முகவா
மாலயனும் கண்டறிய மாட்டாத
மாண்புடைய சிவனாரின் மைந்தா
ஞால மதில் உயிரினங்கள் என்றும்
நலமுடனே வாழ்கவென எம்மூர்
சீலமறு சேனைக்குடியிருப்பூர் அமர்ந்து
சிட்டருக் கருள்புரியும் தேவதேவே!

3. சேனைக் குடியிருப்பூர் இனிதமர்ந்து
எம் தீவினைகள் தீர்த்தருளும் ஐயா
ஆனைமுகத் தைங்கரனே கொடும்
ஆலகால விடமுண்டவனின் மைந்தா
பானை வயிறு படைத்தவனே வரும்
பக்தர் குறை என்றும் தீர்ப்பவனே
கான மதம் பாயுமொரு கையுடையாய்
கணபதியே கற்பகப் பிள்ளையாரே!

4. மீன்பாடும் வாவி வயல் சூழ
மிளிரும் எங்கள் கிட்டங்கி தன்னில்
ஈன்ற எம் தாய் தந்தையாக
இனிதாக அமர்ந்திருந்து அந்தரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர்கள் வாழ்ந்துறையும் பதியாக
வளங்கள் பல சிறப்புற்றோங்க
கூனல் பிறை சடை சுமந்தான்
கஞ்சரனே வந்து எமைக் காவாய் நீயே!

5. குறுமுனிவன் கமண்டலம் தனில்
கொண்டு வந்த கங்கை நீரை
சிறுகாக உருவெடுத்துத்தட்டி
சீர்பெறு நற்காவிரியாய் ஓடச்செய்து
அருளினையே ஐங்கரனே ஆனைமுகா
அறுமுகற்கு மூத்தவனாம் அண்ணலே
பெருமனத்தோடு கிட்டங்கி தனில் இருந்து
பெம்மானே எனைக்காத்து ரட்சிப்பாயே!

6. பாயுமொரு புலியின்தோல் அரையுடுத்த
பரமனது கையிருந்த மாங்கனியை
தாய் தந்தையரைத் தொழுது நீயும்
தரப் பெற்றாய் என்பதால் மற்றச்
சேயான குழந்தை வடிவேலனவன்
சினங்கொண்டு பழனிக் கேகவைத்த நின்னை
வாய் ஓயாது பாடிப்பணிவதற்கு
வரமருள்வாய் கிட்டங்கிப் பிள்ளையாரே!

7. செருக்குற்ற தசக்கிரிவான் தலை
சிகரத்தின் கீழ் அகப்படுத்திப் பின்
வரமளித்துக் காத்திட்ட வள்ளலாம்
பரமனருள் திருக்குமரா, அன்று
மருப்பொடித்து வியாசமுனிவேண்ட
மாபாரதம் வரைந்த மாண்புடைய தீரா
திருமருவு சேனைக்குடி யூரமர்ந்து
செகமுழுதும் வாழச் செய்திடு நீ ஐயா!

8. வயலிலே விளை செந்நெல் காற்றிலாட
வாவியிலே மீனினங்கள் துள்ளி ஓட
அயலிலே அல்லி மலர் மணம் பரப்ப
அங்கங்கே நின்னடியார் ஆர்ப்பரிக்கக்
இயல் இசையின் சூழலிலே என்றும்
கிட்டங்கி தனில் அமர்ந்து
கயல் விழியாள் மாதுமையின்
கண்மணியே காவாய் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் மீது பாடப்பட்டது.

1. கேட்டவரமளிக்கும் பிள்ளையாரே - எம்
கொடிய வினை நீக்கிடவா பிள்ளையாரே
வாட்டும் பிணி நீக்கிப்பிள்ளையாரே - எமை
வாழ வைக்க வந்திடுவாய் பிள்ளையாரே!

2. எட்ட நின்று வணங்கிடினும் பிள்ளையாரே - நீ
எமை அணைத்து உதவி செய்வாய் பிள்ளையாரே
கிட்டங்கி தனில் உறையும், பிள்ளையாரே - நீ
கருணை உள்ளம் கொண்டவனாம் பிள்ளையாரே!

3. காகமாய் உருவெடுத்துப் பிள்ளையாரே - அகத்தியரின்
காலையல்லோ வாரிவிட்டாய் பிள்ளையாரே
ஆகமமாகி நின்றாய் பிள்ளையாரே - எவர்க்கும்
ஆதாரம் நீயல்லவோ பிள்ளையாரே!

4. பால்பழங்கள் படைத்திடுவேன் பிள்ளையாரே - உன்
பானை வயிறு நிரப்பிடுவேன் பிள்ளையாரே
நால்வேதம் பொருளான பிள்ளையாரே - எங்கள்
நலன் பேணவந்திருப்பாய் பிள்ளையாரே

5. சங்கரனின் மூத்தமகனாயிருந்து - நீ
சகலதினும் முதன்மையாய் இரந்திடுவாய் பிள்ளையாரே
எங்கும் நிறைந்திருந்து பிள்ளையாரே - இந்த
இரும்புவியைக் காத்திடுவாய் பிள்ளையாரே

6. காலம் கடந்தவனாம் பிள்ளையாரே - நீ
கருணையுள்ளம் கொண்டவனாம் பிள்ளையாரே
பாலும் தெளிதேனும் கலந்து - உனக்குப்
பருக நான்தந்திடுவேன் பிள்ளையாரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனைக்குடியிருப்பு காளியம்மா

பொன்னென கதிர்களாடும்
பொலி வயல் சார்ந்த வாவி
முண்டக மலரமர்ந்து - எழிலார்
முளரிகள் ஒலியதாம் இசை எழுப்ப
கண்ணெனப் போற்றும் எங்கள்
காளியாம் அன்னை வீற்றிருந்து
மண்ணிலே சிறந்த சேனையூர்
மாந்தரைக் காத்து நின்றாள் அன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் முருகன்

தந்தைக்கு உபதேசித்து சற்குருவானவனே
முந்தை வினையகற்றும் மூலவனே
சிந்தை தெளிவித்து சிவனெறிக்கு வழிகாட்டி
கற்ற சுவாமியே காத்திடுவாய் எம்மை என்றும்!

மீனினங்கள் பாடும்வாவி மேழினி பிடிப்போர் ஓசை
மானிலத்தோர்க் குணவு அளிக்கும் மரகத பச்சை வயல்கள்
ஆனினங்கள் நிரையாக அணிவகுக்கும் சூழலிலே
வானிலே பவனிவரும் முருகன் வந்துறையும் கோயிலதுவாம்

நீர்வளங்கள் மட்டுமன்றி நிலவளங்கள் உடையதுமாய்
பாரெல்லாம் பரந்துவாழும் பண்புடைய மக்களுள்ள
சீர்பெற்ற மண்டூரென்ற செல்ல கதிர்காமமென
பேர்பெற்ற முருகன்கோயில் பெருமையை சொல்வோம் வாரீர்

வான்முட்டும் மதுரைகளும் வனமான (உயர்) தில்லை மரங்களும்
தான்தோன்றி வளம் சிறக்கும் தண்ணளிசேர் சோலையில் பல
ஊன்தேடி அலைந்தவேடன் உயர்ந்த மரத்தில்லை வேரில்
தான்தோன்றி இருந்த வேலை தற்செயலாக கண்டானாம்

கண்ட அந்தக் காட்சிதனையே கடுகியே சென்றவனும்
விண்டனை ஏனையோர்க்கு விரைந்தவர் ஓடி வந்து
குன்றுதோ றாடும் அந்த குறவள்ளிக் கந்தனுக்கு
பண்டை வினை கூடுதலும் பந்தர் அமைத்து வணங்கினராம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெருஞ் சக்தி

1. வீரத்திருமகள்,
வெற்றி தருபவள்,
கோர உருவினள்,
கொற்றவைத் தெய்வம்
தீரச் செயல்கள்
செய்து முடிப்பவளை,
ஆராதனை செய்து
அவள் அருளைவேண்டுவமே!

2. செந்தாமரை அமரும்
செல்வத் திருமகளை,
வந்தனை செய்து
வாழ்த்தி வணங்கிடில், நம்
பந்தம், அகலும்,
பாரில் பொருளெலாம்
அந்தமில்லாது
அள்ளி வழங்கிடுவாள்

3. சக்தி வடிவாக,
சகலதினும் உட் பொருளாய்,
வித்தை அனைத்துக்கும்
வேண்டும் பொருளாக,
புத்தகத்தினுள்ளே இருக்கும்
பூவை கலை மகளை,
சித்த மிருத்தியவள்,
சேவடிகள் போற்றிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகளைத் துதிப்போம்

வெண்தாமரையில் விளங்கி நின்று
வேதமெல்லாம் வணங்கி
மண்ணுலகோர் இயற்றும் வினை அனைத்திற்கும்
மறைவாக தலைமையை ஏற்றுத்தான்
வண்மையால் அறியாமை இருள் கலைந்த
வையகத்தில் ஞானமெனும் இருள் பரப்பி
எண் எழுத்து அறிந்திடற்கு வழிகாட்டும்
இறைவியாம் கலைமகளை ஏத்துவோமே

மலரோன்தன் நாவிலுறை வாணியென்று
மாண்புடனே புராணங்கள் எடுத்துக்கூறும்
பலகலைக்கும் தலைவியாய் நின்று நிதம்
பண்ணும் தொழிலெதற்கும் வழி வகுத்து
இயங்குமொரு வீணையினைக் கையிலேற்றி
இரப்போர்க்கு ஐசுவரியம் ஈர்ந்திடும்
புலவரது நாவிலே கவிதை வெள்ளம்
பொங்கியெழச் செய்வாளைத் துதிப்போமே!

கல்வியில் சிறார்முதல் ஏனைபல
கைவினைகள் ஆற்றுகின்ற தொழிலாளரெல்லாம்
நல்லறிவும் செல்வமும், கிடைக்க வேண்டி
நாமகளுக்குரித்தான அந்த நாளில்
நம்மகத்தில் அன்னைக்கு கொலுவேற்றி
கலைமகளே கருணை என வேண்டி
கரம்குவித்து பக்தியுடன் துதிப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்மி

வாருங்கடி பெண்காள் வாருங்கடி - எங்கள்
வேல் மருகன் புகழ் பாடிடுவோம்
பாருங்கடி வந்து பாருங்கடி - கந்தன்
பவனி வருகின்றான் பாருங்கடி,

காவடியாட்டம் கரகாட்டம் - பல
கண்ணைக் கவர்ந்திடும் ஆட்டங்களும்
சேவடியே போற்றியென பெண்கள்
தீபச் சட்டிகள் ஏற்றுகிறார்!

சப்புதா வம்மியடி யமர்ந்து - பக்தர்
சப்புறத்தை பார்த்து வணங்குகின்றார்
சுப்பிரமணியின் திருவிழாவை - நாமும்
சுழன்று ஆடிக் களித்திடுவோம்!

வாவிக்கரையிலே கோயில் கொண்ட - எங்கள்
வாலை முருகனைப் பாடிடுவோம்
கூவிக் குரவை ஒலி எழுப்பி - நாமும்
கும்மியடித்து வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 கட்டுரைப் படைப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமடையும் உலகில் மனிதர்கள்

**- கவிஞர். துறையூர் க. செல்லத்துரை**

ஆதி மனிதர்கள் கற்குகைகளில் வாழ்ந்து, கல்லாயுதங்களைப் பயன்படுத்தி மிருகங்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைப் பச்சையாகவே உண்டனர். பின்னர் சிக்கி முக்கிக் கற்களை ஒப்ப செப்பமாக்கும் போது ஏற்பட்ட தீப்பொறிகளின் காரணமாக நெருப்பைக் கண்டறிந்தனர். அதன் பிறகு இறைச்சியை நெருப்பில் வாட்டி உண்ணக் கற்றுக்கொண்டனர்.

வேட்டையாடுதல் மூலம் பெறப்பட்ட உணவுகள் நிச்சய மற்றதாக இருந்தது. வேட்டையில் மிருகங்கள் அகப்படாதவிடத்து பட்டினி கிடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்காக மந்தை வளர்ப்பை மேற்கொண்டனர். பின்னர் படிப்படியாக நதிக்கரையோரங்களில் குடியேறி பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். தங்களுக்குள் தலைவர் ஒருவரை நியமித்து அவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பழக்கிக் கொண்டனர். இவ்வாறு ஏற்பட்ட முறைதான் பின்னர் அரசன் என்ற உயர் நிலைக்கு இட்டுச்சென்றது. அரசன் நாட்டின் உயிராக மதிக்கப்பட்டான்.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்ற பாட்டானது இந்த உண்மையை விளக்குகின்றது. அக்கால மன்னர்கள் நீதி வழுவாதவர்களாகவும், வளையாத செங்கோலை உடையவர்களாகவும் இருந்தனர். இதனால் மிகவும் மதிப்புடைய வர்களாகவும், மக்களால் போற்றப்படுபவர்களாகவும் விளங்கினர்.

இதைப்பின்பற்றி தலைமைக்கு கீழ்ப்படிந்து நடத்தல், விளையாட்டில் வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளுதல், மூத்தவர்களிடத்திலே மரியாதையாக நடத்தல் ஆகிய பண்புகளும் வளரலாயின.

மாதா, பிதா, குரு, தெய்வம் - அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் வரிகள் மூலம் பெற்றார், குரு இவர்களுக்கு சமூகத்தில் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அறியலாம். சமயங்கள் மக்களுக்கு வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன. சமய நெறியைப் பின்பற்றாத வாழ்க்கை காட்டுமிராண்டித் தனத்துக்கு வழிகோலும். எல்லா உயிரினங்களுக்கும் வாய்கள் உள்ளன. ஆனால் மனிதனுக்கு விஷேடமாகப் பேசும் சக்தியை அளித்ததன் காரணம் உணவு உண்ப தோடு அமையாது தன்னனைப் பாடி பரவ வேண்டும் என்பதற்குமே. கூன், குருடு, செவிடு நீக்கித் தன்னைப் படைத்ததற்காக மனிதன் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவன் புகழ்பாட வேண்டும்.

நன்றி என்று சொல்லும் போது நாம் வேறு சில விடயங்களையும் நினைவு கூரவேண்டும். "எறிந்தவேல் மெய்யதாவால் குழைக்கும் நாய்" என்று நாயின் நன்றி விசுவாசத்தைச் சொல்வர். தென்னம்பிள்ளைக்கு சிறுபராயத்தில் அடியில் ஊற்றிய நீரை அது வளர்ந்து தலையால் இளநீராகத் தருகிறது. இவையெல்லாம் நன்றிக்கு உவமையாகக் கொள்வர் பயன் தெரிவோர். இங்கு தினையும், பனையும் நன்றியின் அளவைக் குறித்து நிற்பனவேயாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் தாயின் மடியினிலே, அது நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கவிஞரின் கூற்றில் எவ்வளவோ உண்மைகள் பொதிந்திருக்கின்றன. வீடு, பெற்றார், வாழும் சூழல், பாடசாலை, பழகும் நண்பர்கள் என்று பல காரணிகள் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இதிலும் வீட்டுச் சூழல் மிகவும் முக்கியம். பெற்றோர், ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடக்கவேண்டும். நல்லது கெட்டது இரண்டையும் அவர்கள் பின்பற்று வார்கள். இது அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

வாழ்க்கை என்பது மலர்ப் படுக்கையல்ல (Not a bed of Roses) அதில் எதிர்நீச்சலடிக்க வேண்டும். துக்கத்தைக் கண்டு துவண்டு விடவோ அன்றி மகிழ்ச்சியைக் கண்டு துள்ளிக் குதிக்கவோ கூடாது. இவை இரண்டையும் சமமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கால மாற்றத்திற்கேற்ப நடத்தைக் கோலங்களும் மாற்றமடைந்து கொண்டு வருகின்றன. முற்காலத்தில் வாழ்க்கை சிறப்பாக அமையப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது. விவேக சிந்தாமணி என்னும் நூலில் வரும் ஒரு செய்யுளை இங்கு தருதல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

'வேதமோதிடும் வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினர்க்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர் மழை
மாதம் மூன்று மழை எனப் பெய்யுமே.

முறையாக வேதத்தை ஓதிய வேதியர்க்காகவும், செங்கோல் வளையாத அரசர்க்காகவும், கற்புடைய மகளிர்க்காகவும் மாதத்தில் மூன்று முறை மழை பெய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதே நிலை காலப்போக்கில் மாற்றமடைந்தது எவ்வாறென்று அதே நூலில் காணப்படும் வேறோர் செய்யுள் கூறுகின்றது.

'அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை
வரிசை தப்பிய மன்னவர்க்கோர் மழை
புருஷனைக் கொன்ற பூவையர்க் கோர் மழை
வருஷம் மூன்று மழை எனப்பெய்யுமே'

வேதமோதிய வேதிடர்கள் ஒழுக்கம் கெட்டு ஏமாற்றிப் பிழைக்க தலைப்பட்டனர். மந்திரங்கள் பொய்த்தன. நீதியை நிலைநாட்ட தனது மகனை தேர்க்காலின் கீழ்கிடத்திக் கொன்ற மன்னர்கள் வாழ்ந்த நாட்டிலே செங்கோல் வளைந்து நீதி தடம்புரண்டு விட்டது. "தெய்வம் தொழாஅள், கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" காலன் காலிலே விழுந்து கணவன் உயிர் மீட்க கற்புடைய மகளிர் வாழ்ந்த நாட்டிலே கேவலம் தமது உடல் இன்பத்திற்குக் கொண்ட கணவனையே கொலை செய்யத் துணிந்த கோகிலாம்பாள் போல பெண்கள் மலிந்து விட்டார்கள். இவ்வாறான துர்நடத்தைகளினால் நாட்டில் மழை பொய்த்து விட்டது. அன்று மாதம் மும்மாரி அகால வேளை தவிர்ந்த நேரங்களில் பெய்யுமாம். ஆனால் இன்று வருடத்திற்கு இரண்டு, மூன்று தடவைகள்தான் மழை பெய்வது அரிதாகி விட்டது. மழை குறைவடைந்தமைக்கு வேறு காரணங்களும் உண்டு.

கால மாற்றம் மனிதர் மனங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. அன்று கூட்டு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட மக்கள் அதனைக் கைவிட்டு சுயநலனுக்கு ஆளாகிவிட்டனர். பொதுநலனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பது இல்லை. அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்று பக்கத்து வீட்டுக்காரனுக்குத் தெரியாது. அப்படியானதெரு வாழ்க்கை முறைக்கு மனிதன் பழக்கப்பட்டு விட்டான்.

பெரும்பாலான மக்கள் பொய் பேசுவதற்கு பின்னிற்க மாட்டார்கள். சாதாரண மக்கள் மட்டுமின்றி படித்தவர்களில் பலருடைய நிலைமையும் இப்படித்தன் இருக்கின்றது. சிலர் வேலை ஆரம்பிக்கும் போதுகூட பொய்யான நேரத்தைப் பதிவு செய்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே இப்படியானவர்களிடமிருந்து எப்படி நேர்மையை எதிர்பார்க்க முடியும்? இவ்வாறே எங்களுக்கு தெரியாது சமூகத்தில் பொய், புரட்டு என்பன இடம் பிடித்துக்கொள்கின்றன அக்காலத்தில் மாணவர்கள் ஆசிரியர்களை மதித்தார்கள். சமூகத்தில் பெரியவர்களை மதித்தார்கள். ஆனால் இன்று மாணவர்கள் ஆசிரியர்களை கனம் பண்ணுவதில்லை அவர்களுக்குப் பட்டப்பெயர்கள் (Nick Name) வைத்து அழைக்கவும் தயங்குவதில்லை. ஆசிரியரோடு சைக்கிள் வண்டியிலே இருந்து கதைக்கும் மாணவர்களையும் பார்க்கக்கூடியதாக உள்ளது. பஸ்வண்டியிலே பிரயாணம் செய்யும் நேரத்தில் வயது போனவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், கையிலே குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார், நோயாளர்கள், ஊனமுற்றோர் இப்படியான வர்களுக்கு எத்தனை பேர் தாங்கள் இருக்கும் இருக்கையில் இருந்து இடம்கொடுக்கிறார்கள்? பெரும்பாலும் இடம்கொடுப்பது குறைவு. கண்டும் காணாதது போன்று நடித்துக் கொள்வார்கள்.

வலது குறைந்தவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களைக் கண்ட சிலர் கெட்ட வார்த்தைகளால் திட்டுவதையும் இன்னும் ஒரு சிலர் ஒருபடி மேலே சென்று கல்லெறிவதனையும் காண்கின்றோம். கோலூன்றி நடக்க முடியாத வயோதிபர்களுக்கும், வெள்ளைப்பிரம்பைக் கையிலே கொண்டு செல்லும் அந்தகர்களுக்கும் உதவி புரியவேண்டும். வழிகாட்ட வேண்டும்.

பிழையான கல்வி முறைகளால் சமூக, சமய, சாதிப்பிரி வினைகளை இளம் சிறார்களின் மனதில் தோற்றுவித்ததன் காரணமாகவே இன்று நாட்டில் இனப்பிரச்சினை என்ற விருட்சம் வளர்ந்து கிளை பரப்பி நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அல்லா என்பார் சிலபேர்கள்
அரன் அயன் என்பார் சிலபேர்கள்
வல்லான் அவன் பரமண்டலத்தில்
வாழும் தெய்வம் என்பார்கள்'

இறைவன் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும், ஒன்றேயாம் என்ற உண்மை இளம் நெஞ்சங்களில் விதைக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் நாட்டில் சமய சமரசம் ஏற்படும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
'தாயிற் சிறந்த கோயிலுமில்லை
'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'

இவைகள் சான்றோர் வாக்குகளாம். பத்துத்திங்கள் சுமந்து பெற்று இரவு பகல் கண்விழித்து ஈ எறும்பு மொய்க்காமலும், நோய் நொடி வராமலும் குழந்தைக்கு நோய் வந்தால் தான் மருந்துண்டு வளர்க்கும் தாய் கல்வி ஊட்டுகின்ற தந்தை இவர்கள் கண்கண்ட தெய்வங்களாம். தாய்தான் முதற்கடவுள். பின்னர் தாய் தந்தையை குழந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கின்றாள். பின்னர் இருவரும் கோயிலுக்கு பிள்ளையை அழைத்துச் சென்று கடவுளை அறிமுகம் செய்து வைக்கின்றனர்.

'தாயோ டறுசுவை போம்
தந்தையொடு கல்விபோம்'

என்ற உண்மையானது இதனை உணர்த்துகின்றது.

எங்களை வளர்த்து ஆளாக்குகின்ற இந்தத் தெய்வங்களின் பெரும்பாலானவர்களின் பிற்கால வாழ்க்கை மிகவும் பரிதாபமாக அமைந்து விடுவதனையும் கண்கூடாகக் காண்கின்றோம். தமது உதிரத்தை ஊட்டி வளர்த்த பிள்ளைகளினால் புறக்கணிக்கப்படும் பல பெற்றோர்களைப் பார்க்கிறோம். இவர்களில் பிச்சை எடுப்பவர்கள் சிலர், வயோதிப விடுதியில் தங்கி இருந்து தமது அந்திமக் காலத்தை எதிர்நோக்கி காத்திருப்போர் சிலர். இன்னும் ஒரு சாரார் தாம் மிகவும் நல்ல நிலையில் இருக்கும்போது பெற்றோரைப் பேணிப்பாதுகாக்காது வயோதிபர் விடுதியில் சேர்த்து விட்டு தாங்கள் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் ஒரு சில பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பெற்றோரை வீடுகளில் சம்பளமற்ற வேலைக்காரராக நடத்துவதையும் நாம் பார்க்கிறோம். கல்வியறிவற்ற பாமர மக்களிலிருந்து படித்தவர்கள் வரை இந்தச் செயலில் ஈடுபடுவதை நாம் பார்க்கலாம். பிற்காலத்தில் தங்களுக்கு இப்படியானதொரு நிலை வரும் என்பதை அறிந்து பிள்ளைகள் பெற்றோரை மிகவும் நல்ல முறையில் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

அக்காலத்தில் மனிதர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாகவும் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுபவர்களாகவும் கடவுள் பக்தியோடு தேசபக்தியும் உடையவர்களாகவும் காணப்பட்டனர். பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தனர். மனித விழுமியங்களை மதித்து நடந்தனர். வாழ்க்கை செம்மையாக அமைந்திருந்தது.

ஆனால் இன்று நிலமை தலைகீழாக மாறிவிட்டது. மனித நேயத்தையும், நேர்மையையும் மதிக்கும் மக்களைக் காண்பது முயற் கொம்பாக உள்ளது. ஏமாற்று, வஞ்சகம், சூது, பொய் மலிந்து விட்டது. இதன் காரணமாக ஒன்றிரண்டு நல்ல மனிதர்களையும் சந்தேகிக்க வேண்டி உள்ளது. சமயப்பற்றும் தேச பக்தியும் மிகவும் குறைவான மக்களிடையேதான் காணப்படுகின்றது. சுயநல அரசியல்வாதிகள் மலிந்து விட்டார்கள். அவர்களிடத்தில் நாட்டு நலன் சிறிதுமில்லை. தங்கள் சுயநலனையும் கட்சி நலனையும் முதன்மைப் படுத்திக் காரியமாற்றுகின்றனர். இதனால் நாடு அதாள பாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதனையிட்டு எவரும் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை.

கையூட்டு இல்லாமல் எக்காரியமும் பார்க்கமுடியாதுள்ளது. ஊழல் மோசடி என்பன மலிந்து காணப்படுகின்றன. அடியிலிருந்து நுனிவரையும் (Top to toe) இது வியாபித்திருக்கிறது. இவை அனைத்தும் வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும்.

நாளாந்தம் பத்திரிகையைப் புரட்டினால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்ற செய்திகள் அதிகளவில் வருகின்றன. ஆயுதக்கலாசாரம் மேலோங்கி இருப்பதனால் வீடு தேடி வந்து கொலை செய்யுமளவிற்கு நிலைமை மாறியுள்ளது. பெண்கள் நகையணிந்து கொண்டு தெருவில் செல்லப்பயப்படும் அளவிற்கு நிலமை மாறியுள்ளதெனில் மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எதனைக் காட்டுகிறது? இதற்கான பொறுப்பு பெற்றோர், ஆசிரியர், அரசாங்கம் மேல் விழுகிறது.

விஞ்ஞானம் விருத்தியடைகிறது. உலகம் சுருங்குகின்றது என்பதெல்லாம் உண்மையானாலும் ஒழுக்கம் சீர்கேடடைந்து செல்வ தானது மாட்டின் வாலின் கீழ் நோக்கிய வளர்ச்சி போல் இருக்கிறது.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'

என்ற வள்ளுவன் வாக்கை மனம் கொளத்தக்கதேயாம்.

ஒழுக்கச் சீர்கேட்டுக்கு விபசாரம், கொலை, கொள்ளைகளுக்குத் துணைபோகின்ற அபரிமிதமான மது கொக்கோயின், மார்ஜுவனா என்று பல உள்நாட்டு வெளிநாட்டு போதையூட்டும் பொருட்களின் பாவனையும் காரணமாகின்றன. போதையூட்டும் பொருள்கள் மனிதரின் மதியைக் கெடுத்து அவர்களையறியாமலேயே பல தீய செயல்களைச் செய்வதற்கு அவர்களைத் தூண்டுகின்றன. மதுபானத்தோடு மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டது விபசாரம். இது "ஏயிட்ஸ்" (Aids) என்னும் ஆட்கொல்லி நோயைப்பரப்பும் ஒரு சாதனமாகவும் விளங்குகின்றது. சுற்றுலாப்பயணிகள் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கும் காரணமாகின்றனர். எனவே இப்படியான காரணிகளைக் களைவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுதல் வேண்டும்.

நாம் வாழ்வது 21ம் நூற்றாண்டு, விஞ்ஞான யுகம். காலம் மாறலாம் நாகரிகம் வளரலாம். உடை, நடை பாவனைகளில் கூட மாற்றம் ஏற்படலாம் ஆனால் நமது பழக்கவழக்கங்கள், பண்பாடு, கலாசாரம் ஆகியவைகளில் மாற்றம் ஏற்படவே கூடாது. இது எமது மூதாதையர் எமக்களித்த அருஞ்செல்வமாகும். இச்செல்வம் எமது பிற்கால சந்ததிக்கும் கைமாறிப் போய்ச் சேர வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராமிய இலக்கியம் வதனமார் (காவியம்) சடங்கு

**துறையூர் க. செல்லத்துரை**

மட்டக்களப்பு என்றாலே பாலும் தேனும் நினைவில் தோன்றும். மட்டக்களப்பிலே நிஜமாகவே ஒரு காலத்தில் இவை அதிகமாகக் கிடைத்தன. இதனாலேதான் பாலாறு தோனாறு பாயும் நாடு என்று இதனை சிறப்பித்தனர். மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி ஆகிய நால்வகை நிலங்களும் அமைந்து காணப்பட்டன. வானுயர்ந்த காடுகள் அதிகம் நிறைந்திருந்தன. வாவியிலே பலவகை மீனினங்கள் பல்கிப் பெருகியிருந்தன. எனவேதான் மட்டக்களப்பு என்றால் பசியும் பிணியும் நீக்கி வசியும் வளனும் சேர்க்கும் ஒரு பகுதியென்றே கருதப்பட்டது.

இங்கு வாழ் மக்களும் செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருப்பவர்களாக இருந்தனர். இதனாற்றான் போலும் வந்தாரை வாழ வைக்கும் மட்டக்களப்பு எனப்பட்டது. நிலவளம், நீர்வளம் பொருந்தி இருந்தமையால் இங்குள்ளவர்கள் அதிகமாக விவசாயச் செய்கையிலும் மந்தை வளர்த்தலிலும் ஈடுபட்டனர். பசுமாடுகள், எருமை மாடுகள் காடுகளை அடுத்துள்ள பகுதிகளில் வளர்க்கப்பட்டன. காடுகளில் காணப்படும் வெளியான பகுதிகளில் காலைகள், பட்டிகள் அமைத்து மந்தை அடைத்து வளர்க்கப்பட்டன. ஒருவருக்கு எருமை மாட்டுப் பட்டிகளும், பசு மாட்டுப் பட்டிகளும் சொந்தமாக இருந்தன.

மாரிகாலத்தில் மந்தைகளைப் பின்தொடர்ந்து சென்று மேய்ப்பது இலகுவாக இருப்பதில்லை. இக்காலங்களில் சற்று கவனக்குறைவாக இருப்பதும் உண்டு. அதனால் மந்தைகள் எல்லாம் மதம் பிடித்து காடுகளில் அலையத் தலைப்படும். மனிதரைக்கண்டால் வாலைச் சுருட்டி, கொம்புகளை உயர்த்தி முறைத்துப் பார்த்து காடுகளில் ஓடிமறைந்து விடும். இவைகளை வழிக்குக் கொண்டு வருவது இலகுவான காரியமல்ல. எல்லா மந்தைகளுமே இவ்வாறு என்று கூறமுடியாது. இவற்றிலும் சில மடவிசையான அமைதியான மாடுகளும் இருக்கத்தான் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை, வைகாசி ஆனவுடனே சிறு போக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்து விடுவார்கள். இதற்காக கமக்காரர் தமது வயல்களை ஆயத்தப்படுத்துவார்கள். வயல் வேலைக்கு அக் காலத்தில் எருமைக் கடாக்கள் மிகவும் இன்றியமையாதனவாக இருந்தன. பட்டியிலே உள்ள எருமைக் கடாக்களைப் பிணைத்துக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவர். ஆனால் இவர்களைக் கண்டவுடனே எருமைக் கடாக்கள் வெருண்டு ஓடும். கன்று ஈன்ற எருமைகளும் கூட கன்றுகளுடன் காடுகளில் புகுந்து மறைந்து விடும். இந்நிலையில் மந்தை மேய்ப்போர் என்ன செய்வதென்று தெரியாது கலங்குவர்.

மாடு மேய்ப்பவர்கள் தொழிலுக்குத் துணையாக வதனமார் என்ற தெய்வத்தை வணங்குவர். 'அம்பாறை வில் பிள்ளைார்'. ' முன்னடித் தம்பிரான்' என்று வேறு பெயர்களும் உண்டு. மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் என்னும் நூலாசிரியராகிய கலாபூஷணம் மகேஸ்வரலிங்கம் தனது நூலில் (123 ஆம் பக்கம்) "வதனமார் 'இந்தியாவில் பிறந்து கிழக்கிலங்கைக்கு வந்து வீர சாதனை புரிந்து தெய்வமாகியவர்கள் என உணர முடிகிறது" என்று குறிப்பிடுகின்றார். குழு மாடுகளை வழிக்குக் கொண்டுவரும் இறுதி முயற்சியாகத் தங்கள் குல தெய்வமான வதனமாரை அழைப்பர். அவர்கள் வதனமாரை விழித்து "முன்னடித் தம்பிரானே இக்காட்டிலே, கட்டாக்காலியாக அலையும் கன்றுகளும் எருமைகளும் எங்கள் பட்டியில் முன்னர் போல் வந்து சேர அருள்புரிய வேண்டும். அவ்வாறு அருள் செய்தால் நாங்கள் மனப்பூர்வமாக வணங்குவதோடு பொங்கல் சமைத்துப் படைப்போம்" என்று கூறி பட்டியிலுள்ள மாடுகளில் மிகவும் சாதுவான எருமையின் கழுத்தில் ஒரு மஞ்சள் கயிற்றை நேர்த்தியாகக் கட்டு வார்கள். அதன் பின்னர் காட்டிலே உள்ள 'அத்திமரம்' என்னும் மரத்தின் கிளையொன்றின் சிறுபகுதியை ஒடித்துக் கொண்டு வந்து மாடுகள் அடைக்கும் பெருங்காலை வாசலிலே கட்டி விடுவார்கள். அவர்கள் வேண்டு கோளை வதனமார் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதற்கு அடையாளமாக இதுவரை கட்டாக்காலியாகத் திரிந்த கடாக்கள், எருமைகள் கன்றுகள் எல்லாம் பெருங்காலைக்கு ஒவ்வொன்றாக வந்து சேரும்.

இவ்வாறு வந்த எருமைகள் கன்று ஈனத் தொடங்கி விடும். அத்திமர நாரினாலே திரிக்கப்பட்ட கயிறுகளினாலே கன்றுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையப் போடுவர் - கட்டிப் போடுவர். கடாக்களைப் பிடித்துப் பிணைத்து வயல் வேலைகளுக்கு அனுப்புவர். சிறிது காலத்தின் பின்னர் தடிகள் கொண்டு வரிந்து கட்டி சிறிய கன்றுக் காலைகளை அமைப்பர். எருமைகளுக்கு சோமல், வதனி, குறுமல் போன்ற பெயரிட்டு அழைப்பர். தாய் எருமையைக் கணுவிலே கட்டி வைத்து விட்டு, கன்றுக் காலை வாசலைத் திறந்து தாயின் பெயரைக் குறித்து அழைத்தவுடனே அதன் கன்று துள்ளிக் கொண்டு வந்து தாயின் மடியிலே பால் குடிக்கும். பாலை காய்ச்சித் தயிர் ஆக்குவார். ஆடையிலே இருந்து நெய் எடுப்பர்.

வதனமாருக்கு நேர்த்தி வைத்த பின்னர், பிரிந்து சென்றவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பட்டி பொலிந்து காணப்பட்டமையால் மந்தை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் தங்கள் நேர்த்தியை நிறைவு செய்து நன்றி தெரிவிக்க முற்படுவர்.

முன்னடித் தம்பிரானுக்குப் பூசை செய்வதற்கு மூன்று தடிகளைக் கொண்டு கால்கள் நட்டு, சிறு பந்தல் ஒன்று போட்டு, அதன் மேல் மண் ஏற்றுவார்கள். பந்தலின் மேல் மூன்று இளநீர்களை நிறுத்தி (கல்லுக்குப்பதிலாக) அடுப்பு மூட்டுவர். பின்னர் பாலையும் அரிசியையும் பானையில் போட்டு மூடி விடுவர். பானையைத் திறந்து பார்ப்பதில்லை. ஒரு சொட்டு பால்தானும் பொங்கி வழியாதிருப்பது பெரும் விந்தையாகவே தென்படும். இதைவிட வேறு பானைகளிலும் சாதாரணமாகப் பொங்கலிட்டுப் படைப்பார்கள். மந்தை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் பலர் ஒன்று சேர்ந்தே பொங்கல் காரியங்களில் ஈடுபடுவர். அவர்கள் தங்கள் குலதெய்வமான வதனமார் அல்லது முன்னடித் தம்பிரான் மீது பாடல்கள் பாடுவர். அப்பாடல்களே வதனமார் காவியம் என அழைக்கப்படுகின்றது. அகவற் பாவகையால் அமைந்துள்ள அக்காவியம் வருமாறு:

*ஐந்து கரத்தானே! ஆனை முகவேதியனே*
*வஞ்சி உமையாள் மதகளிறே ஐயாவே!*
*அருள்தாராய் அறுமுகனே,*
*சண்முக வேலாயுதனே!*
*சீராரும் எங்கள் சேவகனார் மங்கலரின்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பாதம் பாடுவதற்கு
காவலாய் வந்தருள்வாய் !
காரானைமேனியனே!
ஒன்றும் பிறந்து உடையானை கைதொழுது
இரண்டும் பிறந்து ஈஸ்பரனை கைதொழுது
மூன்றும் பிறந்து முக்கண்ணனைக் கைதொழுது
நாலும் பிறந்து நான் முகனைக் கைதொழுது
ஐந்தும் பிறந்து ஐங்கரனைக் கைதொழுது
ஆறும் பிறந்து அறுமுகனைக் கை தொழுது
ஏழும் பிறந்து எம் பெருமானைக்கைதொழுது
எட்டும் பிறந்து இளையோனைகைதொழுது
ஒன்பதும் பிறக்க ஒண் பொருளுமுண்டாகி
பத்தும் பிறக்கப் பாலகனும்தான் பிறந்தான்.
பிறந்தாரே மங்கலனார் வளர்ந்தா ரிளந்தாரி
பொய்கையிலே நீராடிப் புதுக் கச்சையும் கட்டி
நாமமுமிட்டு நல்ல புகழ் மங்கலனார்
அயோத்தியுங் கடந்து அரியவன முங்கடந்து
குளங்களெல்லாம் தேடிக் குழுமாடு காணாமல்
இலங்கை இராச்சியத்தே இருக்க வென்று வந்தாராம்
மாவலி கங்கை மணல் வளர்ந்த கானாறும்
சாவாறம் நல்ல சாளம்பைக் கூட்டரவாம்
நல்ல இணலென்று (நிழல் என்று) நயினாரும் வீற்றிருந்தார்
வீற்றிருக்கும் நயினார்க்கு வெண்சாமரை வீச
சாய்ந்திருக்கும் மெத்தை தலைகாணி பொன்னாலே
வயணம் சமைத்து வண்கறியு முண்டாக்கி
ஏலும் இலை மிளகு எல்லோருமாயருந்தி
தன் சேனை தன்னைத் தயவாகத் தான்பார்த்து
பால வதனா பணிவிடைகள் ஏவுமடா
காக்கா வந்தனா காற்றுப் போல் ஒடுமடா
அரவரவ மெல்லாம் ஆய்ந்து அடிபார்த்து
துறைகள் துறைகளெல்லாம் சோதித் தடி பார்த்து
மின்னும் வழிதனிலே விரைந்துமே போகையிலே
ஐந்நூறு மொத்தம் அழுதழுது போகுதடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராட்டை யென்றால் என் செல்வநாயகனே
ஒரு நூறு போகுதுகா
ஈராட்டை யென்றால் என் செல்வ நாயகனே
இருநூறு போகுதுகா
மூவாட்டையென்றால் என் செல்வ நாயகனே
முன்னூறு போகுதுகா
நாலாட்டை யென்றால் என் செல்வ நாயகனே
நானூறு போகுதுகா
ஐயாட்டை யென்றால் என் செல்வ நாயகனே
ஐஞ்நூறு போகுதுகா
ஆறாட்டை யென்றால் என் செல்வ நாயகனே
அறுநூறு போகுதுகா
ஏழாட்டை யென்றால் என் செல்வ நாயகனே
எழுநூறு போகுதுகா
எண்ணாட்டை யென்றால் என் செல்வ நாயகனே
எண்ணத் தொலையாது
தண்ணீர் குடித்துத் தவிப்பாறிப் போகையிலே
கெங்கை குளித்துக் கிடந்தாறிப் போகையிலே
நின்றாலும் மெத்த நெடு நேரம் செல்லுமென்று
வெட்டுங்கோ காட்டை வெளிக்குவெளியாகவே தான்
தெற்கு வடக்காகச் சாயுங்கோ காலிகளை
காலி நடக்கக் கடுக்காளம் ஊதுமென்றார்
தம்பட்டம் கொட்டித் தவிர் முரசம் நின்றதிர
ஆசான் குழலே அவரவரே ஊதிவர
ஆளுக்கோர் மாடு அவரவரே கட்டுமென்றார் பாம்பைக் கீரி பதுங்கிப்
பிடித்தது போல் மீனைப் பருந்து விரும்பி எடுத்ததுபோல்
ஆளுக்கோர் மாடு அவரவரே கட்டுமென்றார்
கட்டியபின்பு கண்குழுவுதான் போட்டு
பேரிடவேதான் பிராமணரே எந்தனுக்கு
நாளொன்று சொல்லுமென்றார்
வெள்ளி சனிக்கிழமை வேண்டிய நாள் எங்களுக்கு
பூணாரம் பூணப் புதன்கிழமை நல்லதினம்
அந்த முகூர்த்தத்தில் அவதரித்த மங்கலனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லியரைத்து விளங்க மலர் கழுவி
அல்லியும் செந்தாமரையும் அலர மலர் கழுவி
வடக்குத் தெற்குக் கொம்பதாலும் மாயோன் அருளாலே
தெற்கே பிறந்த கொம்பில் தேனொன்றிருக்கையிலே
வெட்டி இறக்கிடுங்கோ வீரனிளந்தாரிகளே!
நாங்களது வெட்ட நயினார்க்கு ஏலாது
ஏராது விண்ணப்பம் என் கோவே என்றுரைத்தார்
வெள்ளை பெருமை வில்லையடியில் நிற்க
தெய்வ எருமைக்குச் சிறந்த பேர் சொல்லு மென்றார்
ஆராய்ச்சி பொட்டகம், அரிய குடி தாங்கி
அன்னம், தேவி, அமுதம், தலைகாவல்
முண்டி முறண்டி முழுநீலி, சோமல் என்று
நூற்றெட்டு எருமைக்கும் பெரும் வகுத்துப் பெருமையுடன்
தானிருந்து ஏகினார் தம்பிரான்
இளம் பெரிய கானகத்தில்

இது இலக்கணச் சுத்தியாக அமையாது போனாலும் அன்று பேரறியா யாரோ ஒருவரால் பாடப்பட்டதென்பது உண்மை. கருத்துத் தொடர்பு இல்லாமலும் பொருள் சரியாகப் புரியாது போனாலும் அவர்கள் தங்கள் நம்பிக்கையின் காரணமாக இத்தகைய காவியங்களைப் பாடி அதன் மூலம் பயனைப் பெற்றனர் என்பது உறுதியாகும். இன்று பட்டிகள், காலைகள், மாடுகள், கன்றுகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இத்தகைய காவியங்களைப் பேண வேண்டியது எமது கடனாகும்.

– 18.01.2018 வீரகேசரி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' (மட்டக்களப்பு) அமைப்பினால் 2011 இல் ஆரம்பிக்கப்பெற்று வருடாவருடம் வெவ்வேறு இடங்களில் நடாத்தப் பெற்றுவரும் 'கண்ணகி கலை இலக்கிய விழா'த் தொடரின் இரண்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா ஜூலை 2012, 28ஆம், 29ஆம் தினங்களில் மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது முதலாம் நாள் (28.07.2012) மாலை அமர்வான இயல் அரங்கில் ('சேரன் செங்குட்டுவன் அரங்கு') துறையூர் க.செல்லதுரை அவர்கள் ஆற்றிய உரை.

# துறைநீலாவணைக் கண்ணகை அம்மன் கோயில்

**துறையூர் க. செல்லத்துரை**

பொது ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவியாகிய கண்ணகி சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் தன் கற்பின் பெருமையை நிலைநிறுத்திச் சேரநாட்டில் தெய்வீகமுற்றாள். சேரன் நடாத்திய கண்ணகி விழாவிலே இலங்கை மன்னன் கஜபாகு கலந்கொண்டு தன் நாடு சென்றவுடனே தன்நாட்டிலும் விழா எடுத்தான். ஆனால் அந்தப் பகுதிகளைவிட மட்டக்களப்புப் பகுதியிலேயே கண்ணகிக்கு அதிகமான கோயில்கள் காணப்படுகின்றன. சுருங்கக் கூறின் மட்டக்களப்பின் எல்லாப் கிராமங்களிலும் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. மட்டக்களப்பிற்கும் மலையாளத்திற்கும் உள்ள நெருங்கிய பல தொடர்புகள் காரணமாகவும் இருக்கலாம்.

(உதாரணம்) மலையாளத்தில் காணப்படும் நம்பூதிரிகளின் மாந்திரிகம் மட்டக்களப்பில் காணப்பட்ட பாயோடு ஒட்டும் மந்திரம் வரை வியாபித்தி ருந்தது உண்மை. இன்றும் காணப்படுகின்றது என்பது உண்மை.

எங்கள் கிராமத்திலும் நானறியாக் காலத்திலிருந்து ஒரு கண்ணகி கோயில் இயங்கி வருகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

இவ்வூர் மட்டக்களப்பிற்குத் தெற்கே எல்லையாக அமைந்தி ருக்கின்றது. மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பெரிய நீலாவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கிராமத்திலிருந்து மேற்குத்திசையில் ஒரு மைல் தொலைவில் மட்டக்களப்பு வாவியினாலும் வயல்நிலங்கள் கிராமக் குளங்களாலும் சூழப்பெற்ற மருதம் கொலுவிருக்கும் ஒரு பண்டைய கிராமமாகும்.

இக்கிராமத்தின் வடமேற்குத் திசையில் வடக்கு, மேற்குத் திசைகளில் வாவியாலும் ஏனைய இருபுறங்களிலும் வயல்நிலங்களாலும் சூழப்பெற்று கல்லுமலைமேல் ஏகாந்தமான இடத்தில் புங்கைமரங்களின் நிழலிலே கண்ணகிகோயில் அமையப்பெற்றிருக்கின்றது.

இக் கோயில் பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்றுமுண்டு. அக்காலத்தில் அப்பிரதேசம் காடடர்ந்து காணப்பட்டதாகவும் முனிவர்கள் தவம் செய்து கொண்டு இருந்ததாகவும் இதனால் மக்கள் செல்வதில் லையாம். நீண்டகாலத்தின் பின் ஊரவர்கள் சிலர் அங்கு சென்று பார்த்ததாகவும் அப்பொழுது முனிவர்கள் எவரும் காணப்படவில்லை என்றும் எனினும் மூன்று சிலம்புகளை ஒரு பாம்பு பாதுகாத்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவர்கள் பயந்து அவ்வூரில் மூத்த முருகக் கிழவரையும் அழைத்துக்கொண்டு வந்து மீண்டும் பார்த்த போது பாம்பு ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்றதாகவும் அந்தக் காற்சிலம் புகளில் ஒன்றை அதாவது அகோரமாகத் தோற்றமளித்த சிலம்பை எதிரே உள்ள வாவியில் நான்கு பக்கமாகப் பிரிந்து செல்லும் பள்ளமான இடத்தில் (நாலாற்று விரிச்சல்) வீசிவிட்டு ஏனைய இரண்டு சிலம்பு களையும் வைத்துக் கோயில் கட்டி வழிபட்டு வருவதாகவும் அந்தக் கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சீர்பாத குல வரலாறு**

இக்கிராமத்தில் உள்ளவர்கள் அனைவருமே சீர்பாதகுலத்தைச் சேர்ந்தவர்கள். இது பற்றிய வரலாற்றை அறிந்திருத்தல் அவசியம். அக்காலத்தில் நாம் வாழும் இப்பிரதேசம் கண்டி இராச்சியத்தின் கீழ் இருந்ததாகவும் அம்மன்னனின் உறவினனான வாலசிங்கன் என்பான் சோழநாட்டு இளவரசியாகிய சீர்பாத தேவியையும், அவர்களுக்கு வேண்டியவர்களான கிந்தன், படையன் போன்ற இன்னும் பலரையும் அழைத்துக்கொண்டு பாய்க்கப்பலில் பயணம் செய்து வரும்போது கப்பல் திருக்கோணேச்சர ஆலயத்திற்கு அருகாமையில் அசைவற்று நின்றுவிட்டதாகவும் சுழியோடிகள் நீரின் உள்ளே சென்று பரிசீலனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தபோது விநாயகர் சிலையொன்றைக் கண்டு அதனை எடுத்து வந்து கப்பலில் வைத்தனர். இக்கப்பல் எவ்வித விக்கினங்களுமின்றி ஓடிக் கரை சேருமிடத்தில் இவ்விநாயகரைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டுவதாக அவ்விருவரும் கடவுளை வேண்டினர். கப்பல் எவ்வித தடைகளுமின்றி மட்டக்களப்பு வாவியினூடாக ஓடி வீரமுனை என்ற இடத்தில் கரைதட்டி நின்றது. அங்கே கோயில் ஒன்றை அமைத்து பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்து (சிந்து - கடல்) கடலில் யாத்திரை செய்த பிள்ளையார் என்று கருதப்பட்ட சிந்தாத்திரைப்பிள்ளையார் என்று பெயர் சூட்டி பல ஏக்கர் நிலத்தையும் உவந்தமளித்துத் தங்களோடு வந்த கிந்தன், படையன், காலன், காங்கேயன், முடவன் போன்றோரைக் குடியமர்த்தி அவர்களை வீரமுனை மட்டுமின்றி சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, குறுமண்வெளி, மண்டூர், கரையாக்கன் தீவு ஆகிய இடங்களில் குடியமர்த்தி "மணல்மேடு" (சொறிக்கல்முனைக்குப் பக்கத்தில்) கவடாதீவு (அன்னமலைக்குப் பக்கத்தில்) குளவெளி (துறைநீலாவணை) ஆகிய இடங்களில் 365 ஏக்கர் நிலத்தையும் அரசனுக்கு ஊழியம் செய்ததற்காக வழங்கப்பட்டதாகவும் அதனால் அக்காணி "ஊழியக்காணி" என வழங்கப்பட்டதாகவும் அருள் செல்வநாயகம் என்பவர் தமது 'சீர்பாத வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அக்காணி 88 பேருக்குப் பிரிக்கப்பட்டு 11 பாகைகள் கொண்ட 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொருவர் தலைவர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் காணி முகாமைகள் அல்லது காணி அடப்பன்கள் எனப்படுவர். இவ்வாறு சீர்பாதகுலத்தவர் எல்லோரும் பின்வரும் பதின்மூன்று குடிகளாகப் பிரிக்கப்பட்டனர். அவையாவன,

1. சிந்தாத்திரங் குடி
2. பாட்டுவாளிக் குடி
3. முடவன் குடி
4. படையாண்ட குடி
5. காலதேவன் குடி
6. பொட்டப்பள்ளச்சி குடி
7. செம்பகநாச்சி குடி
8. ஊசாடி குடி
9. வெள்வேலன் குடி
10. வெள்ளாயி குடி
11. நரையாயி குடி
12. வைத்தியடப்பன் குடி
13. பரதேசி குடி

என வகுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முதன்மை இடம் சிந்தாத்திரங்குடியினருக்கும், இரண்டாம் இடம் பாட்டுவாளிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியினருக்கும், மூன்றாமிடம் முடவன் குடியினருக்கும் வழங்கப் பட்டுள்ளமை மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது. ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொருவர் தலைவராக இருப்பார். அவர் குடிமுகாமை அல்லது குடியடப்பன் என அழைக்கப்படுகின்றார்.

### கோயில் நிருவாகம்

கோயிலைப் பரிபாலிப்பதற்காகவும் ஏனைய ஒழுங்குகளைக் கவனிப்பதற்காகவும் ஆண்டுக்கு ஒரு புதிய நிருவாக சபை ஒன்று தெரிவுசெய்யப்படுவது வழமை. இந்த நிருவாக சபையில் சிந்தா த்திரங்குடியைச் சேர்ந்தவர் தலைவராகவும், பாட்டுவாளிக் குடியைச் சேர்ந்தவர் செயலாளராகவும், முடவன் குடியைச் சேர்ந்தவர் பொருளா ளராகவும் இருப்பர். மற்றும் 7பேர், 9பேர் அல்லது 11 பேர் கொண்ட ஒரு சபையும் தெரிவு செய்யப்படும். இந் நிருவாக சபையின் வழிகாட்டலில் காணி அடப்பன்மாரின் ஒத்துழைப்புடன் நிருவாகம் முன்னெடுத்துச் செல்லப்படும். தலைவர் வண்ணக்கர் எனவும், செயலாளர் கணக்குப்பிள்ளை எனவும் அழைக்கப்படுவர்.

கோயில் கதவு எப்பொழுது திறக்கும் என்பதை நிருவாகசபை தீர்மானிக்கும். வைகாசி மாதம் பூரணை இறுதி நாளாக வரத்தக்கதாக ஒரு செவ்வாய் விடியப் புதன்கிழமை திருக்கதவு திறக்கப்படும். திங்கள் இரவு விடியச் செவ்வாய்க்கிழமை திருக்கதவு குளிர்த்தி பாடிய பின்னர் பூட்டப்படும். திருக்கதவு திறக்கும் செய்தி இவ்வூர் அம்பட்டன் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும். அவர் இரவு வேளையில் சந்திக்குச் சந்தி நின்றும் 'குய்' சத்தம் மூலம் மக்களுக்கு கோயில் திறக்கும் தினத்தைக்கூறி மக்களை மச்சம் மாமிசம் தவிர்த்துப் பக்தி சிரத்தையோடு வணங்கும்படி அறிவிப்பார்.

### கோயில் பூசை ஒழுங்குகள்

இக்கிராமத்தவர்களால் இது வைகாசிச் சடங்கு என்றுதான் அழைக்கப்படும். கோயில் பூசைகள் பத்ததி முறையில் செய்யப்படும். பூசைகள் கட்டாடியார் எனப்படும் தலைமைப்பூசாரியால் நடைபெறும். ஊரின் தென் அந்தத்தில் உள்ள தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நாள்தோறும் பூசைப்பொருட்கள் மாட்டு வண்டி மூலம் எடுத்துச் செயல்லப்பட்டு மதியம், இரவுப் பூசைகள் மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் கண்ணகை அம்மன் கோயிலைவிட நாகதம்பிரான், வயிரவர், வதனமார் என்னும் தெய்வங்களுக்கான தனிக் கோயில்களும் உண்டு. பூசைகள் பெரும்பாலும் பொதுப்பூசைகளாகவே நடைபெறு கின்றது. கண்ணகி அம்மன் கோயிலில் பூசை நடைபெற்ற பின்னர் நாகதம்பிரான், வயிரவர், வதனமார் பின்னர் சுற்றிவர சிறுசிறு மேடை களில் காணப்படும் பரிவாரத் தெய்வங்களுக்குப் பூசைகள் நடைபெறும். பூசையின் போது பெண்களின் குரவைச் சத்தங்கள் அதிகமாக ஒலிக்கும்.

### மக்கள் செயற்பாடுகள்

இந் ஏழு நாட்களும் ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். மக்கள் தங்கள் வீடுகளுக்கு வெள்ளையடித்தல், வளவுவேலிகளை அமைத்தல், வளவுகள், தெருக்களைத் துப்பரவு செய்தல் அகிய வேலைகளில் ஈடுபட்டு முடிப்பர். சித்திரை வருடப்பிறப்பு தைப்பொங்கல் போன்று இந்நாட்களிலும் எல்லோரும் புத்தாடைகள் புனைந்து மகிழ்ச்சியாகக் காணப்படுவர். வெளியிடங்களில் வேலைசெய்பவர்கள் லீவு எடுத்துக்கொண்டு வீட்டில் வந்து தங்கி விடுவர். கிராமத்தில் மச்சம் மாமிசம் உண்பது, விற்பது மட்டுமின்றி மீன் பிடித்தலும் தடைசெய்யப்பட்டிருக்கும்.

### கோயிலில் நடைபெறும் நிகழ்வுகள்

01. ஊர்சுற்றுகை
02. கன்னிக்கால் (கலியாணக்கால் வெட்டுதல்)
03. வட்டுக் குற்றுதல்
04. விநாயகப்பானை வைத்தல்
05. திருக்குளிர்த்திப்பாடுதல் ஆகிய முக்கிய நிகழ்வுகள் நடைபெறும்.

### ஊர் சுற்றுகை

திருக்கதவு திறந்து வரும் வெள்ளிக்கிழமை ஊர்மக்களைக் காக்கும் பொருட்டு அம்மாள் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பவனி வருவார். ஊர்மக்கள் தெருவின் இருமருங்கிலும் நிறைகுடம் வைத்து பக்தி, சிரத்தையோடு காத்திருந்து தரிசனம் பெறுவர். கட்டாடியார் கோயில் நிருவாகிகள் மற்றும் மக்கள் பின்தொடரும் பவனி முதலில் சக்தி விநாயகர் ஆலயத்தைத் தரிசித்துப் பின்னர் தில்லையம்பலப் பிள்ளையார், துரைவந்திய மேட்டுப்பிள்ளையார் ஆலயங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியாக மாரியம்மனையும் தரிசித்துவிட்டு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊரைச்சுற்றி வந்து கோயிலை அடையும். கட்டாடியார் (பவனி) ஒவ்வொரு நிறைகும்பம் வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் தரிசித்து நின்று தீர்த்தம், திருநீறு முதலியன வழங்கி ஆசீர்வதிப்பார்.

## கன்னிக்கால் வெட்டுதல்

ஞாயிறு பிற்பகல்வேளை ஓலைப்பெட்டியில் அம்மனின் காற்சிலம்புகளில் ஒன்றை பக்தி சிரத்தையோடு எடுத்துவைக்க அதனை நோன்பிருந்து வழமையாகத் தூக்கிக்கொண்டுவரும் ஒருவர் தலையில் சுமந்துவர ஏகாவடம்பிடிக்க கட்டாடியார் நிருவாகிகள் ஏனைய பிரமுகர்கள் மக்கள் பின்தொடர பவனி பிற்பகல் வேளையில் ஆரம்பமாகும். உடலில் மஞ்சள் பூசிய பக்தர்கள் சிலர் கைகளில் வேப்பிலைப் பத்திரங்களைப் பிடித்துக்கொண்டு தெய்வமாடுவர். சிலர் மண்டைகளை மறுக்குச் செம்புகளால் உடைக்க இரத்தம் வழிந்து அகோரமாகக் காட்சியளிப்பர். இவர்களுக்கு உருவேற்றுவதற்கும் உருவேற்றலை (நிறுத்துவது) கட்டுவதற்கும் சில பூசாரிமார் இதனைப் பரிசோதனைக்களமாகப் பயன்படுத்துவர். இவர்கள் தெய்வமாடு பவர்களுக்கு இடையிடையே சாட்டையடியும் கொடுப்பர். இத்துடன் பவனியின் முன்னர் கோலாட்டம், காவடியாடுதல், தீச்சட்டி ஏந்துதல் ஆகியனவும் இடம்பெறும். சின்னப்பிள்ளையார் கோவில், பெரிய பிள்ளையார் கோயில்களையும் தரிசித்துக் கொண்டு ஏலவே பார்த்து வைத்திருக்கும் இடத்தில் (பூவரசு மரம்) மடைவைத்து பின்னர் கட்டாடியார் மடையை வணங்கிய பின்னர் செவ்வையே வளர்ந்திருக்கும் மரத்தை வெட்டுவார். அவருக்கு மற்றவர் துணைபுரிவர். பின்னர் அதனை மற்றவர்களின் துணையுடன் கோயிலுக்குக் கொண்டுசென்று மண்டபத்தின் ஒருபகுதியில் நட்டு அம்மாளின் வர்ணச் சேலைகளைச் சுற்றிக் கட்டிய பின்னர் தாலிகட்டும் நிகழ்ச்சி நடைபெறும். பவனிவரும் பொழுது மக்கள் தெருவின் இருபக்கங்களிலும் பூரணகும்பம் வைத்து வணங்கி அம்மன் ஆசியைப் பெறுவர்.

## வட்டுக்குற்றுதல்

பெண்கள் வீடுவீடாகச் சென்று மடிகளில் பிச்சையெடுப்பர் (மடிப்பிச்சை எனப்படும்). அது நெல்லாகவே இருக்கும். அதனைக் கோயிலில் படர்ந்த கல்லில் காயவிட்டு கல்லில் காணப்படும் குழியான இடத்தில் நெல்லைப் போட்டு உலக்கைகளினால் குற்றுவர். உலக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நெல்குற்றப் பலத்தபோட்டியிருக்கும். பெண்கள் (கலியாணம் தாமதமானவர்கள். பிள்ளை இல்லாதவர்கள்) எனப் பலத்த போட்டியிருக்கும். இவ்வாறு குற்றினால் இப்படியான பெண்களுக்குக் கைமேல் பலன் கிடைத்திருப்பதையும் கண்ணூடாகக் காண்கின்றோம். கஷ்டம் ஏற்படும் போது கடவுளைத் துணையழைப்பது மக்களின் இயல்பு. சிலநேரங்களில் ஆண்டவனை நினைத்து நேர்த்தி வைத்தலும் உண்டு. அங்கப்பிரதட்சணம் செய்தல், காவடி, பறவைக்காவடி என்பனவற்றோடு தீச்சட்டி ஏந்துதல், கோழிச் சேவல்கள், ஆடு, மாடுகளை உயிருக்கு உயிர கொடுத்தல், சேலைகள், நகைகள் இவைகளைக் காணிக்கையாகத் தருவதாக நேர்த்தி வைத்துக் கோயிலில் கொண்டுவந்து கொடுப்பர்.

**விநாயகப் பானைவைத்தல்**

இக்கோயில் சென்ற ஆண்டு புதுப்பிக்கப்பெற்றுச் சுற்றுமதிலும் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் இறுதி நிகழ்வாக உள்ளவைகளில் முக்கியமானது விநாயகப்பானை வைத்தலே ஆகும். வட்டுக்குற்றி வந்த அரிசியைத் திரைவளைந்து அதனுள்ளே களிமண்ணால் செய்யப்பட்ட மூன்று பானைகளில் கிரியை முறைப்படி பால்பொழிந்து பொங்கல் வைப்பர். விநாயகப்பானை ஏற்றியவுடனேயே ஏனையவர்களும் வெளியில் பொங்கல் பானைகளை வைத்துப் பொங்குவர். பொங்கல் முடிவடைந்தவுடனே பானைகளை உள்ளே தூக்கிச் சென்று படைப்பர்.

அன்று இரவு கோயில் வீதியில் நாடகம், பேச்சு, வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, வசந்தன் ஆட்டம் என்பன நடைபெறும். பிரசங்கங்களும், சங்கீதக் கச்சேரிகளும் இடம்பெறும்.

இறுதி நிகழ்வாக திருக்குளிர்த்தி நடைபெறும். கோயில் கதவு திறந்த நாளில் இருந்து நாள்தோறும் கண்ணகி கோவலன் கதை படிக்கப்படும். அதன் இறுதிக்கட்டமே திருக்குளிர்த்தியாகும்.

வெம்மையைத் தணிப்பது குளிர்மை. எனவே குளிர்த்திபாடி கண்ணகியை மகிழ்விப்பது அல்லது கோபம் தணியவைத்து குளிர்ச்சியடையச் செய்வதே குளிர்த்தியாகும். அதன் பின்னர் திருக்கதவு பூட்டப்படும். 3ம், 8ம் நாட்களிலும் சடங்குகள் உண்டு. ஆனால் மண்டபத்தினுள்ளிருந்தே செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலாட்டும் கோம்பர்களை முகம் நிறைந்த சீதேவியாக வர்ணிக்கும் உழவன் "தாயே பொலி" என்று பூமாதேவியை வாழ்த்துகிறான்

**கமக்காரர்களிடை காணப்படும் கவிதை நயம்**
**(துறைநீலாவணைச் செல்லத்துரை)**

மட்டக்களப்புப் பகுதிகளிலே அனேகமான வயல் நிலங்களுண்டு. இவ் வயல்களில் வேலை செய்யும் மக்கள் தங்களையும் மறந்து, உற்சாக மிகுதியினால் சில பாடல்களைப் பாடிக் கொண்டே தங்கள் வேலைகளைக் கவனிக்கின்றனர். இத்தகைய பாடல்கள் நாட்டுப் பாடல்கள் என வழங்கப்பட்டுவருகின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடையே இப்பாடல்கள் மலிந்து காணப்படுகின்றன. காதல், வீரம்போன்ற பல பிரிவுகளைக்கொண்ட இப்பாடல்கள் கேட்போர் மனதைக் கவரும் இசைநயமும் பொருள் நயமும் கொண்டதாக இருக்கின்றன. இருகாதலர்கள் பெற்றோரால் தடுக்கப்பட்டு பிரிந்து வாழ்கின்றனர். காதலன் மனம் கேட்காது ஒருவாறு காதலியின் வீட்டைத் தேடிப்பிடித்து வந்து அவளுக்கு விளங்கும் வகையில் தனது வரவை உணர்த்துகின்றான். காதலி அவனை உள்ளுக்கு வரும்படி அழைக்கிறாள். அதற்கு அவன்

"சுற்றவரவேலி சுழன்றுவர முள்வேலி
எங்குமொரு வேலி எங்காலே
நான் வரட்டும்"

என்று தன் காதலியிடம் வினவுகிறான். அதற்கு அவள் என்ன சொல்கின்றாள் என்று பார்ப்போம்.

"காவலரணோ கள்ளனுக்கு முள்ளரணோ
வேலியரணோ வேணுமென்ற கள்ளனுக்கு"

என்று கூறி தனது காதலனை அன்பின் நிமித்தமாகக் "கள்ளன்" என்று கூறி இன்புறுகின்றாள் காதலி. இதேபோன்று எத்தனையோ கவிகள் இருக்கின்றன. எனினும் நாங்கள் எடுத்துக்கொண்ட விஷயம் சூடு மிதிக்கும் போது பாடும் பாடல்கள். நெல்லைப் பொலி என்றும் வைக்கோலை பொலிக் கொடியென்றும், மண்வெட்டியை வெட்டுவாயன் என்றும் மாடுகளை வாரிக்காலன்கள் என்றும் ஒருவித குழுஉக்குறியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர். காரணம் ஒருவித மூடநம்பிக்கை என்றுதான் கூறவேண்டும். உள்ளதை உள்ளவாறு பெயர் சொல்லி அழைத்தால் பூதம் வந்து நெல்லைக் கொண்டுபோய்விடும் என்று சிலர் நம்புகின்றனர்.

இனி கிராமியப் பாடல்களைக் கவனிப்போம். சூடு களவட்டிக்குள் இழுத்து விடப்பட்டதும் வாரிக்காலனுகளைக் கொண்டு வந்து பொலிக் கொடிக்கு மேல் ஏற்றுவார்கள். புலவர்கள் நூல் இயற்றும்போது முன்னுக்கு ஏற்புடைக் கடவுளையேனும் வழிபடு கடவுளையேனும் வணங்குவது இயற்கையன்றோ. இவ்வாறே கமக்காரனும் கமத்துக்கு இறைவியாகிய பூமாதேவியைக் காப்பு ரூபத்தில் துதித்து வணங்குகின்றான்.

**"பூமிபொலி பூமாதேவித் தாயே பொலி மண்ணின் களமாம்**
**மாதாவே நிறைகளமாம் பொலி பொலி பொலியே"**

என்று கூறிக்கொண்டே எருமைக் கடாக்களை ஓட்டுகின்றான். ஏழையாகிய எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு மீண்டும்

**"சங்கோ சமுத்திரமோ - நீ**
**தாழ்வுகடல் ஆணிமுத்தோ**
**ஆணிமுத்தோ சங்குமுத்தோ - நீ அலைகடலிற் சிப்பி முத்தோ"**

என்று பூமாதேவியை "ஆணி முத்து" "சங்குமுத்து" "சிப்பி முத்து" என்றெல்லாம் வர்ணிக்கிறான் ஏழைக் கமக்காரன். பூமாதேவிக்கு வணக்கம் செய்த பின்பு குஞ்சர முகத்தையுடைய ஐங்கரக் கடவுளுக்கு வணக்கம்.

**"அறுமுகவா வந்து - நீ**
**அருள்தர வேண்டுமையா"**

என்று பாடுகிறான். யானை முகத்தையுடைய கணபதியே எனக்கு அருள் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றான். சூடு மிதிப்பு நிலாக் காலங்களிலேதான் நடைபெறும். சூடு மிதிக்கும் வாரிக்காலனுகள் களைப்படையாவண்ணம் அவைகளை உற்சாகப்படுத்துவது கமக்காரனின் பிரதான கடமையாகும். இதற்கவன்

**"முன்னங்கால் வெள்ளையப்பா**
**முகம் நிறைந்த சீதெவியார்**
**சீதேவியார் போகுமிடம்**
**செங்கழு நீர் பூப்பூக்கும்"** என்று கூறி, அவைகளைச் சீதேவிக்கும் ஒப்பிட்டு மிக்க அருமையாகக் கூறியுள்ளான் ஒரு நாட்டுப் பாவலன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடு மிதிக்க நிலாக் காலங்களே ஏற்றவைகள் எனக்கூறினேனே? சில நேரங்களில் சந்திரனை மேகங்கள் மறைப்பதுண்டு. அவ்வேளைகளில் ஒளி இன்றிக் கஷ்டப் படவேண்டும். எனவே கமக்காரன் சந்திரனையும் உற்சாகப்படுத்துவதுபோல் பாவனை செய்து பாடுகிறான்.

**பால்போல் நிலவரசே - நீ**
**பகலெல்லாம் எங்கிருந்தாய் நிலவரசே"**

என்று கேட்டுவிட்டு, அவனே

**"மாசி மறைய இருந்தேன் - நான்**
**மழை மேகம் சூழ இருந்தேன்"**

என்று பதிலும் கூறுகிறான். கள்ளமிலாத் தண்மதியை "அரசி" என்று உருவகப் படுத்திக் கூறுகிறான்: இப்படிப் பாட்டுக்கள் பாடி உற்சாகத்துடன் வேலைகளைக் கவனிப்பதால் நேரம் போவதே அவனுக்குத் தெரிவதில்லை. கடாக்களை அதட்டி

**கிழக்கோ வெளிக்குதப்பா**
**கீழ்வானம் மின்னுதப்பா**
**பொழுதோ விடியுதப்பா**
**பொற்கோழி கூவுதப்பா**
**நிலவோ சரியுதப்பா**
**நீலவண்டார் கூவுதப்பா"**

என்று கூறுகின்றான். மாடுகளும் சற்றுவிரைவாக நடந்து தங்கள் வேலையை முடிக்கின்றன. இரவெல்லாம் விளித்த கண் மூடாது கொட்டும் பனியையும் பாராது வேலை செய்த சுமக்காரன் தனது வேலைகளையெல்லாம் இனிது முடிக்கின்றான்.


மட்டக்களப்புப் பகுதிகளில் வழங்கிவரும் இக்கிராமியக் கவிதைகள் எழுத்துருவத்தில் ஏட்டிலோ அன்றிப் புத்தகங்களிலோ இல்லை. பரம்பரை பரம்பரையாக வாய்மூலமாகப் பாவிக்கப்பட்டு வந்துள்ள இக்கவிதைகள் எதிர்காலத்தில் அழிந்தொழிந்து போகா வண்ணம் பாதுகாப்பது தமிழ் பேசும் எங்கள் எல்லோரினதும் கடமையாகும். ஆகவே இப்பாக்களைப் பொறுக்கி அச்சிட்டு வெளிப் படுத்தி எங்கள் பண்டைய மூலதனமாகிய கிராமிய இலக்கியத்தைப் பாதுகாப்போமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவின் நிழல்கள்



மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை
மாணவனாக...



மணமகனாக...



மனைவி, மக்கள், பேரக்குழந்தைகளுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவல் திரு. கதிரேசன் கந்தப்பன் அவர்களுடன்...



மகன் Dr.வாசுதனுடன் இலங்கையில் சுற்றுலா



50வது திருமண நாள்



50வது திருமண நாளின் போது பேரக்குழந்தைகளுடன்... (லண்டனில்)



லண்டனில் சுற்றுலா



மகள்மார் கிருஷ்ணவேணி, Dr.வசந்தி மற்றும் பேரன் தினேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் Dr.சிவதாசன், மருமகள், பேரக்குழந்தைகளுடன் (அவுஸ்திரேலியா)
மைத்துனர் செ.துரையப்பாவின் மட்டக்களப்பு வீட்டில்...



மகள் கிருஷ்ணவேணி, மருமகன் மதிவாணன், மகள் பிரேமராஜனி,
மருமகன் கலைவாணன் மற்றும் பேரக்குழந்தைகளுடன் லண்டனில்...



கனடாவில் மகள் கிருஷ்ணவேணி மற்றும்
மருமகள் லக்ஷ்மி குடும்பத்தினருடன்...



பேரனுடன் லண்டனில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவி, மகன் எந்திரி சபேசன், மருமகள், மகள் பிறேமரஜனி
மற்றும் பேரக்குழந்தைகளுடன்...



மனைவி, மகள் பிறேமரஜனி, மகள் கிருஷ்ணவேணி, மகன் எந்திரி சபேசன் மற்றும்
பேரக்குழந்தைகளுடன் கனடாவில்...



குடும்பத்தினருடன்...



மகள் கிருஷ்ணவேணி குடும்பத்துடன்
லண்டனில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

ஒற்றுமையே பலம், 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'ப் போன்ற முதியோர் கூற்றுகள் நமக்கு பல உண்மைகளைச் சொல்கின்றன. சின்ன வகுப்புகளில் படித்த கதைகளில் ஒன்றை நினைவு படுத்திப் பார்ப்போம். ஒரு தந்தை நான்கு பிள்ளைகள். இவர்கள் சதா சண்டை பிடித்துக் கொண்டிருப்பார்கள். தந்தை இதனால் பல சங்கடங்கள் ஏற்பட்டன. திடீரென ஒரு நாள் ஒரு விறகுக்கடைக்கு கொண்டு வந்து போட்டு அவர்கள் நால்வரையும் அழைத்து விறகுக்கட்டை முறிக்கும்படி கூறினார். அவர்கள் எல்லோரும் சேர்ந்து விறகுக்கட்டை முறிக்கப் பார்த்தனர். முடியாது போகவே தந்தை அந்த விறகு கட்டை அவிழ்த்துத் தனித் தனியே முறிக்கும்படி கேட்டார். அவர்கள் தனித்தனி விறகுகளை இலகுவில் ஒடித்தனர். இதனை வைத்து தந்தை பிள்ளைகளைப் பார்த்துக் கூறினார். நீங்கள் சேர்ந்து விறகுக்கட்டை ஒடிக்க முடியாதது போல் நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் பகைவர்களால் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே நீங்கள் ஒற்றுமையாக இருங்கள் என்று உபதேசம் செய்தார்.

ஆகவேதான் ஒற்றுமை சகோதரர்களுக்கு மட்டுமல்ல, நமது நாட்டுக்கும் மிக முக்கியம், பலசமயம், பல இனம் கொண்ட நமது நாட்டுக்கு மிக அவசியம், வேற்றுமையிலும் ஒற்றுமை காணவேண்டும். எமது அயலவர்கள் வேறு இனம் வேறுமொழிபேசுபவர்களாக இருந்தும் அவர்களை அனுசரித்து நடந்து கொள்ளல் அவசியம். ஒற்றுமை தானாக வருவதில்லை. நாம் அதனை வளர்த்தெடுக்கவேண்டும். முதற்கண் குடும்பத்தார் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அடுத்தவர் அயலவர் ஒற்றுமையாக இருக்கவேண்டும். பின்னர் நாட்டு மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு. இது ஒரு முதுமொழி, ஒற்றுமையால் உயர்வடையலாம். ஒற்றுமை இன்றேல் அனைவரும் தாழ்ச்சியடைவர். வீட்டுக்கும் சரி, நாட்டுக்கும் சரி, ஒற்றுமை அவசியம் என்பதை உணர்ந்து அதனை வளர்ப்பதற்கும், அதன்படி நடப்பதற்கும் பழகிக் கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையர் தினம்

தாயோடு அறுசுவைபோம், தந்தையொடு கல்விபோம். ஈன்று வளர்த்து எம்மை வளர்த்து ஆளாக்கியது எமது தாயே. இந்தத்தாய் எமது கண்கண்ட தெய்வம். அதனாலேயே ஆன்றோர் அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்றார்கள்.

தமிழர்கள் பெண்ணைத் தெய்வமாகக் கண்டவர்கள். பெண்களுக்கு அவர்கள் வாழ்வில் முக்கிய இடத்தைக் கொடுத்தார்கள். இனவிருத்தி என்பது பெண்ணின் வரப்பிரசாதம். பெண்மை என்பது இனவிருத்தியின் அடையாளம். பெண் இன்றேல் உலகம் இல்லை. பெண்மையின் முக்கியத்துவத்தை இதன் மூலம் அறியலாம்.

அன்னையருக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு வருடத்தில் ஒரு நாள் அன்னையர்தினமாக உலகநாடுகள் பிரகடனப் படுத்தியுள்ளன. எனவே நாடெங்கிலும் அன்னையர் தினத்தைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

கொண்டாட்டத்தோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. அவர்களை நாங்கள் ஆதரவு கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். நாங்கள் சின்னவர்களாக இருந்த நேரம் அவர்கள் எங்களை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள். நாங்கள் உணர்ந்து நடப்பது மிகமிக அவசியம்.

அன்னையர் முதுமை அடையும் பொழுது தங்கள் பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுவதைப் பார்க்கிறோம். பெற்றோரை மலசல கூடத்திலும், நாய்க்கூட்டிலும் அடைத்து வைத்திருக்கும் பிள்ளைகளையும் கண்கூடாகப் பார்க்கின்றோம். இதுதான் நாம் பெற்றுவளர்த்த அன்னையருக்குச் செய்யும் கடமையா?

அன்னையர் தினம் பெண் உரிமைத்தினம். பெண்களுக்கு வீட்டிலும், நாட்டிலும் உரிய பங்கு உரிமையளிக்கவேண்டும். உரிய மரியாதையும் கண்ணியமும் வழங்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நாடும் முன்னேறும்; நாங்களும் முன்னேறலாம். அன்னையர் தினத்துக்கும் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இந்நூலை ஆக்கி வெளியிடுவதற்குப்
பல்வேறு வகையிலும் உறுதுணையாக இருந்த
செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
அவர்களுக்கும், பேராசிரியர் சி.மௌனகுரு
அவர்களுக்கும் திரு.ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்
அவர்களுக்கும் வணசிங்க பிரிண்டர்ஸ்
நிர்வாகத்தினருக்கும், மேலும் இம்மலர் நூலுருப்
பெறுவதற்கு முன்னின்று அயராது உழைத்த
எங்கள் அன்பு மாமா திரு.செல்லையா துரையப்பா
(யோகா சிகிச்சை நிபுணர்) அவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

***இப்படிக்கு***
***- திருமதி. கிருஸ்ணவேணி மதிவாணன்-***
***(மகள்)***

# 4, Station Parade - Brigton Road,
Suttun, Surrey, SM 25AD,
United Kingdom.
Tel : 004 47835175499




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் கூறும் பாவலர் பற்றி...



ஆர்வமும், திறமையும் இணைந்திருந்தால் வளமும், வாழ்வும் நம் கையில்! எளிமையான, ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தன் ஊக்கத்தாலும், முயற்சியாலும் சிகரம் தொட்ட மனிதராக காலஞ்சென்ற கதிரேசன் செல்லத்துரை ஐயா அவர்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு விடலாம். மட்டக்களப்பின் தென் எல்லைக் கிராமமான பின் தங்கியிருந்த துறை நீலாவணையில் பிறந்து, அங்குள்ள பாடசாலை களில் தன் அறிவுப்பசிக்குத் தீனி போட்டு, ஊரி லேயே முதல் முறையாக புலமைப்பிரிசில் வென்று, அது மாளாது என்று வாய்ப்பைப் பயன்படுத்தி, காத்தான்குடி மகா வித்தியாலயத்தில் ஆங்கில அறிவை விருத்தி செய்து, பயிற்றப்பட்ட ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகத் தன்னைப் பின்னாட்களில் உயர்த்திக் கொண்டார். அவர் பிறந்த மண்ணை நேசித்தார், கல்வியை நேசித்தார், தமிழை நேசித்தார், தன் தொழிலை நேசித்தார், எல்லாவற்றிலும் மேலாகத் தன் குடும்பத்தை அணுவணுவாக நேசித்தார். தன் ஆற்றலைப் பயன்படுத்தி தன் மண்ணை, தன் தமிழை அழகு பண்ணியவர் அவர். முதலிடம் தேடாமல், முன்னிடம் நாடாமல், கொக்கரிக்கும் கோழி போன்று அமையாது, அமைதியாகத் தன் வழியில் பயணம் செய்தவர். அந்த வழியில் பலரையும் அறிவில் வாழ வைத்தார், வாழ்வில் உயர வைத்தார். இன்றும் பல ஏழை மாணவர்க்குத் தன் சந்ததி வழியாக கல்விக்கு வழி கோலிக் கொண்டிருக்கின்றார்.

புகழ் நாடாத அவரது எளிமையான போக்கு இன்றும் அவருக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருப்பதற்கு இந்த ஓராண்டு நினைவு மலரொன்றே போதுமான சான்றாக அமைகிறது. மறைந்தும் மறையாதவராக, எம் நினைவுகளில் தூவப்பட்ட விதையாக மறைந்த ஆசான் கதிரேசன் செல்லத்துரை ஐயா புகழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி!

**- ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம்**

வணசிங்கா பிரிண்டர்ஸ், 496A, திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 2227170, 065 3650361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org